சுவடி : 39
ஏடு : 10
ஏப்பிரல் 2016
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
**தி.துரை சித்தார்த்தன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.
தொடர்புக்கு :
94448 04980
72994 41712
044-2625 2119
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# மேதை அம்பேத்கர், மார்டின் லூதர் கிங்குக்கு ஒப்பாவார் பட்டியல் வகுப்பு-பின்தங்கிய வகுப்பு இடஒதுக்கீடு கைவிடப்படாது பெண்களுக்கு உரிமை வழங்கும் சட்டத்தை நிறைவேற்ற நேரு அரசு மறுத்ததால்தான், அம்பேத்கர் பதவி விலகினார்: இந்தியப் பிரதமர் மோடி அம்பலத்துக்கு வருகிறார்!



மேதை அம்பேத்கரின் 126ஆம் பிறந்த நாள் விழா, 2016 ஏப்பிரல் 14 அன்றுதான் வரும்.

ஆனால், 2016 ஏப்ரல்-மே திங்களில் தமிழ்நாடு, கேரளம், அசாம், மேற்குவங்கம், புதுச்சேரி முதலான மாநிலங்களில் சட்டமன்றங்களுக்குத் தேர்தல் நடைபெறப் போகிறது.

வி.பி. சிங் அவர்கள் மண்டல் குழு பரிந்துரையை 6-8-1990இல் நடைமுறைப்படுத்தினார்; மத்திய அரசு, பொதுத்துறை நிறுவன வேலைகளில் மட்டும் 27 விழுக்காடு ஒதுக்கீட்டை முதன்முதலாக அவர் அளித்தார்.

அதை முழு மூச்சாக எதிர்த்து, அயோத்தியை நோக்கி "ராமரதயாத்திரை" சென்றவர், லால் கிஷன் அத்வானி. அவரைத் தடுத்து நிறுத்தியவர், பீகாரில் அன்று முதலமைச்சராக விளங்கிய-லோகியாவாதியான லல்லு பிரசாத் யாதவ்,

2015 இறுதியில் பீகார் மாநிலச் சட்டமன்றத் தேர்தல் நடந்தது. 2010 முதல் எதிரும் புதிருமாக இருந்த லோகியாவாதிகளான முதலமைச்சர் நிதீஷ்குமாரும், லாலு பிரசாத் யாதவும் கட்டிப்பிடித்துக் கொண்டு கட்டுக்கோப்பாகத் தேர்தல் பணியாற்றினர்.

நாம் - மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் 1978 செப்டம்பர் - அக்டோபரிலும், 1981 அக்டோபரிலும். 1987லும் ராம் அவதேஷ் சிங்குடன் இணைந்து, பீகார் மாநிலம் முழுவதிலும் பரப்புரை செய்து, 1978இல் வேலையிலும், 1981இல் கல்வியிலும், 20 விழுக்காடு ஒதுக்கீட்டை பீகார் பிற்படுத்தப்பட்டோருக்கு முதன்முதலாகப் பெற்றுத் தந்தோம் - கர்ப்பூரி தாக்கூர் ஆட்சியில். அன்று ஆழமாகக் கால்கொண்டது, பீகாரில் வகுப்புரிமைக் கொள்கை.

இவற்றை அறியாமல், 2015 தேர்தலின்போது, ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகத் "இடஒதுக்கீட்டை ஒழித்தே தீருவோம்" என, பீகாரில் பேசினார்.

அதனை எதிர்த்து சூறாவளி விசையில் நிதிஷ்குமாரும், லாலுபிரசாதும் ஒன்றுபட்டு நின்று பணியாற்றி, பீகாரில் பாரதிய சனதா தலைமையிலான அணியை மண் கவ்வச் செய்தனர்.

சுடு பாலில் வாயை வைத்த பூனை போல - பீகாரில் உதை வாங்கிய பிரதமர் நரேந்திர மோடி, 21-3-2016 திங்கட்கிழமை, பாபா சாகிப் அம்பேத்கருக்கு, அவர் மறைந்த 60ஆம் ஆண்டில், நினைவிடம் அமைக்க அடிக்கல் நாட்டும் விழாவில், பின்வருமாறு முழங்கினார் :

"....... இடஒதுக்கீட்டுக் கொள்கையில் எந்த மாற்றமும் செய்யப்படாது என்பதை உறுதியாகச் சொல்லுகிறேன். இடஒதுக்கீடு என்பது தலித் உள்ளிட்ட -



சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களின் உரிமை. அதை யாரும் பறிக்க முடியாது. நான் ஏற்கெனவே கூறியதுபோல, அம்பேத்கரே மீண்டும் தோன்றினாலும் இடஒதுக் கீட்டைப் பறிக்க முடியாது.''

“முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு தலைமையிலான அமைச்சரவையில் சட்ட அமைச்சராக இருந்த அம்பேத்கர் திடீரென விலகினார். ஏன் தெரியுமா? பெண்களுக்குச் சமஉரிமை வழங்குவது தொடர்பாகப் பிரச்சனை எழுந்தது. அப்போது பெண்களுக்குச் சமஉரிமை கிடைக்காவிட்டால், நான் அமைச்சரவையில் நீடிக்க மாட்டேன் என்று கூறி விலகினார். இந்த வரலாறு மறக்கப்பட்டது...

...அவர் அனைத்துச் சமூகத்திலும் பின்தங்கியவர்களின் நலனுக்காகப் பாடுபட்டார். கருப்பினத்தவர்களுக்காகப் போராடிய மார்ட்டின் லூதர் கிங் போல, சர்வதேசத் தலைவராக விளங்கினார், அம்பேத்கர்.'' (“தி இந்து'', தமிழ் - 22.3.2016, பக்கம் 1).

**இதே செய்தி, “The Hindu” 22.3.2016 நாளிட்ட ஆங்கில இதழில், வேறு விவரங்களையும் கொண்டிருக்கிறது.**

அது, பின்வருமாறு உள்ளது. “... He compared Ambedkar to American Civil rights icon Martin Luther King and said it would be an injustice to keep his personality limited to the cause of Dalits.''

“He said Dr. Ambedkar resigned as Law Minister from Jawaharlal Nehru's Cabinet owing to the lack of backing on the Hindu Code Bill which was a progressive move to codify and reform **Hindu personal law in India...**'' (The Hindu, 22-3-2016, Page 1).

தமிழ்நாட்டிலுள்ள திராவிட இயக்க-தமிழியக்க-பெரியாரியக்க-அம்பேத்கரியக்கத் தோழர்களும், பொது மக்களும் மோகன் பகத், நரேந்திர மோடி போன்ற இந்து மதக்காப்பாளர்கள் இடஒதுக்கீடு பற்றிச் சொல்லுவதை எதற்காகவும் நம்பக்கூடாது. ஏன்?

இவர்கள் 17 விழுக்காடாக உள்ள பட்டியல் வகுப்பினர், 8 விழுக்காடாக உள்ள பழங்குடியினர், 57 விழுக்காடாக உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆக - 82 விழுக்காடாக உள்ள ஒடுக்கப்பட்ட வகுப்புகளின் வாக்குகளைக் குறிவைத்து அவ்வப்போது இப்படி உளறித் தொலைக்கிறார்கள்.

இடஒதுக்கீடு கொள்கைக்குத் தாயகமாக விளங்கியவை சென்னை மாகாண அரசும், தமிழக அரசும். கொல்லன் தெருவுக்கு ஒப்பாக இப்படி இருக்கிற தமிழ்நாட்டில், இப்படி ஊசி விற்கவருகிற பகல் திருடர்களை நம்பாதீர்கள்! இடஒதுக்கீடு வந்த வரலாறு என்ன?

1. சென்னை மாகாணத்தில் மட்டும் இந்து பார்ப்பனர் அல்லாதார் - ஆதித்திராவிடர் தனித்தனியாக இடஒதுக்கீடு பெற்ற நாள் 4-11-1927.
2. சென்னை மாகாண எல்லைக்குள் மட்டும் இருந்த மத்திய அரசு அலுவலகங்களில், வேலையில், இந்து பார்ப்பனரல்லாதார் - ஆதித்திராவிடர் தனித்தனியாக இடஒதுக்கீடு தரப்பட்டது 1936. இவை நீதிக்கட்சியின் சாதனைகள்.
3. சென்னை மாகாணத்தில் மட்டும் பிற்படுத்தப்பட்ட இந்துக்களுக்கு இடஒதுக்கீடு தரப்பட்ட நாள் 1947, நவம்பர். (காங்கிரஸ்)
4. அனைத்திந்திய அளவில், மத்திய அரசு வேலையில் மட்டும் டாக்டர் அம்பேத்கர் பட்டியல் வகுப்பினர்க்குத் தனி இடஒதுக்கீடு பெற்ற நாள் 11-8-1943.
5. தமிழ்நாட்டில் எல்லா மதங்களிலுமுள்ள பிற்படுத்தப்பட்டோருக்கு 25 விழுக்காடு இடஒதுக்கீடு வந்தது 1954இல். (காங்கிரசு)
6. எல்லா மதங்களிலும் உள்ள பிற்படுத்தப்பட்டோருக்கு 31 விழுக்காடு இடஒதுக்கீடுதரப்பட்ட நாள் 1971. (திமுக)

7. தமிழ்நாட்டில், எல்லா மதங்களிலுமுள்ள பிற்படுத் தப்பட்டோருக்கு, 1979இல் 60 விழுக்காடு இடஒதுக் கீடு கோரி, 50 விழுக்காடு பெற்ற நாள் 1-2-1980. (மா.பெ.பொ.க.)

8. வடஇந்தியாவில், நாம் முயன்று, முதன்முதலாக, பீகாரில், பிற்படுத்தப்பட்டோருக்குத் தனி இடஒதுக்கீடு பெற்ற நாள் 10-11-1978. (மா.பெ.பொ.க.)

9. தமிழ்நாட்டில் மிகப் பிற்பட்டோருக்கு 20 விழுக்காடு தனி இடஒதுக்கீடு பெற்ற நாள் 1989. (பா.ம.க.)

இந்தப் புள்ளிவிவரங்களில் எதுவும் பிரதமர் மோடி அவர்களுக்கும், பாரதிய சனதாவினருக்கும், காங்கிரசு தேசியவாதிகளுக்கும், பொதுவுடைமைக்காரர்களுக்கும் தெரியாது.

**எந்த ஒரு வாக்குவேட்டைக் கட்சிக்காரரும் இந்த இடஒதுக்கீடுகள் வந்து சேர, யாரெல்லாம் உழைத்தார் கள் என்கிற உண்மையை உணருகிற தன்மையிலான வரலாறு நேர்மையாக எழுதப்படவோ, சொல்லப்படவோ இல்லை.**

எனவே பிரதமர் நரேந்திர மோடி - பட்டியல் வகுப்பினர் இடஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக் கீடு இவற்றை அப்படியே காப்பாற்றப் போவதாகக் கூறுவது ஒரு ஏமாற்று. ஏன்?

1. இடஒதுக்கீடு - தென்னாட்டில் 1927 முதலும், இந்திய அளவில் 1943 முதலும் பட்டியல் வகுப்பினருக்குத் தரப்பட்டும், 2016இலும் அவர்களுக்கு முதல்நிலைப் பதவிகளில் விகிதாசாரப் பங்கீடான 17 விழுக்காடு வரவில்லையே, ஏன்?

2. அரசமைப்பு விதி 15(4), 16(4) இவற்றின்படி, பிற்படுத்தப்பட்டோருக்கு விகிதாசாரப்படி 2016 வரை 57 விழுக்காடு தரப்படவில்லையே, ஏன்?

3. 1947இல் இந்துச் சட்டத்திருத்த மசோதாவை முன் மொழிந்த டாக்டர் அம்பேத்கர், பிரிவு 4 (Section 4)இல் முன்மொழிந்த படி - Personal Law என்கிற இந்துச் சட்டத்திலுள்ள பழக்கச் சட்டம், வழக்கச் சட்டம் என்பவற்றுக்கான ஆதாரங்களான - மனு ஸ்மிருதி, பராசர ஸ்மிருதி, யக்ஞவல்கிய ஸ்மிருதி இவை செல்லுபடியாகமாட்டா என்று திருத்தச் சொல்லிக் கோரியதை - காங்கிரசின் நேரு, இந்திரா, இராஜீவ் அரசுகள் நிறைவேற்றவில்லை. இதுவே உண்மை.

அம்பேத்கர் முன்மொழிந்த பெண்ணுரிமை வழங்கும் எல்லாச் சட்டங்களும் நேருவினாலும், இராஜீவ்காந்தியாலும், தி.மு.க.வினாலும், அ.தி.மு.க.வினாலும் 1955 முதல் 1989, 2016களிலும் நிறைவேற்றப்பட்டுவிட்டன.

இதைச் சுட்டிக்காட்டி ஏமாற்ற விரும்பும் மோடி அவர்களை எல்லாக் குடிமக்களும் கேளுங்கள் :

**மேதை அம்பேத்கர் 1947இல் முன்மொழிந்த படியும், பெரியார் ஈ.வெ.ரா. 26-11-1957இல் கோரிய படியும் - இந்து வழக்கச் சட்டம், இந்து பழக்கச் சட்டம், நால் வருணக்காப்புச் சட்டங்கள் இவற்றை, மோடி எப்போது நீக்கப் போகிறார்?**

**இவை நீக்கப்படாதவரையில் பிரதமராக உள்ள நரேந்திர தாமோதரதாஸ் மோடி ஒரு சூத்திரரே! இந்தியா ண்விலுள்ள 106 கோடி பார்ப்பனரல்லாத இந்துக்களும் சூத்திரர்களே!**

**01.04.2016** **- வே. ஆனைமுத்து**

## சீர்காழி தோழியர் அழகு அன்பழகனின் தாயார் தி. சீத்தாலெட்சுமி மறைவு

சீர்காழி மா. முத்துச்சாமி அவர்களின் சம்பந்தியும், நாகை மாவட்டச் செயலர் தோழர் முத்து அன்பழகனின் மாமியாரும், பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மையார் அறக்கட்டளையின் அறங்காவலர் குழு உறுப்பினர் தோழியர் அழகு அன்பழகன் அவர்களின் தாயாருமாகிய தி. சீத்தாலெட்சுமி அவர்கள் 09.03.2016 புதன்கிழமை மதியம் 2 மணியளவில் சென்னை பட்டாபிராம் தமது இல்லத்தில் இயற்கை எய்தினார்.

அன்னாரின் உடல் திருமுல்லைவாயில் மின் மயானத்தில் 10.03.2016, வியாழக்கிழமை 1.30 மணி யளவில் எரியூட்டப்பட்டது. உறவினர்கள் நண்பர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அன்னையாரை இழந்து துயருறும் அழகு அன்பழகன், அவருடைய இளவல் தங்கமுத்து மற்றும் குடும்ப உறுப்பி னர்கள், முத்து அன்பழகன் குடும்பத்தினர் ஆகியோர்க்கு ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் மா.பெ.பொ.க. சார்பிலும், பெரியார்-நாகம்மை அறக்கட்டளை சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## பூ. மாணிக்கம் மறைவு

சேலம் மாவட்டம், உடையாப்பட்டி ஊராட்சி முன்னாள் துணைத் தலைவரும், தி.மு.க. அவைத் தலைவரும், பெரியார் தொண்டரும், மூத்த வழக்குரைஞரும் மா. கவுதமபூபாலன், (திராவிடர் கழக மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்) அவர்களின் தந்தையுமான பூ. மாணிக்கம் 17.03.2016 அன்று தனது 84ஆம் வயதில் மறை வுற்றார். அவரது மறைவிற்கு மா.பெ.பொ.க. தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

# பள்ளர் சாதி கணவர் சங்கர் பதைக்கப் பதைக்க வெட்டிக் கொல்லப்பட்டார் முக்குலத்தோர் சாதி துணைவியும் தாக்கப்பட்டார்!

- வே. ஆனைமுத்து

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டைப் பகுதி சுயமரியாதை இயக்கத்தின் கோட்டையாக ஒரு கட்டத்தில் விளங்கியது.

அப்பகுதியில் தீண்டப்படாதாராக நடத்தப்பட்ட பள்ளர், பறையர், அருந்ததியர் என்கிற சக்கிலியர் ஆகியோரில் பெரும்பாலோருக்குச் சொந்தமாக வேளாண்மை செய்வதற்கான நிலம் இல்லை.

அச்சாதிகளைச் சார்ந்த மக்கள் பண்ணையாள்களாகவும், படியாள்களாகவும், அற்றைக் கூலிக்காரர்களாகவும் கொங்கு வேளாளக் கவுண்டர், முக்குலத்தோர், முதலியார், வன்னியர், யாதவர் ஆகியோரின் நிலங்களில் கூலிக்கு வேலை செய்துதான், காலங்காலமாக வயிறு கழுவினர்.

அவர்கள் அப்படியே இருப்பது எதனால் - யாரால் - எப்போது முதல் என எவருமே சிந்திக்க வேண்டாமா?

தமிழகத்தில் பல்லவர், பிற்காலச் சோழர் ஆட்சிக் காலம் முதற்கொண்டு, தீண்டப்படாதார் - ஊருக்கு வெளியே - தனிமையாகக் குடிவைக்கப்பட்டனர்.

குடியானவர்கள் என்கிற மேல் சாதி இந்துக்கள் புழங்குகிற எந்தப் பொது இடத்திலும் தீண்டப்படாதார் புழங்கக் கூடாது என்பது அரசின் - அரசனின் கட்டளை.

இன்று அரசன் இல்லை; அரசுகள் இருக்கின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், தேர்ச்சி மூலம் அரசு அதிகாரப் பதவி பெற்ற படித்தவர்கள் எல்லோரும் இருக்கிறார்கள்.






இவர்கள் பல கட்சிகளையும் கொள்கைகளையும் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சூழலில்தான் - 22 அகவை உள்ள பள்ளர் சாதியைச் சார்ந்த சங்கர், 19 அகவை உள்ள கௌசல்யா என்கிற முக்குலத்தோர் சாதிப் பெண்ணை 8 மதங்களுக்குமுன், பழநியில் பிள்ளையார் கோவிலில், நண்பர்கள் முன்னிலையில் திருமணம் செய்து கொண்டதை இந்தச் சமூகம் ஏற்க மறுக்கிறது.

பெண் வீட்டார் அச்சுறுத்தியதைச் சுட்டிக்காட்டி, உடுமலைப்பேட்டை மகளிர் காவல் நிலையத்தில் சங்கரும்-கௌசல்யாவும் முறையிட்டனர். காவல்துறையினர் பேசிய சமரசத்தைப் பெண்வீட்டார் ஏற்கவில்லை.

**உடனே காவல் துறையினரும், வட்டாட்சியரும், கோட்டாட்சியரும்-பெண்ணின் பெற்றோரை எச்சரித்து அவர்களை நேரில் அழைத்து, எழுத்து மூலம் கட்டுப்படுத்தி (Binding) முச்சலிக்கா ஒன்றைப் பதிவு செய்திருக்க வேண்டும்;** இவ்வாழ் விணையர் சொந்த வீட்டில் அமைதியாக வாழ, ஓரிரு காவலர்களை குமரலிங்கத்தில் இரவு பகல் காவல் காக்க



*தாழ்த்தப்பட்டோர் தேசிய ஆணையத்தின் அதிகாரியுடன் சங்கரின் தந்தை கோவிந்தசாமியும் சங்கரின் தம்பியும்*



ஏற்பாடு செய்திருக்க வேண்டும். இது நடக்காமற் போனதுதான் இக்கொலைக்கு முதலாவது காரணம் ஆகும்.

தன் கணவர் தனியார் துறையில் வேலையில் சேரப் போகிறார் என்கிற மகிழ்ச்சியில், புதிய ஆடைகளை வாங்கிட உடுமலைப்பேட்டை கடைக்கு வந்து, ஆடைகளை வாங்கிக் கொள்ளப் போவதைத் தன் தாயாருக்கு மகிழ்ச்சியுடன் கௌசல்யா தொலைப்பேசியில் கூறி யுள்ளார்.

உடனே பல நாள்களாக சுற்றிச் சுற்றிப் புலன் அறிந்த கௌசல்யாவின் தந்தை சின்னச்சாமி, கொலை செய்வ தற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டுத் தலைமறைவானார்.

13-3-2016 ஞாயிறு பகல் 2.15 மணிக்கு உடுமலை நெடுஞ்சாலையில் சங்கர் பதைக்கப் பதைக்க வெட்டிக் கொல்லப்பட்டார். கௌசல்யாவுக்கும் தலையிலும் கைகளிலும் வெட்டு விழுந்தது.

இவை அனைத்தும் அங்கிருந்த வீடியோவில் பதிவாகி உள்ளன. எனவே கொலைக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**திருமண வயது வந்த ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தாங்களே விரும்பித் திருமணம் செய்துகொண்ட பிறகு - அதைத் தடுக்கவும், குலைக்கவும் எவருக்கும் உரிமை இல்லை; பெற்றோர் இருதரப்பினருக்கும் அதில் உரிமை இல்லை.**

எந்த ஓர் உள்சாதிப் பெண்ணும், எந்த வேறு உள்சாதி ஆணையும் மணக்கக் கூடாது என்கிற சட்டத்தடை, 1946இல் நீக்கப்பட்டுவிட்டது. இதை நாம் அனைவர்க்கும் சொல்ல வேண்டும். ❖



*சங்கரை வெட்டிச் சாய்த்துவிட்டு மோட்டர் பைக்கில் தப்பிச்செல்லும் கொலையாளிகள்*

## மயிரைப்புடிச்சி கள்ளை ஊத்தி, மடியைப் புடிச்சி காசு வாங்குடா
## சொத்தை வைச்சு உழுகருவி வாங்கினவனை உதைச்சி கடனைக் கைப்பத்துடா
## மாடி வீட்டுக்காரனையும் மகிழுந்திலே போறவனையும்கும்பிட்டு வெளியேத்துடா
## இதுதான் ஆட்சி! இதுதான் காவல்துறை! இதுதான் நீதி!

1940களில் 10 மைல் தொலைவுக்கு ஓர் இடத்தில் கள்ளுக்கடை - சாராயக்கடை இருக்கும்.

வழியே போகிறவனைக் கூப்பிட்டுப் புளிச்ச கள்ளை ஊத்துவான். கள்ளைக் குடித்தவன் மயங்கிக் கிடப்பான்; அவன் மடியில் இருக்கிற காசை கடைக் காரன் திருடிக் கொள்ளுவான்.

இது நான் நேரில் பார்த்த நிகழ்ச்சி.

மகிழுந்து உற்பத்தி, சரக்கு உந்து உற்பத்தி, உழுகருவி உற்பத்திச் சாலைகள் தமிழ்நாட்டில்தான் அதிகம். அதிலும் “ஏரிமாவட்டம்” என்று பெயர் பெற்ற காஞ்சி மாவட்டம், திருப்பெரும்புதூரைச் சுற்றிலும் இவை மிக மிக அதிகம்.

காவிரிப் பாசனப் பகுதியான பழைய தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் இப்படிப்பட்ட தொழிற்சாலை கள் குறைவு.

இப்படி உற்பத்தி செய்கிறவர்கள், நாள் ஏடுகளிலும் தெலைக்காட்சியிலும் பெரிய அளவில் “தவணையில் வாங்க வாருங்கள்” என்று விளம்பரங்களைச் செய் கிறார்கள்.

நல்ல மாதச் சம்பளக்காரர்கள், மருத்துவர்கள், வணிகர்கள், மகிழுந்துகளைத் தவணைக்கடனுக்கு வாங்குகிறார்கள். நடுத்தர வேளாண்மைக்காரர்கள் டிராக்டர்களை வாங்குகிறார்கள்.

அம்மாவட்டங்களில் சிறு, குறு வேளாண்மைக் காரர்களாக உள்ள - நிலமற்ற வேளாண் கூலிகளாக உள்ள பிற்படுத்தப்பட்டோரும், மிகப் பிற்படுத்தப்பட் டோரும், தாழ்த்தப்பட்டோரும் 80 விழுக்காடு பேர்கள்.

இவர்கள் நாற்று விடுவதில் தொடங்கி, உரம் வாங்குவது, செய்கூலிக்குக் கடன் வாங்குவது எல்லாம் - தனியாரிடம் பணமாக - 100க்கு மாதம் 3 ரூபா வட்டிக்குத்தான்.

நெல் மகசூல் நன்றாக இருந்தால் - காலாகாலத் தில் கரும்பு வெட்டப்பட்டு, உரிய காலத்தில் ஆலைக் காரன் பணம் கொடுத்தால் கடனுக்கு முதலுக்கும் வட்டிக்கும் போக, வீட்டுக்கு ஆறுமாதச் சோற்றுக்கு நெல் கிடைக்கும்.

கம்பு, சோளம், வரகு, கடலை, கொத்துமல்லிக்குப் பெயர் போன பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் 2000க்குப் பிறகு, மக்காச்சோளம் மட்டுமே விளைகிறது.




என் குடும்பத்துக்கு உள்ள 12 ஏக்கரிலும் இன்று மக்காச்சோளம் மட்டுமே பயிர். ஆசைக்குத் தின்ன, பச்சை நிலக்கடலைகூட, எங்கள் ஊரில் 2016இல் இல்லை.

ஏன்?

காலாகாலத்தில் மழை இல்லை. கடன் கொடுக்க வேண்டியவர்கள் கூட்டுறவு வேளாண் வங்கிக்காரர் கள், தமிழ்நாட்டு வேளாண் கூட்டுறவு வங்கிகள் “கூடிக்கொள்ளை அடிக்கும் கூட்டுறவுகளாக” 1980 களுக்குப் பிறகு மாறிவிட்டன.

எனவே, வேளாண்மைக்குத் தனியாரிடம் கடன் பட்டவர்கள் - ஒன்று சொத்தை விற்க வேண்டும்; அல்லது மஞ்சள் கடுதாசி (Insolvency) கொடுத்துவிட்டுக் கடனை ஏமாற்றிவிட்டுக் சிவில் சிறைக்குப் (Civil Jail) போகவேண்டும்.

கடன்பட்ட வேளாண்மைக்காரனையோ, கடைக் காரனையோ நீதிமன்றத்தில் நிறுத்தி, சிவில் தண்டனை வழங்கச் சொல்லி, சிவில் சிறைக்குத்தான் அனுப்ப வேண்டும்.

வெள்ளைக்காரனின் கொடுங்கோல் ஆட்சிக் காலத்தில்கூட, கடன்பட்டவர்களைக் காவல் துறையினர் தொடமாட்டார்கள்; கடன் கொடுத்தவர்களும் தொட மாட்டார்கள்.

ஆனால் நேற்றும் முந்தா நாளும் தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் சோழகன் குடிகாடு என்கிற ஊரில் நடந்தது என்ன?

சோழகன் குடிகாடு கோ. பாலன் என்கிற வேளாண் நடுத்தர நில உடைமையாளர், தனியார் நிதி நிறுவனத்



*உழவர் பாலன், தந்தை கோவிந்தசாமி, அண்ணன் காமராஜ், தாய் மாரிக்கண்ணு, மனைவி கீர்த்தனா*

திடம் கடன் பெற்று, சொந்தமாக டிராக்டர் வாங்கினார். பெற்ற கடனின் முதலுக்கும் வட்டிக்கும் - இன்றைய தேதியில் அவர் கட்ட வேண்டிய நிலுவை ரூபா 1,20,000 மட்டுமே ஆகும்.

கடன் கொடுத்த நிறுவனத்துக்காரர் நீதிமன்றத்தில், டிராக்டரைக் கைப்பற்ற ஆணை வாங்கி வந்தார். அவர்கள் கடன் கொடுத்தவர்களாக மட்டும் இல்லாமல் அடியாள்களாகவும் மாறி, காவல் துறைக் கயவாளிகள் துணையுடன் ஊரார் முன்னிலையில் பாலன் அவர்களைத் தூக்கித் தூக்கிப் போட்டு அடித்து, பெண்களும் ஆண்களும் அலற அலற, டிராக்டரைக் கைப்பற்றிக் கொண்டுபோய்விட்டனர்.

முதலில், நீதிமன்றம் பாலன் அவர்களுக்கு சிவில் சிறைத்தண்டனைதான் தந்திருக்க வேண்டும். கடன் திருப்பிச் செலுத்தப்படும் வரையில், தனியார் நிதி நிறுவனம் தான், பாலனின் சிறைத் தண்டனைக் காலச் செலவுக்கான பணத்தைச் செலுத்த வேண்டும். ஏனெனில் இது குற்றவியல் தண்டனைக்கு உட்பட்டதல்ல. காவல்துறை அதிகாரிகள் தனியார் நிதி நிறுவனத்தின் கைக்கூலிகளாக மாறி, திருட்டுக் குற்றம் - கொலைக்குற்றம் செய்தவனை நடத்துவது போல், பாலனைக் கொடுமையாக நடத்தியது மன்னிக்க முடியாத குற்றம்.

எனவே காவல்துறை அதிகாரிகளையும், சம்பந்தப்பட்ட தனியார் நிதி நிறுவனப் பொறுப்பாளர்களையும் அரசு உடனே கைது செய்து, அவர்களுக்கு உரிய தண்டனையை வழங்க வேண்டும். இன்றையத் தமிழக அரசு மானமும் பொறுப்பும் உள்ளதாக இருந்தால், உடனே இதைச் செய்ய வேண்டும்.

கடன் பெற்ற பாலனின் உண்மை நிலை என்ன?

வழக்கமாக அவருக்கு ஒரு ஏக்கரில் 60 கிலோ கொண்ட 36 மூட்டை நெல் கிடைக்கும். சென்ற ஆண்டு 21 மூட்டை மட்டுமே கிடைத்தது. இந்தப் பருவத்தில், ஒரு ஏக்கருக்கு 10 மூட்டை மட்டுமே கிடைத்தது.

மேலும் சென்ற கரும்பு வெட்டுப் பருவத்தில், 'அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை'க்கு சனவரியில் வெட்டப்பட வேண்டிய கரும்பு, சூன் மாதம்தான் வெட்டப்பட்டது. அதனால் கரும்பில் நெட்டி பாய்ந்து எடை குறைந்து ஒரு ஏக்கருக்கு ரூ.40,000 கைப்பொறுப்பு ஆகிவிட்டது.

பொறுப்புள்ள நீதிமன்றம் இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

இதேபோல், அரியலூர் மாவட்டத்தில், விளாங்குடி கைகாட்டியை அடுத்துள்ள ஒரத்தூரைச் சேர்ந்த 27 வயதுள்ள ஆ. அழகர் என்ற வேளாண் நில உடைமைக்காரர், தனியார் நிதி நிறுவனத்திடம் 2013இல் பெற்ற ஏழு இலட்ச ரூபாய் கடனில், 2 இலட்சம் மட்டுமே நிலுவை வைத்துள்ளார். அற்காக அழகர் அவர்களை நேரில் தரக்குறைவாக நிதி நிறுவன அதிகாரிகள் பேசினர். டிராக்டரையும் எடுத்துச் சென்றனர். அப்படி அவமானப்பட்டதைத்தாங்கிக் கொள்ள முடியாமல், நஞ்சை உண்டு, 11-3-2016 வெள்ளி அன்று அவர் தற்கொலை செய்து கொண்டார்.

இப்போது ஆட்சியிலுள்ள ஜெயலலிதா அரசு, வேளாண்மையை நவீனப்படுத்துவதற்காக, ரூபா 100 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்தது. அதைச் சரிவரப் பங்கீடு செய்திருந்தால்கூட, பாலன், அழகர் போன்ற 1500 வேளாண் நில உடைமையாளர்களுக்குக் குறைந்த

வட்டியில், டிராக்டர்கள் வாங்குவதற்கான தொகையை, நீண்டகாலக் கடனாகக் கொடுத்திருக்க முடியும்; அது நடக்கவில்லை.

இன்று உள்ள மாநில அரசுகளும், காவல்துறை அதிகாரிகளும், நீதித்துறையினரும் - தரங்கெட்ட நாலாந்தர அரசியல்வாதிகளின் கைக்கூலிகளாகவும், எடுபிடிகளாகவுமே உள்ளனர் என்பதை நாம் அறிதல் வேண்டும்.

எதைக் கொண்டு அறிவது?

1984இல் போபாலில் நச்சுவாயு வெளியாகிப் பல ஆயிரம் பேர்கள் செத்ததையும், பல நூறாயிரம் பேர் உடல்நலம் பாதிக்கப்பட்டதையும் அறிந்தும் - அன்றையப் பிரதமர் இராஜீவ்காந்தியும், ம.பி. முதலமைச்சர் அர்ஜுன்சிங்கும்-கொழுத்த கைக்கூலி பெற்றுக்கொண்டு, முதலாளி ஆண்டர்சன் தன் நாட்டுக்கு ஓடிவிட வழி விட்டனர்.

காங்கிரசின் ஏக தலைவராக இன்று உள்ள சோனியா காந்தி என்கிற இத்தாலிக்காரர், தன் கணவர் போபர்ஸ் வாணிபத்தில் பெற்ற 600 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட கைக்கூலியை மறைப்பதற்காகத், தன் சொந்த நாட்டுக்காரரான குட்ரோச்சி என்கிற தரகரைத் தப்பிக்க வழி வகுத்தார்.

இந்திய அரசியல் வரலாற்றில், நாடாளுமன்றத்தில் குறட்டைவிட்டுத் தூங்குவதற்குப் பெயர்போன முன்னாள் இந்தியப் பிரதமர் - கருநாடகம் கண்ட மதச்சார்பற்ற ஜனதாக் கட்சியின் அனைத்திந்தியத் தலைவர் எச்.டி. தேவகவுடா, விஜய் மல்லையாவைப் பற்றி, 12-3-2016 அன்று செய்தியாளர்களின் கேள்விகளுக்கு விடை அளித்த போது, "விஜய் மல்லையா நாட்டைவிட்டு வெளியேறிவிட்டது பற்றி வருத்தப்பட ஒன்றும் இடமில்லை. மல்லையாவைப் பற்றித் தவறாக நினைக்க ஏதும் இடமில்லை. அவரை நான் ஆதரிப்பதில் தவறு இல்லை. அவர் இலண்டனில் பிறந்தவரல்ல - கருநாடகத்தில் பிறந்தவர். அவர் கர்நாடகத்தில் பிறந்தது பாவச் செயல் அல்ல. எனவே எங்கள் கட்சி, கருநாடகத்துத் தொழிலதிபர் என்பதால் அவரை ஆதரித்தது" (The New Sunday Express, 13-3-2016) என்று மானம் - வெட்கம் இன்றித் தன் பேட்டியில் கூறியுள்ளார்.

இரண்டு தடவைகள் மாநிலங்கள் அவைக்கு விஜய் மல்லய்யா என்கிற கருநாடகத்துத் தொழிலதிபரைத் தேர்ந்தெடுக்க, எத்தனை ஆயிரம் கோடி ரூபாவை தேவகவுடா பெற்றுக்கொண்டாரோ? யார் அறிவார்?

9,000 கோடி கடன் பாக்கி வைத்துவிட்டு, பல தேசிய வங்கிகளுக்குப் பட்டை நாமம் சாத்திவிட்டு ஓடிப்போய்விட்ட விஜய் மல்லய்யாவின் கவட்டி மயிரையா பிடுங்கும் இன்றைய இந்திய அரசு!

வெட்கம்! வெட்கம்! "இந்தியன்" எனக்கூறுவது மாபெரும் வெட்கம்! ❖

## ஈழத்தலைவர் அமிர்தலிங்கம் துணைவியார் மங்கையர்க்கரசி மறைந்தார்!



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டவரும், 'தமிழர் விடுதலை அய்க்கிய முன்னணி' (TULF) என்ற அமைப்பின் தலைவருமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் துணைவியார் திருமதி. மங்கையர்க்கரசி அவர்கள், தம் 86ஆம் அகவையில், 9-3-2016 புதன் இரவு, இலண்டனில், தம் இரண்டாவது மகன் பகீரதன் இல்லத்தில் மறைவுற்றார் என்பதை அறிந்து வருந்துகிறோம்.

அன்னார் தம் கணவருடன், 8-11-1981 மாலை சென்னை எழும்பூரில் பெரியார் திடலில் நடைபெற்ற "உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்" என்னும் அமைப்பின் தொடக்க விழாவில், தமிழ்ப் பேரறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களால் தொடங்கப்பட்ட அமைப்பின் நிகழ்ச்சியில், பேராசிரியர் கா.பொ. இரத்தினம், ஈழவேந்தன் மற்றும் பல ஈழத்தமிழருடன் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், பங்கேற்றார் என்பதை நினைவுகூர்கிறேன்.

அம்மாநாட்டினை நான் தொடங்கி வைத்து உரையாற்றினேன். அங்கே பின்னர், அவ்விணையரைக் காணும் வாய்ப்பை நான் பெற்றேன்.

அவருடைய கணவரின் மறைவுக்குப் பின்னரும், மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குத் தம் பங்களிப்பைச் செய்தார்.

அத்தகைய பெருமைக்குரிய மங்கையர்க்கரசி அம்மையார் அவர்களை இழந்து துயருறும் அவருடைய குடும்பத்தினர்க்கும், தமிழீழத் தமிழர்க்கும், உலகத் தமிழர்க்கும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பிலும், 'சிந்தனையாளன்' ஆசிரியர் குழு சார்பிலும் ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வளர்க மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் புகழ்!

**13-3-2016** **- வே. ஆனைமுத்து**

# எது தேசியம்?

- குட்டுவன்

இந்தியாவில் தீர்க்கப்பட வேண்டிய எத்தனையோ மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிச் சிறிதும் கவலையின்றித், தேசியத்திற்குப் புதுப்புது விளக்கங்கள் கூறும் ஆரூடக்காரர்கள் இன்று பெருகி வருகிறார்கள். தேசியம் என்ற சொல்லாடல் எதற்காக? எப்போது உலக நாடுகளில் பயன்படுத்தப்பட்டது என்பதை அறிந்து கொள்ள முயற்சி செய்யாமல் நாட்டு விரோதக் குற்றத்தைச் சுமத்தி மாணவர்கள் முதல் அரசியல் தலைவர்கள் வரை கைது செய்து சிறையில் அடைக் கிறார்கள். இந்தியத் துணைக்கண்டத்தில் தேசியத் தொற்றுநோய் எப்போது பற்றிக்கொண்டது என்பதைப் பற்றி வரலாற்றுப் பக்கங்கள் பறைசாற்றுகின்றன.

ஐரோப்பாவில் முகிழ்த்த மறுமலர்ச்சி இயக்கத்தின் விளைவாக, 15ஆம் நூற்றாண்டில் பல முற்போக்கு மாறுதல்கள் அறிவியல் அறிவுத் துறைகளில் தோன்றின. பிரெஞ்சுப் புரட்சியும் தொழில் புரட்சியும் மக்களின் வாழ்வியலில் மட்டுமின்றி அரசியலில் பெரும் மாறுதல்களை உருவாக்கின. அக்காலக்கட்டத்தில்தான் இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின், ஹாலந்து, போர்ச்சுகல் போன்ற பல ஐரோப்பிய நாடுகள் அமெரிக்க ஆப்பிரிக்க ஆசிய நாடுகளில் பல காலனிகளை உருவாக்கின. பொருளாதாரச் சுரண்டலை மேற்கொண்டன. இருப்பினும் இங்கிலாந்து பிரான்சு போன்ற நாடுகளில் மானுட விடுதலையையும் மனித உரிமைகளையும் காப்பதற்குப் பல அறிஞர்கள் விழைந்தனர்.

இதன் காரணமாகத்தான் இந்தியத் தேசிய காங்கிரசை ஹியூம் போன்றவர்கள் உருவாக்க முன் வந்தனர். இக்காலக்கட்டத்தில் ஏகாதிபத்தியம் என்ற சொல்தான் அரசியலில் செல்வாக்குப் பெற்றது; காலனி நாடுகளில் இருந்த அறிஞர்களும் விடுதலைப் போராளிகளும் சுரண்டல் முறைக்கு எதிராக முழக்கமிட்டனர். அன்றைக்கு இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை, பர்மா ஆகிய நாடுகளில் பல ஐரோப்பிய நாடுகள் தங்கள் வணிகத்தை மேற்கொண்டு சுரண்டல் முறைப் பொருளாதாரத்தின் வழியாகத் தங்கள் நாடுகளை வளப் படுத்திக் கொண்டன. இறுதியாக இங்கிலாந்து மற்ற நாடுகளைத் தோற்கடித்து இந்தியத் துணைக்கண்டத்தை முழுமையாக 1857இல் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது.

இங்கிலாந்தில் கடைபிடிக்கப்பட்ட ஒற்றையாட்சிக் கூறுகளை உடைய சட்டங்கள்தான் முதன்முதலில் இந்தியத் துணைக்கண்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டன. அக்காலக்கட்டத்தில் நாட்டு விரோதக் குற்றம் என்ற பெயரில் பல கொடுமையான சட்டங்களை பிரித்தானிய ஏகாதிபத்தியம் பல காலனி நாடுகளில் அறிமுகப்படுத்தியது. இங்கிலாந்து நாட்டின் பல அறிஞர்கள் மக்களாட்சியையும் மனித உரிமையையும் தேசியம் என்ற பெயரில் சிதைக்கக் கூடாது என்று கூறி இதை எதிர்த்து வாதிட்டனர். எனவே தேசியம் என்ற கருத்தியல் மேற்கத்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகும் என்று இரவீந்திரநாத் தாகூர் குறிப்பிட்டார். இக்கருத்தியல் ஜப்பான் நாட்டில் ஒரு ஏகாதிபத்திய சக்தியாக உருவெடுத்தது. ஐரோப்பிய நாடுகளில் 1914-18 ஆண்டுகளில் முதல் உலகப் போருக்கு அடிப்படையாக அமைந்தது என்றும் தாகூர் குறிப்பிட்டுள்ளார்.

முதல் உலகப்போர் நடைபெற்ற போது, அறிஞர் பெர்னாட்ஷா போர்வெறியைத் தேசியம் என்பதைக் கண்டித்தார். "ஒரு நாட்டிற்குப் பல வழிகளிலும் போர்தான் சிறந்தது என்று நினைக்கும் எவரையும் மனநல மருத்துவமனையில்தான் அடைக்க வேண்டும். இங்கிலாந்தும் ஜெர்மனியும் போருக்கு முன்பே ஆயுதப் போட்டியில் ஈடுபட்டு வருகின்றன. அறநெறி அடிப்படையில் இந்த இரு நாடுகளும் உயர்ந்தவை என்று கோர முடியாது. இராணுவத்தனம் பிரஷ்யாவிற்கு மட்டும் உரித்தான நோயல்ல. இங்கிலாந்தில் இந்நோய் முற்றியுள்ளது; பிரான்சில் தலைசிறந்த தலைவர் படுகொலையில் முடிந்துள்ளது எனவும் கூறினார். அற்பக் காரணங்களுக்காகக் கொல்வதற்கும் கொல்லப் படுவதற்குமான விருப்பமே தேசப்பற்று (Patriotism is the willingness to kill and be killed for trivial reasons) என்ற கருத்தை மொழிந்தவர் மெய்யியல் அறிஞர் பெர்ட்ரன்ட் ரஸ்ஸல். முதல் உலகப் போரின்-போது ஐரோப்பாவின் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் அறிஞர்களோடு இணைந்து போரைத் தவிர்க்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார். 1916இல் இங்கிலாந்து அரசால் கொண்டுவரப்பட்ட கட்டாய இராணுவப் பணிச்சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார். குறிப்பாக அமெரிக்க நாட்டின் கொள்கைகள் மீது கடும் விமர்சனம் வைத்தார். இங்கிலாந்து அமெரிக்க நாடுகளின் நட்புறவைக் கெடுக்க முற்படுகிறார் எனக்கூறி பிரித்தானிய ஏகாதிபத்திய அரசு இவ்வறிஞரை 6 மாதங்கள் பிரிக்ஸ்டன் சிறையில் அடைத்தது.

போரின்போது பெர்னாட்ஷாவும், ரஸ்ஸலும் கூறிய கருத்துகள் தேசப்பற்றாளர்கள் எனக் கூறிக் கொண்டவர்களின் கண்டனத்திற்கு உள்ளானாலும் 'போர் முடிந்தவுடன் ஏற்பட்ட இலட்சக்கணக்கான மக்களின் உயிரிழப்பு, போர் வீரர்கள் உயிரிழப்பு, பொருளாதார இழப்பு, வறுமை, ஏற்றத்தாழ்வு ஆகிய காரணிகளால் மக்கள் இந்தப் பேரறிஞர்களைப் போற்றத் தொடங்கினர். இக்காலக்கட்டத்தில் காந்தியார் முதல் உலகப் போரில் இங்கிலாந்துக்கு ஆதரவாகவும் இந்தியர்கள் இங்கிலாந்து

இராணுவத்தில் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக, போர் வெறியுடன் தொடர்புடையதுதான் இன்று ஆட்சியாளர்களால் போற்றப்படும் தேசியம் என்ற கருத்தியலாகும்.

காங்கிரசு இயக்கத்திலேயே தீவரவாதிகள்- மிதவாதிகள் எனப் பிரிந்து, இந்தியத் துணைக்கண்டத்தின் பல பகுதிகளில் தாக்குதல்களைச் சிறிய அளவில் தொடங்கினர். காங்கிரசுக் கட்சியினுடைய செல்வாக்குப் பெருகிய தால் இந்தியத் துணைக்கண்டத்தை ஆட்சி செய்வதற்கு 1919, 1935 ஆண்டுகளில் இரண்டு அரசமைப்புச் சட்டங்களைப் பிரித்தானிய ஏகாதிபத்தியம் அறிமுகப்படுத்தியது. இன்றைக்கு இந்தியத் துணைக்கண்டத்தில் பல நாடுகள் பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டாலும், எல்லா நாடுகளிலும் பிரித்தானியச் சட்டங்கள் இன்றும் மேலாதிக்கம் செய்கின்றன.

இந்தியாவில் 1947க்குப் பிறகு உருவான அரசமைப்புச் சட்ட அவையில் உயர்குடி உயர்சாதி மக்கள் ஆதிக்கம் செலுத்தினர். பெரும்பான்மையான மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல், பெரும்பான்மையான பிரித்தானியச் சட்டங்களை அப்படியே ஏற்றுக்கொண்டனர். அடிப்படை உரிமைகள், வழிகாட்டும் நெறிமுறைகள் போன்ற சட்டங்களை வகுப்பதில்கூட மேலாதிக்கச் சாதியினர் மிகக் கவனமாகச் செயல்பட்டனர். அனைவருக்கும் சமவாய்ப்பு என்ற விதியை வைத்துத்தான், அரசமைப்புச் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இடஒதுக்கீடு கொள்கையைச் சென்னை மாகாணம் பின்பற்றியபோது உச்ச நீதிமன்றம் அனைவருக்கும் சம வாய்ப்பு என்ற கொள்கைக்கு முரணானது எனச் சுட்டி இடஒதுக்கீடு கொள்கையைச் செல்லாது என அறிவித்தது. தந்தை பெரியார் தலைமையில் அனைத்துக் கட்சிகளும் அணி திரண்ட காரணத்தால் 1951இல் சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கியோர்க்கு இடஒதுக்கீடு முதலாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் வழியாக உறுதி செய்யப்பட்டது. ஆனால் அறிஞர் அம்பேத்கர் சட்ட அமைச்சராக இருந்து முன்மொழிந்த இந்துச் சட்டத் திருத்தம் காங்கிரசு மற்றும் இந்து சனாதனவாதிகள் எதிர்த்ததன் காரணமாக பிரதமர் நேருவால் நிறைவேற்ற முடியவில்லை. இதன் காரணமாக அறிஞர் அம்பேத்கர் சட்ட அமைச்சர் பதவியில் இருந்து விலகினார்.

1947ஆம் ஆண்டு இந்துச் சட்டத்தில் குறிப்பாக பெண்களுக்கு சொத்துரிமை மண முறிவு உரிமை போன்ற பெண்கள் முன்னேற்றத்திற்காகக் கொண்டு வரப்பட்ட முற்போக்கான கருத்துகளை எதிர்த்து ஆர்.எஸ்.எஸ். சங்கராச்சாரியார் இந்துமத வெறியர்கள் தொடர்ந்து புதுதில்லியில் 6 மாதங்களில் 70 ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். நேரு, அம்பேத்கர் உருவ பொம்மைகள் எரிக்கப்பட்டன. இந்து சனாதனத்தில் பஞ்சமனுக்கு இடமில்லை என்ற காரணத்தினால் இந்து அல்லாத அம்பேத்கர் எப்படி சட்டத்தை முன்மொழியலாம் என்று கேள்வி எழுப்பினர். இக்கருத்துகளை இணைத்து வரலாற்று ஆய்வாளர் இராமச்சந்திர குகா ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பும் பின்பும் இந்தச் சனாதன வெறியர்கள் வைத்துதான் சட்டம் என்ற சூழ்நிலை நேரு காலத்திலேயே உருவாக்கப்பட்டது.

இது போன்ற எண்ணற்ற சனாதன கருத்துகளை இன்றும் இந்திய அரசமைப்புச் சட்டம் பாதுகாத்து வருகிறது. 2014இல் பாஜக அரசு பதவியேற்ற பிறகு ஆர்.எஸ்.எஸ். சங்கப் பரிவாரங்கள் தங்களது இந்துத்துவா கொள்கையை வன்முறை வழியாகப் பரப்புவதற்குத் துணிவு பெற்றுள்ளனர். இந்துத்துவா கருத்துகளை எதிர்ப்பவர்களை நாட்டை விட்டு வெளியேறு என்கிற துணிச்சலும், நான்கு பகுத்தறிவு அறிஞர்களைப் படுகொலை செய்ததும் பாஜக அரசு அளித்து வரும் மறைமுகமான ஆதரவால் என்பதை இன்று நடுநிலையாளர்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

இதன் ஒரு வெளிப்பாடுதான் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பாஜக தலைவர்களின் தூண்டுதலால் நடைபெறும் நாட்டு விரோதச் செயல்களாகும். ஆனால் செய்வதையும் செய்துவிட்டு, முற்போக்குச் சிந்தனை கொண்ட மாணவர்கள் ஆசிரியர்கள் மீதும் நாட்டு விரோதச் சட்டத்தை ஏவுகின்றனர். ஆய்வு மாணவர் கன்னையா குமார் உட்பட பலரைச் சிறையில் அடைத்தனர். உச்ச நீதிமன்றம் வரை சென்றுதான் பிணையில் வர இவர்களால் முடிந்துள்ளது. எனவே இதை “நாட்டு விரோதச் செயல்” என்பது பிரித்தானிய ஏகாதிபத்தியம் விடுதலைப் போராளிகளை அடக்குவதற்குப் பயன்படுத்திய ஒரு கொடுமையான ஆயுதம். திலகர், காந்தி போன்ற தலைவர்கள் மீது இந்த நாட்டுவிரோதச் சட்டப் பிரிவின் கீழ் பிரித்தானிய ஏகாதிபத்தியம் வழக்குகளைப் பதிவு செய்தது.

தமிழ்நாட்டில் எனது மாமனார் திரு.க.ரா.ஜமதக்னி 9 ஆண்டுகள் விடுதலைப் போராட்டக் காலத்தில் சிறையில் இருந்தார். 1928ஆம் ஆண்டில் அவர் மீது ராஜத்துரோக வழக்குப் பதிவு செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் அடைக்கப்பட்டார். 1939ஆம் ஆண்டு இந்தியப் பாதுகாப்பு விதி பிரிவு 38(5)ன்படி 18 மாதங்களும், மீண்டும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கப்படுவதற்கு முன்பே இதே பாதுகாப்பு விதியின் கீழ் 2ஆண்டுகளும் சிறையில் வைக்கப்பட்டார். தமிழ்நாட்டில் இவ்விதியின் கீழ்ப் பல தலைவர்கள் சிறையில் இருந்துள்ளனர்.

விடுதலை பெற்ற பின்பும் ஏன் இந்தச் சட்டப்பிரிவு இன்றும் உயிர் பெற்றுள்ளது என்பதைப் பற்றிப் பல கட்டுரைகள் ஆய்வாளர்களால் வெளியிடப்படுகின்றன.

புதுதில்லியில் உள்ள வழக்கறிஞரும் சட்ட ஆய்வாளரு மான கௌதம் பாட்டியா ''இந்திய அரசியல் சட்டமும் பேச்சுரிமையும் - தாக்குதல் தொல்லை தருதல் அதிர்ச்சியளித்தல்'' என்ற நூலில் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 377, 124 (ஏ) ஆகியன பிரித்தானிய ஆட்சிக்காலத்தின் குற்றவியல் சட்டத்தின் கூறுகளை இந்தியா அப்படியே ஏற்றுக்கொண்டுள்ளது. இவை தற்போதுள்ள ஜனநாயகக் குடியரசை வலியுறுத்தும் அரசியல் சட்டத்திற்கு எதிரானவை. மேலும் இந்திய தண்டனைச் சட்டம் 1860ஆம் ஆண்டிலும் இந்திய சாட்சி சட்டம் 1872ஆம் ஆண்டிலும் இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872லும், சொத்து மாற்று சட்டம் 1882லும், பொதுவிதிச் சட்டம் 1897லும், குடிமைச்சட்டம் 1908லும் உருவாக் கப்பட்டவை என்று குறிப்பிட்டு, காலத்தால் மதிப்பிழந்த இச்சட்டங்களை இன்றைய மக்களாட்சி முறைக்குப் பொருந்தாததாக இருந்தாலும் இன்றும் இச்சட்டங் களைப் பயன்படுத்தித் தீர்ப்புகள் வழங்கப்படுவது சரிதானா? என்ற வினாவை அவர் எழுப்பியுள்ளார். தேசியம் பாதிப்புக்கு உள்ளாகிறது, அவமானப்படுத்தப் படுகிறது என்று கூக்குரலிடும் இன்றைய புதிய தேசியவாதிகள் வரலாற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் உண்மையாகும்.

இந்தத் தேசியம் சுயசார்புப் பொருளாதாரத்திற்கு மட்டும் பொருத்திப் பார்க்கப்படவில்லை. காங்கிரசு பாஜக கட்சிகள் மாறிமாறி நடுவண் அரசில் ஆட்சியமைத்துக் கட்டற்ற முதலாளித்துவக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றன. இதுதான் பொருளாதாரத் தேசியம் என்று இவர்களால் சுட்ட முடியுமா? காந்தியார் 1915க்குப் பிறகு சுதேசி இயக்கத்தை வலியுறுத்திய போது பிரித்தானிய ஏகாதிபத்தியம் இந்திய வளங்களைச் சுரண்டி இந்திய மக்களை ஏழைகளாக்கி வருகிறது என்று குறிப்பிட்டார். இங்கிலாந்து அறிஞர் சர் வில்லியம் வெட்டர்பர்ன், தாதாபாய் நௌரோஜி ஆகியோர்தான் இந்தியர்களுக்குக் கல்வி வேலைவாய்ப்புகளில் முழு உரிமை அளிக்க வேண்டும் என்றும், இந்தியத் தொழில்களைக் காப்பாற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டனர். காந்தி இவர்களைப் பின்பற்றித்தான் சுதேசி என்கிற சுயசார்புக் கொள் கையை வலியுறுத்தினேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

**இந்தியாவில் கலாச்சார தேசியம் என்பது என்றுமே கிடையாது. காரணம் இந்தியாவில் பல்வேறு மொழிகள் பேசக்கூடிய தேசிய இனங்களும் பல்வேறு மதங்களைப் பின்பற்றும் மக்களும் நிறைந்துள்ளனர். இவர்களுடைய பண்பாட்டுக் கூறுகள் ஒவ்வொன்றும் தனித் தன் மையானது. எனவே கலாச்சார தேசியம் என்பது பாசிசத்தினுடைய மறுவடிவமாகும். மீண்டும் ஆதிக்கச் சமுதாயத்தினர் செத்த மொழியான சமஸ்கிருதத்தை யும் வளர்ச்சி பெறாத இந்தியையும் பெரும்பான்மையான மக்கள் மீது திணிக்கவும்** தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்கின்றனர். காங்கிரசு, எதிர்கட்சிகளை அடக்குவதற்குத் ''தேசியம்'' என்ற முகமூடியைத்தான் அணிந்திருந்தது. ஜனநாயக முறையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பிரிவினை கோரலாம் என்கிற சட்டப்பிரிவை 1962க்குப் பிறகு நீக்கினர். குறிப்பாக இந்திய அரசியல் வரலாற்றிலேயே அறிஞர் அண்ணா அவர்கள்தான் நாடாளுமன்ற மேலவையில் 45 நிமிடம் பிரிவினையைக் கேட்டு அதற்கான ஆதாரங்களை அடுக்கிக் காட்டினார். இந்தியா என்ற ஒரு நாடு உருவான பிறகு எதற்கு இந்திய ஒருமைப்பாட்டுக்குழு என்று நேருவைப் பார்த்துக் கேட்டார். இதன் பிறகுதான் மேற்குறிப்பிட்ட சட்டமும் உருவாயிற்று. ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் அண்ணாவின் பேச்சு தற்போது மேற்கோளாகக் காட்டப்படுகிறது. பன்முகத் தன்மைகள் கொண்ட பல தேசிய இனங்களின் உரிமைகளைப் பறிக்கின்ற செயல்களை எதிர்த்துப் பேசினால் தேசியத்திற்கு எதிரானது என்று குறிப்பிடுவது தேசிய ஒருமைப்பாட்டை உடைக்கும் செயலாகும் என்று அன்றைக்கு அண்ணா முன்மொழிந்த கருத்தியலை இன்று வழிமொழிகின்றனர்.

மாநிலங்களில் பெரும்பான்மையான மக்களுக்கும் குழந்தைகளுக்கும் போதிய ஊட்டச்சத்து கிடைக்காமை, வறுமை, சமூக ஏற்றத்தாழ்வு, அடிப்படைக்கல்வி தொடங்கி, உயர்கல்வி வரை காணப்படும் பெரும் ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றில் எல்லாம் கவனம் செலுத்தாமல் பெரும் முதலாளிகளுக்கும் வங்கி மோசடியில் ஈடுபடும் முதலாளிகளுக்கும் கறுப்புப் பணக்காரர்களுக்கும் ஆதரவான பொருளாதார நிதியியல் கொள்கைகளை நடுவண் அரசு தொடர்ந்து பின்பற்றி வருகிறது. மனித உரிமைகள் மிதிக்கப்படு கின்றன. காங்கிரசு கடைப்பிடித்த பன்னாட்டு-உள்நாட்டுப் பெரு முதலாளிகளுக்குத் துணைபோகும் கொள்கை யைப் புதிய பொருளாதாரக் கொள்கை என்று தொடர்ந்து கூறி வருவதுதான் தேசியமா? பாஜகவின் அடிப்பொடி களான விஸ்வ இந்து பரிஷத், பஜ்ரங்தள், ஆர்எஸ்எஸ் மாணவர்கள் அமைப்பான ஏபிவிபி ஆகியவற்றின் வழியாக இந்தியாவின் பன்முகத்தன்மைகளை அடக்கி ஒடுக்கும் அடாவடித்தனம்தான் தேசியமா? 2014இல் மோடி அரசு அமைந்த பிறகு மாட்டுக்கறியை வீட்டில் வைத்திருந்தார் என்று கொல்லப்படுவதும், பாஜகவின் சட்டமன்ற உறுப்பினரே சக்திமான் என்ற குதிரையின் காலை உடைப்பதும், ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகம் தொடங்கி சென்னைப் பல்கலைக்கழகம் வரை இந்த அமைப்புகள் மாணவர்கள் மத்தியிலும் பாசிச நச்சு விதையை விதைக்கத் தொடங்கிவிட்டன. எது தேசியம் என்ற கேள்விதான் இன்றைக்கு ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம் தொடங்கி எல்லாப் பல்கலைக்கழகங் களிலும் எதிரொலித்து வருகின்றது.

❖

# காஷ்மீரைப் பாருங்கள்
# நம்மால் அறியப்பட்ட காஷ்மீர்!
# நாம் அறிய வேண்டிய காஷ்மீர்!
# ஜம்மு-காஷ்மீர் அரசமைப்பும், இந்திய அரசமைப்பும்

8

ஷேக் அப்துல்லா பேரில் முஸ்லிம் அல்லாத, இந்துக்கள், பவுத்தர்கள் பரவலான அதிருப்தி கொண்டிருந்தனர். ஏன்?

அவர் ஜம்மு-காஷ்மீரில் புதிய நிலச்சீர்திருத்தச் சட்டத்தை அமல்படுத்தினார். மன்னர் அரிசிங்குடைய நிலங்கள், புத்த மடங்களுக்குச் சொந்தமான நிலங்களின் பெரும் பகுதி நிலங்கள் ஷேக் அப்துல்லா அரசினால் கைப்பற்றப்பட்டன.

அதனால் ஷேக் அப்துல்லா அரசுக்கும், புத்த மதத்தினருக்கும் லடாக் பகுதியில் அதிகாரப் போட்டி தொடங்கியது. இதன் எதிரொலியாக, ஒரு கட்டத்தில், "அய்.நா. அவையின் முடிவுப்படி காஷ்மீரை இந்தியாவுடன் சேர்ப்பதா, பாக்கித்தானுடன் சேர்ப்பதா என்பது குறித்து வாக்கெடுப்பு நடத்த நேர்ந்தால், அந்த வாக்கெடுப்பு, பிரதேசம் வாரியாகவே நடத்தப்பட வேண்டும் - ஒட்டுமொத்த காஷ்மீருக்குமாக நடத்தப்படக் கூடாது" என்று, லடாக் வாழ் பவுத்தர்கள் வற்புறுத்தினர். பவுத்தர்களில் ஒரு பகுதியினர், லடாக்கை திபேத்துடன் சேர்த்துவிடலாம் என்றும் கோரினர்.

1960இல், திபேத்தைத் தங்கள் நாட்டுடன் சேர்த்துவிட வேண்டும் என்று சீனா அதிரடியாக முடிவெடுத்தது. அதன் பிறகு, லடாக் பவுத்தர்களின் கோரிக்கை வலுவிழந்தது.

லடாக் பவுத்தர்கள் கோரியது போலவே, ஜம்மு இந்துக்களும் பிரதேச வாரியாக வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கோரினர்.

ஆனால் ஷேக் அப்துல்லா மேலே கண்ட கோரிக்கைகளைக் கொஞ்சமும் சட்டை செய்யவில்லை.

இதற்கு இடையில், பாக்கித்தான் ஆக்கிரமித்த காஷ்மீர் பகுதி - 'ஆசாத் காஷ்மீர்' - அதாவது 'சுதந்தர காஷ்மீர்' என்றே அழைக்கப்பட்டது. கில்கிட் ஏஜென்சி பகுதிக்கு உட்பட்ட ஹுன்சா, கில்கிட், நாகர், பல்டிஸ்தான் போன்றவற்றை ஆசாத் காஷ்மீரின் நிருவாகத்தில் விட்டிருந்த பாக்கித்தான் அரசு, 1947க்குப் பிறகு, அப்பகுதியைத் தன் நேரடிக் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டது.

அத்துடன் 1950ஆம் ஆண்டில், பாக்கித்தான் அரசின் அவசரச் சட்டப்படி 'ஆசாத் காஷ்மீரின் நிர்வாகப் பொறுப்புகளைக் கவனிப்பதற்கான சட்டம் இயற்றும் பொறுப்பு முழுவதும் இனி இந்தப் பகுதியின் நிர்வாகத் தலைவருக்கே உண்டு - அதுவரையில் இருந்தது போல் ஜனாதிபதிக்கு அல்ல' என்று பாக். அறிவித்தது.

அதன்படி ஜனாதிபதி, அமைச்சர்கள், தலைமை நீதிபதி, மற்ற உயர்மட்ட அதிகாரிகள் ஆகிய அனைவரையும் நியமிக்கும் பொறுப்பும் அதிகாரமும் 'முஸ்லீம் மாநாட்டுக் கட்சி' நிர்வாகிகளின் கைக்கு வந்தன.

ஆனாலும், ஆசாத் காஷ்மீர் நிர்வாகிகளின் நடவடிக்கைகளைக் கவனிக்கும் அதிகாரம், பாக்கித்தான் அரசின் காஷ்மீர் விவகாரங்களுக்கான அமைச்சரவை செயலருக்கு உண்டு என்ற புதிய நடைமுறை உண்டாக்கப்பட்டது. இதன் விளைவாக, மிக விரைவிலேயே முஸ்லீம் மாநாட்டுக் கட்சியின் தலைவரான குலாம் அப்பாஸுக்கும் - ஜனாதிபதி பொறுப்பில் இருந்த சர்தார் இப்ராகிம் கானுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதனால், 'ஆசாத் காஷ்மீர் நிர்வாகம்' என்ற பெயரில் நடந்த ஆட்சியில் இரண்டு அதிகார மய்யங்கள் தோன்றின. 1950, மே மாதம் இப்ராகிம் கான் பதவி இறக்கம் செய்யப்படுகிற வரையில், இதே நிலைமை நீடித்தது.

இந்தியா, தன் கட்டுப்பாட்டில் இருந்த காஷ்மீருக்கு என்னென்ன உரிமைகளும் சுதந்தரமும் கொடுத்து ஊக்குவித்ததோ, அதே உரிமைகளையும் சுதந்தரத்தையும் ஆசாத் காஷ்மீர் நிர்வாகத்துக்குத்தர பாக்கித்தான் முன்வந்தது. அப்படிச் செய்ததன் மூலம், ஆசாத் காஷ்மீர் மக்களின் சிந்தனை வேறு திசைகளில் சிதறாத படியும் தன்பக்கமே இருக்கும்படியும் பாக்கித்தான் பார்த்துக் கொண்டது.

இந்நியைில், காஷ்மீரில் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்று, ஷேக் அப்துல்லா விரும்பினார். இதில் இந்தியா மற்றும் பாக்கித்தானுக்கான அய்.நா. குழுவும் ஆர்வம் காட்டியது. பாக்கித்தானும் ஆர்வம் காட்டியது.

**ஆனால், "வாக்கெடுப்பு" என்றாலே, மற்ற இந்திய அரசியல் தலைவர்களுக்கு வயிற்றில் புளியைக்**

**கரைத்தது. ஏனெனில், வாக்கெடுப்பு நடத்தினால், 'காஷ்மீர் பாக்கித்தானுடன் போய்விடும்' என்று இந்தியர் பலரும் அஞ்சினர்.**

அதைவிட முதன்மையாக, வாக்கெடுப்பு நடத்தப் படுவதற்கான முன் தேவையாக, இரண்டு நாட்டுப் படைகளும் காஷ்மீரிலிருந்து வெளியேற்றப்பட்டு, ஒரு வெற்றிடம் உருவாக்கப்பட வேண்டும் என்று கருதினர்.

அப்படிச் செய்தால், இந்தியாவுடன் மன்னர் அரிசிங் செய்துகொண்ட இணைப்பு ஒப்பந்தம் மதிப்பிழந்து போய், பாக்கித்தானும் இந்தியாவும் ஒரே தரத்தில் - ஒரே நிலையில் சம அந்தஸ்தில் இருக்கும் நிலை உண்டாகும் என்பது இவர்களின் எண்ணம்.

இது ஒருபுறம். இன்னொருபுறம் - பிரதேச வாரியாக தனித்தனியாக வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஜம்மு, லடாக் இரண்டு பகுதிகளிலும் வலிவாக இருந்தது.

ஆனாலும் அய்.நா. அவை சோர்ந்துவிடவில்லை. மீண்டும், 'தனிநபர் கமிஷன்' என, புதிதாக ஒரு முயற்சியை அய்.நா. அவை தொடங்கியது. அது சமயம், அய்.நா. அவையின் தலைவராக இருந்த கனடா நாட்டைச் சார்ந்த ஜெனரல் மெக்நாட்டன் 'தனிநபர் கமிஷன்'ஆக அமர்த்தப்பட்டார். ஆனால், அவராலும் அப்போது இழுபறியாக இருந்த 'வாக்கெடுப்பு'ச் சிக்கலைத் தீர்க்க முடியவில்லை.

அடுத்து, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சட்ட நிபுணர் சர். ஓவன் டிக்சன் என்பவர் தனிநபர் கமிஷனாக அமர்த்தப்பட்டார். அவரும் மிக அக்கறையோடு முயன்றார்.

டிக்சன் தன் திட்டத்தை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தபோது, இந்திய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல் நோய்வாய்ப்பட்டு, 1950 திசம்பர் 15இல் மறைவுற்றார்.

இந்தியாவுக்கு அது மாபெரும் இழப்பு என்றாலும், இனி வாக்கெடுப்பு நடத்தப்பட அதிக வாய்ப்பு இருப்பதாக எல்லோரும் நம்பினர்.

டிக்சனின் முயற்சியால் பல தடவைகள் பேச்சு வார்த்தை நடந்தது. ஆனால், ஒவ்வொரு தடவையும் புதுப்புது திட்டங்களை இரு தரப்பினரும் முன்வைத்தனர்.

**பாக்கித்தானிய முரட்டுப் படைகள் தாக்குவதற்கு முன்னர், எந்தெந்த இடங்களில் இந்தியாவின் படைகளும், பாக்கித்தானின் படைகளும் இருந்தனவோ அந்தந்த இடங்களுக்கே இந்தியப் படைகளும் பாக்கித்தான் படைகளும் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற அய்.நா. அவையின் அறிவுரையை இருதரப்பினரும் மதிக்கவில்லை.**

**இந்த அறிவுரையை ஏற்கப் பாக்கித்தான் முன் வந்தது. ஆனால் இந்தியா முன்வரவில்லை. ஏன்? மன்னர் அரிசிங்கின் ஒப்பந்தம் மூலம் இந்தியப் படைகளை அங்கே நிறுத்த சர்வ அதிகாரமும் இந்தியாவுக்கு இருக்கிறது என்று இந்தியா சாதனையாகக் கூறியது.**

அப்போது நிலைமை சுமூகமாக இருந்தால், போர் நிறுத்தக் கோட்டையேகூட, இரு நாடுகளின் ஒப்புதலோடு, அதிகாரப் பூர்வமாக, சர்வதேச எல்லைக் கோடாக அறிவித்துவிடலாம் என்ற திட்டத்தையும் டிக்சன் சொல்லிப் பார்த்தார். இருதரப்பாருமே எதையும் கேட்கவில்லை.

"இனி இப்பிரச்சினையை சம்பந்தப்பட்ட இருநாடுகளுமே தங்களுக்குள் பேசித் தீர்த்துக கொள்ளட்டும்" என்று அறிவித்துவிட்டு, டிக்சன் விடைபெற்றார்.

அதன்பின்னர், காமன்வெல்த் நாடுகள் அமைப்புக்கு இப்பிரச்சனை சென்றது. அவர்களால், "இந்தியா-பாக்கித்தான் படைகளைத் திருப்பி அனுப்பிவிட்டு, அங்கு காமன்வெல்த் நாடுகளின் படைகளை நிற்க வைப்பது" பற்றிப் பேசப்பட்டது. இதுவும் நிறைவேறாமல் போனது. ஏன்?

**"பேச்சுவார்த்தையில், இந்தியா, பாக்கித்தானைத் தனக்குச் சமமாக வைத்துப் பேசிட ஒப்புக்கொள்ள முடியவில்லை" என்பதுதான்.**

**இதன் விளைவு என்ன?**

**காஷ்மீர் மக்களுக்கும், உலகுக்கும்-இந்தியப் பிரதமர் என்ற முறையில் பண்டித நேரு தந்த வாக்குறுதி காற்றிலே விடப்பட்டதுதான்."**

"காஷ்மீர் பிரச்சனையில் முட்டுக்கட்டையாக நிற்பது இந்தியாதான் - இந்தியப் படைகளை முழுவதுமாகத் திரும்பப் பெற அந்நாடு மறுப்பதுதான் என்று, பாக்கித்தான் முன்வைக்கும் வாதம் சரியே என்று சிலர் கருதினர். இந்தியாவின் நிலைப்பாடு சரியே என்றும் சிலர் கருதினர்."

அய்.நா. அவைக்கு வேறு வழி தெரியாததால், "மக்கள் நாயக முறைப்படி காஷ்மீர் மக்களின் கருத்தை

அறிய, பாகுபாடற்ற வாக்கெடுப்பு நடத்திவிட இருநாடு களும் ஏற்றுக்கொள்கின்றன என்று வலியுறுத்தி'', 1951 மார்ச்சு மாதத்தில் ஓர் அறிவிப்பை மட்டும் வெளி யிட்டது.

தொடர்ந்து இப்பிரச்சனையில் இழுபறி நீடிப்பதால், மத்தியஸ்த முயற்சிதான் ஒரே வழி என, அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகள் ஒரு வரைவுத் திட்டத்தை முன்வைத்தன.

இத்திட்டத்துக்கு பாக்கித்தான் 'சரி' சொன்னது.

ஆனால் இந்தியப் பிரதமர் நேரு, ''40 இலக்கம் மக்களின் விருப்பங்களை (அபிலாசைகளை) இவர் களுக்கு எந்த வகையிலும் சம்பந்தப்படாத மூன்றாம் நபர் முடிவு செய்வதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்'' என்று ஓர் எதிர்க்கேள்வி கேட்டார்.

இவற்றுக்கிடையில், ஜம்மு-காஷ்மீரை வசப்படுத்தும் வேலையில், ஷேக் அப்துல்லா மும்முரமாக இறங்கி னார்.

**இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி கிடைத்த ஜம்மு-காஷ்மீரின் சிறப்புத்தகுதியை உறுதிப்படுத்தவும், இம்மாநிலத்துக்குத் தனிச்சட்டமன்றம் அமைக்கவும், அதற்குரிய தேர்தலை நடத்தவும் வழிகளை அவர் உருவாக்கினார்.**

ஆசாத் காஷ்மீருக்கும் சேர்த்து 100 உறுப்பினர் கள் கொண்ட ஒரு சட்டமன்றத்தை உருவாக்கினார். இதில் ஆசாத் காஷ்மீருக்கு 25 இடங்கள் ஒதுக்கப் பட்டது போக, மீதி 75 இடங்களுக்கு உடனே தேர்தலை நடத்தினார்.

**75 இடங்களையும் ஷேக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சியே கைப்பற்றியது.**

ஜம்மு-காஷ்மீர் சட்டமன்றத்தில் அவர் முதலாவ தாக ஆற்றிய உரையில், ''காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்தது பள்ளத்தாக்கு முஸ்லீம்களுக்கு (Kashmir Valley Muslims) எவ்வளவு சாதகமானது'' என்பது பற்றியும், ''வேறு நிர்ப்பந்தங்கள் எதனாலும் நாம் இந்தியாவுடன் இணையவில்லை; நாமாக விரும்பி ஏற்றுக்கொண்ட முடிவுதான் இந்தியாவுட னான இணைப்பு'' எனவும் முழங்கினார்.

காஷ்மீர் சட்டமன்றத்தின் கூரை அதிரும் அளவுக்கு, ஆரவாரம் செய்தனர் சட்டமன்ற உறுப்பினர்கள்.

**(தொடரும்)**

❖

## முரம்பில் பாவாணர் பிறந்த நாள் விழா



பாவாணர் கோட்டம்-பாசறை-உ.த. சார்பில், சுறவம் 26 (9-2-2016)ஆம் நாள் நடந்தது. மாலையில் பேரணியாய்ச் சென்று பாவாணர் சிலைக்குப் பாவாணர் மகள் தே. மங்கையர்க்கரசி அம்மையார் மாலை அணி வித்தார். கண்மலை தேவமலர், உ.த.க. (பாவாணர் பெயர்த்தி) கொடியேற்றி உரையாற்றினார்.

சிறப்பாகச் செயல்பட்ட உ.த.க. சிவகாசிக் கிளைச் செயலர் முருகையன் பாராட்டுப் பரிசு பெற்றார். உ.ச. எழில் பாராட்டினார். பாவாணர் கொள்கை பரப்புநர் விருதாளரின் உரையை இல. நிலவழகன் படித்தார். பல்லடம் மெய்யறிவின்பன் பாவாணரின் பன்முக ஆற்றல் பற்றிச் சிறப்புரையாற்றினார். மாணவ மாணவிகளுக்குப் பரிசுகளை வழங்கிப் பாவாணர் மகள் பாராட்டினார். புதிய உறுப்பினர்கள், தமிழியக் குடும்பத்தினர், அறக்கட்டளை அறங்காவலர்களுக்குக் கைத்தறி ஆடைகள் அணிவிக் கப்பட்டன. விழா ஏற்பாடுகளை ஆ. நெடுஞ்சேரலாதன், அ. இளங்கண்ணன், க. வெற்றிக்குமரன், மு. உலக நாயகன், இல. நிலவழகன், எ. அரசகுரு முன்னின்று செய்தனர். உறுப்பினர்களும் பெறுப்பாளர்களும் பாவாணர் படமும், பாவாணர் கருத்தான 'தமிழ் விடுதலையே தமிழன் விடுதலை', 'தமிழ்நாட்டை விடுவிக்காமல் தமிழினத்தை முன்னேற்ற முடியாது' என்கின்ற தமிழ் உரிமை மொழிகள் இரண்டும் அச்சடித்த உள்ளொட்டிச் (பனியன்) சீருடை அணிந்து சிறப்பாகச் செயல்பட்டனர்.

300 பேருக்கு இரவு உணவு ஏற்பாட்டை ஊராட்சி மன்றத் தலைவர் சோ. ஞானராசும், சோலைசேரி இராச கோபாலும் செய்து வழங்கினர். பல்லடம் முத்துக் குமரனார் (மெய்யறிவின்பன்) பாவாணர் பாசறை வளர்ச் சிக்கு உருவா முப்பத்தி ஒன்றாயிரமும், பாவாணர் மகள் தே.மங்கையர்க்கரசி குடும்பத்தினர் உருவா பத்தாயிர மும், காரைக்குடி இராமன் ஐயாயிரமும், திருக்குறள் பாசுகரன் உருவா ஆயிரமும் வழங்கிச் சிறப்பித்தனர்.

# 9000 கோடியை விழுங்கி ஏப்பம் விட்ட விஜய் மல்லய்யாவும் டிராக்டர் கடனுக்காக இழிவுபடுத்தப்பட்டுத் தாக்கப்பட்ட உழவர் பாலனும்

- க. முகிலன்

மீன் கொத்தி (King Fisher) வானூர்தி நிறுவனத்தின் முதலாளி விஜய் மல்லய்யா பொதுத்துறை வங்கிகளில் கடனாகப் பெற்ற ரூ.9000 கோடி பணத்தை விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டு வெளிநாட்டுக்கு ஓடிவிட்டார் என்கிற செய்தி 9.3.2016 அன்று உச்சநீதிமன்றத்தில் நடுவண் அரசால் தெரிவிக்கப்பட்டது. அதே நாளில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பாலன் என்கிற விவசாயி டிராக்டர் வாங்கியதற்கான கடன் தவணையைக் கட்டவில்லை என்று, தனியார் நிதி நிறுவன அடியாள்களாலும் காவல்துறையினராலும் கடுமை யாகத் தாக்கப்பட்ட கொடிய காட்சி வாட்ஸ்-அப் மூலம் தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுவதும் பரவியது. இது காட்சி ஊடகங்களில் காட்டப்பட்டது. அரசுகளும், அவற்றின் சட்டங் களும், நீதித்துறையும், நிருவாகமும் பெருமுதலாளிகளுக்கும் பணக்காரர்களுக்கும் பாதுகாவலர்களாகச் செயல்படுகின்றன; ஏழைகளை-உழைப்பாளர்களை எட்டி உதைகின்றன என்பதை இவ்விரு நிகழ்வுகள் உறுதி செய்கின்றன.

விஜய் மல்லய்யாவின் மீன்கொத்தி வானூர்தி நிறுவனத் துக்கு முதன்முதலில் அரசுடைமை வங்கிகளிலிருந்து 2004 செப்டம்பரில் கடனுதவி வழங்கப்பட்டது. அடுத்தகட்டக் கடனுதவி 2008 பிப்ரவரியில் தரப்பட்டது. 2009ஆம் ஆண்டு ஏப்ரல் 30 அன்று மீன்கொத்தி நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட கடனை வாராக் கடனாக வங்கிகள் அறிவித்தன. அப்போதே மல்லய்யாவின் கடவுச்சீட்டை அரசு முடக்கி இருக்க வேண்டும். உரிய நடவடிக்கை எடுத்து அவருடைய சொத்துகளை முடக்கி இருக்க வேண்டும். மாறாக, விஜய் மல்லய்யா கர்நாடக மாநிலத்திலிருந்து தில்லியில் மாநிலங் களின் அவைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டார் அரசியல் கட்சிகளால்!

2010 திசம்பரில் கடன் வழங்கிய வங்கி களின் கூட்டமைப்புக்கு விஜய் மல்லையா ஒரு வேண்டுகோள் விடுத்தார். வட்டியில் பெரும் பகுதியைத் தள்ளுபடி செய்யு மாறும், அசல் தொகையைத் தவணை முறையில் திருப்பித் தருவதற்குக் கால நீட்டிப்புத் தரவேண்டும் என்றும் கேட்டிருந் தார். கடன் சீரமைப்பு என்ற பெயரில் மத்திய (ரிசர்வ்) வங்கி இந்த நடைமுறைக்கு இசைவளித்துள்ளது. ஏனெனில் மூலதனப் பற்றாக்குறையால் நாட்டின் வளர்ச்சி பாதிக்கப்படாமல் இருப்பதற்காகத்தான் கடன் சீரமைப்பு முறை இருப்பதாக மத்திய வங்கி விளக்கமளிக்கிறது. வங்கி அதிகாரி களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் கையூட்டுக் கொடுத்து விஜய் மல்லய்யா வங்கிகளில் பெற்ற கடன் விபரம் :

| வ. எண். | வங்கியின் பெயர் | பெற்ற கடன் தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | பாரத ஸ்டேட் வங்கி | 1600 |
| 2. | பஞ்சாப் நேஷனல் வங்கி | 800 |
| 3. | ஐடிபிஐ வங்கி | 800 |
| 4. | பேங்க் ஆஃப் இந்தியா | 650 |
| 5. | பரோடா வங்கி | 550 |
| 6. | யுனைடெட் பேங்க் ஆஃப் இந்தியா | 430 |
| 7. | சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா | 410 |
| 8. | யூ கோ பேங்க் | 320 |
| 9. | கார்ப்பரேஷன் வங்கி | 310 |
| 10. | ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா | 150 |
| 11. | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி | 140 |
| 12. | பஞ்சாப் அண்ட் சிந்த் வங்கி | 60 |
| 13. | ஆக்சிஸ் வங்கி | 50 |

இத்தனை கோடிக்கடனையும் தன் சொந்தப் பொறுப்பில் பெற்றார் என்பது ஒன்றே, அவர் எந்த அளவுக்கு ஆளும் வர்க்கத்திடம் செல்வாக்குப் பெற்றிருந்தார் என்பதைக் காட்டுகின்றது.

2012இல் விஜய் மல்லய்யாவின் மீன் கொத்தி நிறுவனத் தின் தில்லுமுல்லுகள் அம்பலமாயின. விஜய் மல்லய்யாவின் நிறுவனம் வானூர்தி நிலையங்களுக்கான கட்டணத்தைக்




*இளம் பெண்களுடன் எப்போதுமே உல்லாசமாக இருக்கும் விஜய் மல்லய்யா*




கட்டவில்லை. பெட்ரோலிய நிறுவனங்களுக்குப் பணம் தரவில்லை. அரசுக்கு வரி செலுத்தவில்லை. ஊழியர்களுக்குச் சம்பளம் தருவதை நிறுத்திய போதுதான், மீன்கொத்தி நிறுவனம் திவாலாகி விட்டிருப்பது தெரியவந்தது. அப்போதும் ஓர் அரசனைப் போல் உலாவந்து கொண்டிருந்தார், விஜய் மல்லய்யா! 2015ஆம் ஆண்டு பெங்களூரு மட்டைப்பந்து அணியின் (IPL) முதலாளியாக வீற்றிருந்தார். 2012 அக்டோபர் மாதம் மீன்கொத்தி நிறுவனத்தின் காசோலை பணமில்லாமல் திரும்பியபோது, விஜய் மல்லய்யா மீது முதன்முதலாகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அந்நிலையில்கூட விஜய் மல்லய்யாவின் கடவுச்சீட்டை அரசு முடக்கவில்லை.

விஜய் மல்லய்யாவின் வானூர்தி நிறுவனத்துக்குச் சொந்தமாக ஒரு வானூர்த்திகூடக் கிடையாது. அனைத்துமே வெளிநாடுகளிலிருந்து வாடகைக்கோ, ஒப்பந்த அடிப்படையிலோ பெறப்பட்டவையாகும். எனவே அவற்றின் உரிமையாளர்கள் தங்கள் வானூர்திகளை எடுத்துக்கொண்டு பறந்துவிட்டனர். விஜய் மல்லய்யாவும் 2-3-16 அன்று இங்கிலாந்துக்குப் பறந்துவிட்டார்.

விஜய் மல்லய்யா இந்தியாவை விட்டு வெளியேற விடாமல் தடுத்திட, மோடி அரசு தவறிவிட்டது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின. போபர்ஸ் ஊழலில் தரகராகச் செயல்பட்ட இத்தாலி நாட்டவரான குவாத்ரோச்சி இந்தியாவிலிருந்து தப்பிச் செல்ல அனுமதித்த காங்கிரசுக் கட்சிக்கு விஜய் மல்லய்யா தப்பிச் சென்றது குறித்துப் பேசத் தகுதி இல்லை என்று நிதி அமைச்சர் அருண் ஜேட்லி எதிர் வினாத் தொடுத்திருந்தார். இதிலிருந்து தெளிவாகத் தெரிவது என்னவெனில், காங்கிரசுக் கட்சி ஆண்டாலும், பா.ச.க. ஆட்சி செய்தாலும் பெருமுதலாளிகள் எவ்வளவு தவறுகளைச் செய்தாலும் காப்பாற்றப்படுவார்கள் என்பதே ஆகும்.

ரூ.9000 கோடியை ஏப்பம் விட்ட விஜய் மல்லய்யாவின் தில்லுமுல்லுகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அரசு எந்திரம், வங்கியில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தி வந்த நேர்மையான உழைப்பாளி உழவரான கோ. பாலனை அடித்துத் துன்புறுத்தி அவமானப்படுத்தியது.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டத்தில் உள்ள சோழகன் குடிகாடு என்கிற ஊரில் தன் குடும்பத்துக்குச் சொந்தமான நான்கு ஏக்கர் நிலத்தில் வேளாண்மை செய்து வாழ்பவர் நாற்பது அகவையினரான பாலன். 2011ஆம் ஆண்டு தஞ்சை நகரில் உள்ள கோட்டக் மகிந்திரா தனியார் நிதி நிறுவனத்தில் ரூ.3,80,430 கடன் பெற்று, டிராக்டர் வாங்கினார். இந்த நிதி நிறுவனத்தினர் பாலனின் வீட்டிற்கு வந்து கடனில் டிராக்டர் வாங்குமாறு வலியுறுத்தினர். தன் தந்தை கோவிந்தசாமிக்கு வயதாகிவிட்டதாலும் (இப்போது அகவை 75), தன் அண்ணன் உடலுழைப்புச் செய்ய முடியாத வகையில் உடல் நலன் குன்றியிருப்பதாலும், பாலன், கடனில் டிராக்டர் வாங்க முடிவு செய்தார்.

இந்தக் கடன் தொகையை வட்டியுடன் 6 மாதங்களுக்கு ஒரு தவணை (ரூ.68,534) என 6 தவணைகளில் ரூ.4,11,200 செலுத்தி உள்ளார். இன்னும் இரண்டு தவணைகள் கட்ட வேண்டும். தவணையின் காலம் முடிந்ததால் அறுவடை முடிந்தவுடன் நிலுவைத் தொகையைச் செலுத்துவதாக பாலன் கோட்டக் மகிந்திரா நிதி நிறுவனத்திடம் கூறினார். ஆனால் தனியார் நிதி நிறுவனம் பாலனின் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டது.

4-3-2016 அன்று காலை 11 மணியளவில் பாலன் தன் வயலில் அறுவடை செய்த நெற்கதிர் கட்டுகளை டிராக்டரில் ஏற்றிக்கொண்டு புறப்பட்ட போது, நிதி நிறுவனத்தின் ஆட்களும், கடனை வசூல் செய்வதற்கென அது அமர்த்தியுள்ள அடி

யாள்களும், பாப்பாநாடு காவல் நிலையத்தின் ஆய்வாளர் குமாரவேல் தலைமையில் வந்த பத்துக்கும் மேற்பட்ட காவல்துறையினரும், பாலனைச் சூழ்ந்து கொண்டு அவரைத் தாக்கினர். கடன் நிலுவைத் தொகைக்கு ஈடாக அவரது டிராக்டரைப் பறிமுதல் செய்ய நீதிமன்றத்தின் ஆணையுடன் வந்திருப்பதாகக் கடுமையான சொற்களால் அவரைச் சாடியவாறே டிராக்டரிலிருந்து பாலனைக் கீழே இழுத்துப் போட்டு அடித்தனர். பாலனைக் காவல்நிலையத்துக்கு இழுத்துச் சென்றனர். அங்கு அவரை நீண்டநேரம் மண்டியிட வைத்த னர். பாலனை மிரட்டி விரைவில் கடன் நிலுவையைக் கட்டுவ தாக அவரிடம் எழுதி வாங்கிக் கொண்டபின், மாலையில் காவல்துறையினர் அவரை விடுவித்தனர். கோட்டக் மகிந்தரா நிதி நிறுவனம் பாலனின் டிராக்டரைப் பறிமுதல் செய்து எடுத்துச் சென்றுவிட்டது.

தான் தாக்கப்பட்டதையும் அவமானப்படுத்தப்பட்டதை யும் பாலன் தன் குடும்பத்தினரிடம் கூறாமல் மனம் புழுங்கிக் கொண்டிருந்தார். ஊரை விட்டுத் தொலைவில் இருந்த வயலில் நண்பகல் வேளையில் பாலன் தாக்கப்பட்டதால் ஊரார்க்கு இதுபற்றித் தெரியாமல் போயிற்று. ஆயினும் யாரோ ஒருவர் தன் கைப்பேசியில் பாலன் தாக்கப்பட்ட நிகழ்ச்சியைத் தொலைவில் இருந்து படம் பிடித்தார். அய்ந்து நாள்கள் கழித்து அவர் பாலன் தாக்கப்பட்ட நிகழ்ச்சிப் பதிவை வாட்ஸ்-அப்பில் பதிவேற்றம் செய்தார். தொலைக்காட்சியில் பாலனின் பெற்றோர் இக்காட்சியைப் பார்த்துப் பேரதிர்ச்சி அடைந்தனர்.

பாலன் தாக்கப்பட்ட நிகழ்ச்சியின் பதிவைக் கண்ட தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து தமிழக அரசின் தலைமைச் செயலாளர், காவல்துறை இயக்கு நர் ஆகியோருக்கு இதுகுறித்து விளக்கமான அறிக்கையை இரண்டு கிழமைகளுக்குள் அனுப்புமாறு மடல் அனுப்பி யுள்ளது. வழக்கம்போல் தமிழகத்தின் எல்லா எதிர்க்கட்சி களும் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தன. தமிழக அனைத்து உழவர் சங்கங்களின் கூட்டமைப்பினர் தனியார் நிதி நிறுவனத்தின் முன்பும், மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவாயில் முன்பும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

**முதலாளிகள் வங்கிகளில் கோடிக்கணக்கில் கடன் வாங்குகின்றனர். அவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்து வதைத் தள்ளிப்போடவும், வட்டியைக் கட்டாமல் தவிர்க்கவும், அரசே பல வழிவகைகளை அமைத்துத் தந்துள்ளது.**

**உண்மையான சில பொருளாதார நலிவுக் காரணங் களால் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழலில், முதலாளிகள் தங்கள் தொழிலைத் தொடர்ந்து நடத்திட - நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, கடன் மறுசீரமைப்புத் திட்டத்தைப் (Restructuring of stressed assets) பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படு கின்றனர்.**

ஆனால் உழவர்கள் வறட்சி, வெள்ளம், பனி, பூச்சி நோய் தாக்குதல் போன்ற காரணங்களால் பயிர் எந்த அளவுக்குப் பாழானாலும் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று கெடுபிடி செய்யப்படுகின்றனர்.

மத்திய வங்கியின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை, முதலாளிகள் வாராக் கடனாக்கித் தள்ளுபடி செய்திட வைக் கின்றனர். வங்கிகளின் வாராக்கடன் முன்பு "மோசமான கடன்" என்ற பெயரால் குறிக்கப்பட்டது.1991இல் புதிய பொரு ளாதாரக் கொள்கை நடப்புக்கு வந்தபின், வாராக் கடனுக்கு "செயல்படாத சொத்து" (Non-Performing Asset) என்று செல்லமான பெயர் சூட்டப்பட்டது.

2015 மார்ச்சு இறுதியில் பொதுத்துறை வங்கிகளின் வாராக் கடன் ரூ.2,79,000 கோடி. 2012-2015 ஆகிய மூன்று நிதி ஆண்டுகளில் மட்டும் பொதுத்துறை வங்கிகள் ரூ.1,14,152 கோடி வாராக் கடனைத் தள்ளுபடி செய்துள்ளன. அதன் விவரம் :

| | |
|---|---|
| 2012-2013இல் | ரூ.27,231 கோடி |
| 2013-2014இல் | ரூ.34,409 கோடி |
| 2014-2015இல் | ரூ.52,512 கோடி |
| | ---------------- |
| மொத்தம் | ரூ.1,14,152 கோடி |
| | ---------------- |

இப்படித் தள்ளுபடியான கடன்களைப் பெற்றவர்கள் யார்?

வங்கிகளில் பெருந் தொகைகளைக் கடனாகப் பெற்று அவற்றைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் மற்றும் கடன் தள்ளுபடியின் பயன்களைப் பெற்றவர்கள் பட்டியலைப் பொதுமக்களின் பார்வைக்கு வெளியிட வேண்டும் என்று வங்கிகளின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பும் மற்றும் பலரும் நீண்டகாலமாகக் கோரி வருகின்றனர். வங்கி வாடிக்கையாளர்களின் தகவல்கள் இரகசியமாகப் பாதுகாக் கப்பட வேண்டும் என்ற போர்வையில் இந்தக் கோரிக்கை, இதுவரை வங்கி நிர்வாகங்கள் மற்றும் ரிசர்வ் வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

வீரப்பமொய்லி தலைமையிலான நிதித்துறை நாடாளு மன்ற நிலைக்குழு தனது அறிக்கையை அண்மையில் நடுவண் அரசிடம் அளித்தது. அந்த அறிக்கையில் 2016 ஏப்பிரல் மாதம் பொதுத்துறை வங்கிகளின் வாராக் கடன் ரூ.4,00,000 கோடியாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் அந்த அறிக்கையில், "எல்லாக் கடன்களையும், குறிப்பாக வசதி இருந்தும் வேண்டுமென்றே திருப்பிச் செலுத் தாத கடனாளிகளின் கடனைத் தீவிரமான ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். இது பற்றிய ஆய்வறிக்கையை ஆறு மாதங்களுக்குள் அரசுக்கு அளிக்க வேண்டும். ரிசர்வ் வங்கி எல்லாப் பெரிய கடன்களையும் கண்காணிக்க அதிகாரம் படைத்த குழுக்களை நியமிக்க வேண்டும். வேண்டுமென்றே திருப்பிக்கட்டாத நிறுவனங்களின் நிருவாகத்தைக் கட்டாயமாக மாற்ற வேண்டும். அதிக அளவில் கடன் வாங்கி, வேண்டு மென்றே திருப்பிக் கட்டாத முதல் 30 பெரிய கடனாளிகளின் பெயர்களை வெளியிட வேண்டும். அவர்களின் பெயர்களை



*உழவர் பாலன் தாக்கப்பட்டதைக் கண்டித்து தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் செய்யும் விவசாய சங்கத்தினர்*

இனியும் இரகசியமாக வைத்திருப்பதில் எந்த நியாயமும் இல்லை. இதற்குத் தகுந்தாற்போல் ரிசர்வ் வங்கி தன்னுடைய வழிகாட்டும் கொள்கைகளை மாற்றி அமைக்க வேண்டும்'' என்று இந்நிலைக்குழு வலியுறுத்தி உள்ளது. இப்பரிந்துரை செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடியும் என்பதைக் கடந்த கால வரலாறு காட்டுகிறது.

இதேபோன்றதோர் அறிவுறுத்தலை அண்மையில் உச்சநீதிமன்றம் வழங்கியுள்ளது. ''வங்கிகளிடமிருந்து 500 கோடி உருபாவுக்கு மேல் கடன்பெற்று, அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள், கடந்த 5 ஆண்டுகளில் 500 கோடி உருபாவுக்கு மேல் மறுசீரமைப்புக்கு உள்படுத்தப்பட்ட கடன்களின் விவரங்கள் மற்றும் கடன், தள்ளுபடி சலுகைகளைப் பெற்ற கடன்காரர்களின் விவரங்கள் ஆகியவைகளை முத்திரையிடப்பட்ட உறையில் உச்சநீதிமன்றத்திடம் அளிக்க வேண்டும்'' என்று அதில் உச்சநீதிமன்றம் கோரியுள்ளது.

இங்கிலாந்திற்கு ஓடிய பின் விஜய் மல்லய்யா தன் சுட்டுரையில் (டுவிட்டர்), ''என்னைவிட அதிகமாகக் கடன் வாங்கி ஏமாற்றி இருப்பவர்களை விட்டுவிட்டு என்னை மட்டும் வேண்டுமென்றே ஊடகங்கள் தவறான கண்ணோட்டத்தில் சித்திரிக்கின்றன'' என்று கூறியுள்ளார். இந்தியப் பெருமுதலாளிகள் மக்களின் உழைப்பைக் குறைந்த கூலிக்குச் சுரண்டிக் கொழுப்பதுடன், மக்களின் சேமிப்புப் பணத்தையும் வங்கிகளின் கடன்கள் மூலம் கொள்ளையடிக்கின்றனர். இதுதவிர, இந்தியப் பெருமுதலாளிகளுக்கு ஆண்டுதோறும் உற்பத்தி வரி விலக்கு, ஏற்றுமதி-இறக்குமதி வரி விலக்கு, கார்ப்பரேட் நிறுவன வரிவிலக்கு என்கிற பெயர்களில் அய்ந்து இலட்சம் கோடி உருவாவுக்கு மேல் சலுகைகள் வழங்கப்படுகிறது. எனவேதான் இது முதலாளிகளைப் பேணும் அரசு என்று சொல்கிறோம்.

அதேவேளையில் இந்த அரசுகளும், அவற்றின் திட்டங்களும் செயல்பாடுகளும் உழைக்கும் மக்களுக்கு எதிரானவைகளாக இருக்கின்றன. குறிப்பாக, புதிய பொருளாதாரக் கொள்கையைச் செயல்படுத்தத் தொடங்கிய பின் வேளாண்மைத் தொழிலும் அதைச் சார்ந்து வாழ்வோரின் நிலையும் நலிவடைந்து கொண்டே வருகிறது. எனவேதான் இந்திய அரசின் கணக்குப்படி 1997க்குப் பிறகு, மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட உழவர்கள் கடன்சுமையால் தற்கொலை செய்துகொண்டனர்.

4-3-16 அன்று தஞ்சை மாவட்டத்தில் உழவர் பாலன் தாக்கப்பட்டு இழிவுபடுத்தப்பட்ட செய்தி நாளேடுகளில் வந்து கொண்டிருந்தபோது, அரியலூர் மாவட்டத்தில் ஒரத்தூர் எனும் சிற்றூரில் அழகர் எனும் இளம் உழவர் டிராக்டருக்கான கடன் தவணையைச் செலுத்தவில்லை என்று தனியார் நிதி நிறுவனத்தின் ஆட்கள் அவரைப் பொது இடத்தில் அவமானப்படுத்தியால், 10-3-2016 அன்று தற்கொலை செய்துகொண்டார்.

விஜய் மல்லய்யாவுக்குச் சொந்தமான ஆடம்பரமான வானூர்தி 12-4-2016 அன்று ஏலத்தில் விடப்பட உள்ளது. இதன் விலை 266 கோடி உருவா. இத்துடன் 6000 சதுர அடி பரப்பு இடம் இருக்கிறது. மல்லய்யா இதை வீடாகவும், அலுவலகமாகவும் பயன்படுத்தினார். கருத்தரங்க அறை, படுக்கை அறை, குளியல் அறை என வானில் பறக்கும் சொகுசு பங்களாவாக இந்த வானூர்தி இருந்தது.

விஜய் மல்லய்யா போன்ற இந்தியப் பெருமுதலாளிகளின் சுரண்டலையும் கொள்ளையையும், அவர்களுக்குத் துணைபோகும் ஆட்சியாளர்களையும் எதிர்த்துப் போராடுவது ஒன்றே தீர்வாகும். இரண்டு குழந்தைகளின் தாய் பிரேமலதா என்பவர் தனக்குச் சரியென்றுபட்ட முறையில்

மல்லய்யா தப்பிவிட்டதை எதிர்த்துப் போராட்டம் நடத்தி இருக்கிறார்.

தெற்கு மும்பை பகுதியில் வாழும் பிரேமலதா தன் இரண்டு குழந்தைகளுடன் பயணச்சீட்டு எடுக்காமல் தொடர் வண்டியில் பயணம் செய்தார். பயணச்சீட்டு ஆய்வாளர் இவரை ஆய்வு செய்த போது ரூ.260 அபராதம் கட்ட வேண்டும் என்று தெரிவித்தார். தொடர்வண்டித் துறையின் காவல்துறையினர் பிரேமலதாவைக் கைது செய்ய முயன்ற போது, "வங்கிக்கடன் ரூ.9000 கோடியைத் திருப்பிச் செலுத்தாமல் நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற முதலாளி விஜய் மல்லய்யாவை முதலில் கைது செய்யுங்கள்; அதன் பிறகு என்னைக் கைது செய்யுங்கள்" என்று பிரேமலதா கூறிய தைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தனர். மற்றவர்கள் அவருக்காக அபராதத் தொகையைச் செலுத்த முன்வந்ததையும் பிரேம லதா ஏற்க மறுத்துவிட்டார். தொடர் வண்டி நிலையத்தில் கிட்டத்தட்ட 12 மணிநேரம் இதே வினாவை எழுப்பியவாறு போராடினார்.

அதிகாரிகள் பிரேமலதாவின் கணவர் பன்சாரியை வரவழைத்தனர். ஆனால் பிரேமலதா அவரையும் அபராதம் செலுத்தவிடாமல் தடுத்துவிட்டார். இறுதியில் நீதிமன்றத்தில் நேர் நிறுத்தப்பட்டார். அங்கும் அபராதம் கட்டமறுத்து ஏழுநாள் சிறைத்தண்டனையை ஏற்றார்.

சுதந்தரப் போராட்டக் காலத்தில் வரி கொடா இயக்கம் ஆங்கிலேயருக்கு எதிராக நடத்தப்பட்டது. அதுபோல் அமைப் பாக ஒன்றுதிரண்டு போராடாமல் பிரேமலதா போல் தனி ஒருவராக - பயணச்சீட்டு எடுக்காமல் போராடியதை முன் மாதிரியாகக் கொள்ள கூடாது.

ஆயினும் தன் இரண்டு குழந்தைகளுடன் 12 மணி நேரம் போராட்டக் களத்தில் நின்ற அவரின் நெஞ்சுரமும், அபராதம் கட்ட மறுத்துச் சிறைத் தண்டனையை ஏற்ற போர்க்குணமும் நெறிபிறழ் முதலாளித்துவத்தின் (Crony Capitalism) குருதி தோய்ந்த கொடிய முகத்தை அம்பலப் படுத்திட இன்று முகாமையாகத் தேவைப்படுகின்றன. இந்தப் போலியான சனநாயகக் கட்டமைப்பை வீழ்த்துவதே உண்மையான மக்கள் நாயக அரசியல் என்பதை வெகு மக்களுக்குப் புரிய வைத்துப் போராடச் செய்வதே நமது கடமையாகும். ❖

## ஆ. கற்பகம் அம்மாள் குடும்ப நலன் : வே. ஆனைமுத்து உசாவினார்

வளவனூர் ஆ. குணசேகரன், ஆதிமூலம்-கற்பகம் அம்மாள் மகன் ஆவார். இவர் 1982-1986இல் மா.பெ.பொ.க. இளைஞரணியில் பணியாற்றினார். இப்போது அரகண்ட நல்லூரில் வாழும் கற்பகம் அம்மாள் அவர்களையும், மகன்கள் ஆ. குணசேக ரன், திருஞானம், மகள் பழநியம்மாள், பெயரன்கள் கதிரவன், ஆனந்து ஆகியோரையும் வே.ஆனைமுத்து, ஆ.கு. ஆறுமுகம் இருவரும் நேரில் 4-3-2016 மாலையில் கண்டு நலம் உசாவினர்.

# புதிய பாப்பாப் பாட்டு...!

வேலூர் **ம.நாராயணன்**



ஆடி விளையாடு பாப்பா - தொடர்
ஆட்டந் தான் அரசியல் பாப்பா...!
கூடி விளையாடு பாப்பா - துளிக்
கொள்கையும் நமக்கேனோ பாப்பா...!

காலை எழுந்தவுடன் தாளில் - ஆளும்
கட்சியுமே எதுவென்றே பார்ப்பாய்!
மாலைக்குள் கட்சிகளில் சேர்வாய் - உன்
மான அவமானம் துறப்பாய்...!

மெய் சொல்லலாகாது பாப்பா - நம்
மனச்சாட்சிக் கதுபகையே பாப்பா...!
பொய்யைப் பன்முறை நீ சொன்னால் - மெத்தப்
படித்தவரும் நம்பிடுவார் பாப்பா...!

கடவுள் இல்லையெனச் சொல்வாய் - தேர்தல்
காலம் கோயிலுக்குள் செல்வாய்...!
மடமை ஒழிகவென முழங்கு - மறுநாள்
மண்சோறு விழுங்கிடவே துவங்கு...!

எதிலும் 'கமிஷன்'வைஶ்ரீ பாப்பா - அதில்
எவர்க்குமே தனிச்சலுகை வேண்டாம்!
மதில்மேல் பூனையைப் போல் இருப்பாய் - பதவி
வழங்கிடும் கட்சிக்குள்ளே குதிப்பாய்...!

தொண்டருக்கு நாமமிடு பாப்பா - அவர்
தியாகங்கள் அன்றேமற பாப்பா...!
மண்டைக்குள்ளே கனமேற்று பாப்பா - இந்த
மாநிலமே...! பின்தொடரும் பாப்பா...!

(* அருமைப் 'பாப்பா'விற்கு - ஓர்
அரசியல்வாதியின் அறிவுரை...!)

# ‘திட்டமிட்டே மாணவியர் கொல்லப்பட்டனர்’ கோர்ட்டில் கல்லூரி சேர்மன் ‘திடுக்’ தகவல் : கொலையாளிகளைக் கண்டுபிடிக்கக் கோரிப் போராடுவோம்! வாருங்கள்!

மேலே கண்ட இரண்டு வரித் தலைப்பிட்டு, சென்னை ‘‘தினமலர்’’ 29-1-2016 வெள்ளிக்கிழமை இதழில் செய்தி வெளிவந்தது.

கள்ளக்குறிச்சி நீதிமன்றத்தில், 28-1-2016இல் காவல்துறையினரால் குற்றவாளியாக நிறுத்தப்பட்ட, ‘‘S.V.S. ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை’’ நிறுவனத்தின் தலைவராகச் செயல் படும் வாசுகி சுப்பிரமணியன் என்பவரின் வாக்கு மூலத்தின் ஒரு பகுதியே தலைப்பில் உள்ள இரண்டு வரிச் செய்தி.

நீதிமன்றத்தில், வாசுகி கூறிய செய்திதான் என்ன?

**‘‘மூன்று மாணவியரும் திட்டமிட்டே கொல்லப்பட்டுள்ளனர். போலீசார் வழக்கைத் திசைதிருப்ப முயல்கின்றனர். தீவிர விசாரணை வேண்டும்’’** என்றும்;

**‘‘..... கல்லூரியை மூடவேண்டும் என, கல்லூரி நிர்வாகத்திற்கு எதிராகச் சிலர் செயல்பட்டு வந்தனர். என் கல்லூரியை மூடிக் காட்டுகிறேன் என, போலீஸ்காரர் ஒருவர் சபதமிட்டுச் சென்றார்’’** என்றும் - வாசுகி சுப்பிரமணியன் நீதிபதி முன்னர் கூறியுள்ளார்.

இச்செய்தி வெளிவந்த சமயத்தில், நான் நேரில் கள ஆய்வுக்குச் செல்ல முடியாத அளவுக்கு நோய்வாய்ப்பட்டிருந்தேன்.

4-3-2016, 5-3-2016 நாள்களில் திருக்கோவிலூரை அடுத்து உள்ள மணம்பூண்டிக்குச் சென்று, நான் 1954-56இல் குடியிருந்த அவ்வூரில் - 1920களில் வாழ்ந்த சைவ சமயக் குரவரும், தமிழ்ப் பேறறிஞருமான - தந்தை பெரியாரின் நண்பர் புலவர் ம.ரா. குமாரசாமிப்பிள்ளை அவர்களின் பிறந்த நாள் படத்திறப்பு விழாவில் பங்கேற்க நேர்ந்தது.

அதை ஒட்டி கள்ளக்குறிச்சி - சேலம் நெடுஞ்சாலையில் உள்ள பங்காரம் என்ற ஊருக்கு நேரில் சென்று ஆய்வு செய்ய விரும்பினேன். அதற்கு உதவக்கூடிய பொறுப்பானவர்களை நேரில் கண்டு பேசி ஏற்பாடு செய்யும்படி, மா.பெ.பொ.க. விழுப்புரம் மாவட்டச் செயலாளர் தோழர் ஆ.கு. ஆறுமுகம் அவர்களை வேண்டிக் கொண்டேன்.

அவர் நேரில் கள்ளக்குறிச்சிக்கும், தியாக துருகத்துக்கும் சென்று முறையே கவிஞர் அரங்க. செல்லமுத்து, புலவர் கு. சீத்தா ஆகியோரைக் கண்டு பேசி விட்டு, எனக்குத் தெரிவித்தார்.



*கொலை செய்யப்பட்டுக் கிணற்றில் வீசப்பட்ட மருத்துவ மாணவிகள்*

நான் 3-3-2016 வியாழன் மாலை மகிழுந்தில் தியாக துருகத்துக்குச் சென்று, அங்கு புலவர் கு. சீத்தா அவர்கள் வீட்டில் தங்கினேன். அவரிடமும், சமூகப் பெருந்தொண்டர் ஆசிரியர் பெ. நாகராசன் ஆகியோரிடமும் பங்காரம் கல்லூரி மாணவிகள் கொலைச் செய்தி பற்றிக் கலந்து பேசினேன்.

4-3-2016 வெள்ளி காலை 9 மணிக்குக் கள்ளக்குறிச்சி சென்று, கவிஞர் அரங்க. செல்லமுத்து அவர்களும், புலவர் கு. சீத்தா, நான் ஆகிய மூவரும் நேரே பங்காரம் சென்றோம். அக்கல்லூரிக்கு அருகில் உள்ள ஒரு தொழிற்சாலைக்கு எதிரே, சாலை ஓரத்தில் மகிழுந்தை நிறுத்திவிட்டு, நாங்கள் மூவரும் ‘‘எஸ்.வி.எஸ். கல்லூரி’’ நோக்கிச் சென்றோம்.

அங்கே எந்த ஆள்நடமாட்டமும் இல்லை. சுடுகாட்டு அமைதி நிலவியது.

கல்லூரி அமைந்துள்ள இடம் பச்சைப் பசேலென, மரங்கள் மண்டிய தோப்பாக இருந்தது. கல்லூரி முதன்மைக் கட்டடம் அந்தத் தோப்புக்குப் பின்பக்கத்தில் வானுயர நின்றது.

தோப்பாக உள்ள இடத்தில் யாரும் தென்படவில்லை. அங்கு மதில் சுவர் இல்லை. கம்பியால் கட்டிய வேலிதான் இருந்தது. நுழைவாயில், கருப்பு நிற இரும்பு பெஞ்சு ஒன்றைக் குறுக்கே போட்டு,




‘‘அந்தக் கொலையைப் பத்திச் சொல்லுங்கய்யா’ என்றார், கவிஞர் செல்லமுத்து.

‘எனக்கென்ன தெரியும்?’ என்றார், ஆய்வர்.

‘இப்பத்தானே- ‘‘கொலை’’ன்னு சொன்னிங்க’ என்றார், செல்லமுத்து.

‘அய்யய்யோ அப்படி நான் சொல்லலியே’ என்று கூறிக் கொண்டே நழுவினார், ஆய்வர்.

நாங்கள் மூவரும் மகிழுந்து நிற்கும் இடம்நோக்கி நடந்தோம். ஒரு பெண்மணி அங்கே கம்பங்கூழ் விற்றுக் கொண்டிருந்தார். ஓட்டுநர் கூழ் குடித்தார்.

அங்கிருந்த பெண்மணியிடம், ‘மூன்று பெண்கள் பிணமும் கிடந்த கிணறு எங்கே அம்மா இருக்கிறது?’ என்று கேட்டோம்.

‘அந்தப் பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலே பெரிய கம்பம் நிக்குதே, அதுக்கு எதித்தாப்போலத்தான், கிணறு இருக்கு’ என்றார். மகிழுந்தில் ஏறி, மூவரும் அங்கே போனோம்.

அங்கே கல்லூரிக்கு நேர் எதிரில் சாலையை ஒட்டி, சச்சதுரமான ஒரு பாறைக் கிணறு உள்ளது. 40 அடி ஆழத்துக்குக் கீழே தண்ணீர் கிடந்தது. முப்பது அடி ஆழத்தில் நாலாபக்கமும் சலசலவென தண்ணீர் ஊறி, கிணற்றுக்குள் விழுகிறது. அந்தக் கிணற்றின் மேல்வாய், உள்வாய், கல்கட்டு இவற்றை அழகுறப் படம் எடுத்தார், புலவர் கு. சீத்தா. அவர் கைதேர்ந்த படப்பிடிப்பாளர் ஆகிவிட்டார்.

கிணற்று மேட்டில், வாழைத்தோப்பு. அங்கு ஓர் 50 அகவை பெரியவரும் அவருடைய துணைவி யாரும், இன்னொரு பெண்மணியும் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

‘அய்யா! நீங்க இந்த நிலச் சொந்தக்காரங்களா?’ என்று கேட்டோம்.

‘இல்லிங்க! நாங்க குத்தகைக்குப் பயிரிடுகிறோம்.’

‘இங்கேதான் பெண்கள் பிணத்தை எடுத்தாங்களா?’ எனக் கேட்டோம்.

‘நானும் என் மனைவியும் சனிக்கிழமை (சனவரி 23) பகல் இரண்டேமுக்கா மணிக்கு இங்கே வந்தமுங்க. மூணு புத்தகப் பையும் மூணு சோடி செருப்பும் இங்கே கெடந்தது. என் மனைவி ஒரு பையைத் திறந்து பாத்தா. அதுலே இந்தக் கல்லூரியிலே படிக்கிற

யாரும் புகமுடியாதபடி தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அந்த வாயிலையும், தோப்பையும் படம் பிடித்தோம்.

அந்த வாயிலின் இரண்டு பக்கங்களிலும், நெடுஞ் சாலையை நோக்கி நடப்பட்டிருந்த இரண்டு பெயர்ப் பலகைகளையும் படம் எடுத்தோம். தோப்புக்குள் நுழைய முடியாததால், நுழைவாயிலின் வலப்பக் கத்தில் உள்ள பழைய கட்டடத்தைப் படம் எடுத்தோம்.

தோப்பை ஒட்டி, நுழைவாயிலுக்கு இடப்பக்கம் வேலிக்கு வெளியே இரண்டொரு கெட்டிக் கட்டடங்கள் உள்ளன. அங்கு குடியிருப்பவர்களிடம் போய் வினவலாம் என்று முயன்றோம்.

நாங்கள் மூவரும் நெடுஞ்சாலைக்கும் கல்லூரி பெயர்ப் பலகைகளுக்கும் இடையில் நின்று கொண்டு, புலவர் கு. சீத்தா அவர்கள் தம் கைப்பேசியில் எடுத்த நான்கைந்து படங்களையும் சரிபார்த்துக் கொண்டிருந்தோம்.

சாலையில் எங்கள் ஓரமாக இரு உருளைதானி வண்டியில் (Auto) ஒருவர் வந்து நின்றார். ‘நீங்கள் யார்?’ எனக் கேட்டார். விவரம் சொன்னோம்.

தன்னைப் பற்றி, ‘நான் காவல்துறை துணை ஆய்வர் (Sub-Inspector). இந்தக் கல்லூரிக் கட்டடங்கள் பூட்டப்பட்டுள்ளன. இங்கு காவல் காக்கிறேன்’ என்றார்.

‘அனுமதி இல்லாமல் யாரும் இங்கே வரக் கூடாதே’ என்றார்.

‘எங்களைப் போன்றவர்களுக்கு இதுதான் வேலை. எனக்கு 81; இந்தப் பெரியவருக்கு 91. நாங்கள் இதே போன்ற வேலையைச் செய்பவர்கள்’ என, புலவர் கு. சீத்தா சிரித்துக் கொண்டே விடை சொன்னார்.

‘இது கொலை நடந்த இடமாச்சே’ என்றார் - துணை ஆய்வர்.



*மூன்று மாணவிகள் இறந்து கிடந்த கிணறு*

பொண்ணு பேர் இருந்துது. அதைப் பார்த்ததும் கூச்சல் போட்டோம்' என்று, அந்தப் பெரியவர் கூறினார்.

அந்த நேரம் அதே காவல்துறை ஆய்வர், அங்கே வந்துவிட்டார்.

நாங்கள் பேச்சின் தலைப்பை மாற்றினோம்.

'நீங்க எந்த ஊரிலே இருந்து இங்கே வந்தீங்க!'

'திருச்செங்கோடு பக்கத்துலே இருந்து வந்தேன். கவுண்டர், நானு'.

'சொந்தமா நிலம் வாங்கியிருக்கீங்களா?'

'வாங்கியிருக்கோமுங்க, அதோ அந்தப் பள்ளிக்கூடத்து வாசப்படிக்கு இடப்பக்கமா இருக்கிற நிலம் என் சொந்த நிலமுங்க!'

'அங்கே இருக்கிற வீடு உங்களது தானா?'

'ஆமாங்க! ஆனா, இந்த அம்மா, என் நெலத்தையும் கைப்பத்திக் கொள்ள ரொம்ப நாளாத் தொந்தரவு கொடுக்கிறாங்க; மெரட்டுறாங்க. நான் சின்ன வயசி லேயே இங்கே வந்துட்டேன். நல்லா உழைச்சி சம்பாதிக்கிறேன். அதனாலேதான் இந்த நிலத்தை குத்தகைக்குப் பயிரிடறேன்.'

'ஆமாம், தண்ணி 40 ஆழத்திலே கிடக்குதே.'

'இப்பத்தான் அப்புடி இருக்கு. அந்தச் சம்பவம் நடந்தப்போ, மேலே சுத்துக்கட்டுப் பார் வரைக்கும், தண்ணி நிண்ணுதுங்கோ' என்றார்.

மேலே, கல்கட்டிலிருந்து 4 அடிக்கும் கீழே - ஒரு பக்கத்தில் மட்டும் 5 அடி அகல, பார் இப்போதும் இருக்கிறது.

ஊற்று வற்றாத கிணறு! இனி, நிலைமையின் உண்மைத் தன்மை என்ன?

1. வாசுகி சுப்பிரமணியன் பெரிய அளவுக்குப் பக்கத் துக்கு நிலங்களை விலைக்கு வாங்கிட, அடியாள் களைக் கொண்டு மிரட்டி இருக்கிறார்.
2. அங்கு படிக்கும் மாணவ-மாணவிகளில் அதிகம் பேர் பட்டியல் வகுப்பினர், (ஆதித்திராவிடர்). அவர் களுக்குப் படிப்புக்கென்று, இந்திய அரசு பணம் தரு கிறது. அந்தப் பணத்தையும் பெற்றுக் கொண்டு, மேற்கொண்டு மாணவிகளிடம் உணவுக்கு, அதற்கு - இதற்கு என்று கெடுபிடி செய்து பணம் பெற்றிருக்கிறார்கள்.
3. **நிர்வாகச் சீர்கேட்டை எதிர்த்து மாவட்ட ஆட்சியரி டம் மாணவியர் முறையிட்டிருக்கிறார்கள். ஆட்சி யரும் மற்ற அதிகாரிகளும் - வேண்டுமென்றே எதையும் கண்டுகொள்ளவில்லை.**
4. **அதிகாரிகளிடம் முறையிட்டவர்களில் - கொலைக்கு ஆளான மாணவியர் மோனிஷா (20), சரண்யா (20), பிரியங்கா (21) மூவரும் முன்னால் நின்ற வர்கள்.**



*மாணவிகளின் படுகொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்*

5. **'போலீஸ்காரர் ஒருவர் சபதமிட்டார்' என, வாசுகி, நீதிபதி முன்னர் பதிவு செய்துள்ளார். அந்த "ஒரு போலீசுக்காரர்" யார்? அவரை அடையாளம் காட்டு வது யார் பொறுப்பு? வாசுகி சுப்ரமணியனின் பொறுப்பு அல்லவா? - என்பவை மூடு மந்திரங்களாகவே இருக்கின்றன.**

**இன்றையத் தமிழக அரசும், தமிழகக் காவல் துறையும் கொலை செய்த குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதையும், இந்தக் கல்லூரியின் முறைகேடு களைப் பற்றியும் ஆய்வு செய்வார்களா? நீதி வழங்கு வார்களா? இனியும் அங்கே படிக்கும் மாணவர்களுக் கும், அண்டையிலுள்ள நில உடைமையாளர்களுக்கும் பாதுகாப்பு இருக்குமா? என்பது மாபெரும் கேள்விக் குறி!**

**நீதி கோரி, எல்லோரும் குரல் கொடுப்போம்! போராடுவோம்! வாருங்கள்!**

**- வே. ஆனைமுத்து**

## தந்தை பெரியாரின் தொலைநோக்கு!

# இந்து ஆதிக்கம் பரவாமல் தடுக்க...

"இந்திய முஸ்லீம்களுக்குப் பாக்கித்தான் கிடைக்காமற் போனால், மத்திய கிழக்குப் பகுதிகளிலும் ஹிந்துக்களின் ஆதிக்கம் பரவிவிடும்" என்று, கெய்ரோவில் பேசிய தோழர் ஜின்னா குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தக் கூற்று எவ்வளவு உண்மை என்பதைப் பலர் அறியமுடியாது. ஹிந்து ஆதிக்கம் என்றால் என்ன என்பதையே அறியக்கூடாத, உணர முடியாத மக்கள், லீக் தலைவரின் இக்கூற்றிலுள்ள உட்கருத்தை எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? ஆரம்பத்தில் சாதாரண கிழக்கிந்தியக் கம்பெனியாயிருந்த ஒரு வியாபாரக் கும்பல், நாளடைவில் எவ்வாறு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமாகவும், சூரியன் மறையாத சாம்ராஜ்யமாகவும் ஆயிற்று என்ற வரலாற்றை உணர்ந்தவர்கள், 'ஹிந்துக்கள் ஆதிக்கம்' என்பதை அலட்சியமாகக் கருதமாட்டார்கள்.

சுமார் 1,000 ஆண்டுகளுக்கு முன்பு "ஹிந்து" என்ற பெயரே உலகில் எந்த மொழியிலும் இருந்திருக்க முடியாது. இன்று வரையில், "ஹிந்து" என்ற வார்த்தையின் பொருளையோ, விளக்கத்தையோ, தத்துவத்தையோ எவரும் கூறியதே இல்லை. இதற்கு ஆதாரமும் இல்லை. சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இந்நாட்டில் குடியேறிய அந்நியர் - ஒரு சிறு கூட்டம் - ஏதோ சில பழக்கவழக்கங்களை இந்நாட்டில் புகுத்தினர். அவை நாளடைவில் பெருகிப் பெருகி, ஒரு மதம் என்ற பெயரையும் பெற்றுவிட்டது. 200 ஆண்டுகளில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த நாட்டை எவ்வளவு பாழ்ப்படுத்தி மக்களைப் பிரித்துவிட்டதோ, அதைவிட அதிகமாக, 2000 ஆண்டுகளில் ஆரியர் ஏகாதிபத்தியம் இந்நாட்டு மக்களைப் பிரித்து வைத்து, பொருளையும் அறிவையும் கொள்ளையடித்து வாழ்க்கையைப் பாழ்படுத்திவிட்டது.

**எந்த அளவுக்கு? "நான் பிரிட்டிஷ் பாதுகாப்பாளன்" என்று சொல்லிக் கொள்வதற்கு வெட்கப்படாத மனிதப் பிறவிகள் எப்படிப் பெருகியுள்ளதோ, அதைப் போலவே, "நான் ஹிந்து" என்று கூறிக்கொள்வதற்கு வெட்கப்படாத மனிதப் பிறவிகளும் பெருகிவிட்டன.**

**"நான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குத் துணையாயிருப்பவன்" என்று கூறுவதில் பெருமைப்படும் அடிமைகள் பெருவாரியாக இருப்பது போலவே, "நான் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவன்; ஆரியத்திற்கு அடிமை" என்று கூறிப் பெருமைப்படும் புன் மக்களும் மலிந்து கிடக்கின்றனர்.**

ஹிந்துக்கள் ஆதிக்கம் ஒழியாத வரையில் முஸ்லிம்களுக்கு நிரந்தர சமாதானமும், சுதந்தர வாழ்க்கையும் எப்படி இருக்கமுடியாதோ, அதுபோலவே, திராவிடர்களுக்கும் தன்மானமுள்ள சுயேச்சை வாழ்க்கை ஏற்படமுடியாது. பிரிட்டிஷார் ஆளுகைக்கு உட்பட்டிருக்கும் போதே, பல்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்கள் உள்ள சர்க்கார் ஆபீஸ்களிலும் போலீஸ் ஸ்டேஷன்களிலும், போஸ்டாபீஸ்களிலும், தோரணம் கட்டி, குங்குமம், மஞ்சள் வைத்து சரஸ்வதி பூஜையைக் கொண்டாடுகிறார்கள் என்றால், முழு சாம்ராஜ்யம் (ராமராஜ்யம்) வந்த பிறகு, ஹிந்துக்களல்லாத திராவிடர்களையும், கிருஸ்துவர்களையும், முஸ்லிம்களையும், ஆங்கிலோ இந்தியர்களையும், சீக்கியர்களையும், பௌத்தர்களையும், ஜைனர்களையும், பார்ப்பான் காலில் விழுந்து கும்பிடும்படிக் கட்டாயப் படுத்தமாட்டார்கள் என்பதை எப்படி நம்பமுடியும்? இது ஒரு சிறு உதாரணம். இதைப் போல எல்லாத் துறைகளிலும் அநேக உதாரணங்களைக் கூறமுடியும்.

**எனவே, ஹிந்துக்கள் ஆதிக்கத்தை முஸ்லீம் லீக் தலைவர் வெறுப்பதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக, திராவிடர் கழகத் தலைவரும் வெறுப்பதில் ஆச்சரியமில்லை. வெள்ளையர் ஆதிக்கத்தைவிடக் கொடுமையானதும், சமுதாயத்தைச் சின்னாபின்னமாக்கக் கூடியதும், முதலாளித்துவத்திற்கு ஆக்கமளிக்கக்கூடியதுமான, ஹிந்து ஆதிக்கத்தை உடனடியாக முறித்துத்தள்ள வேண்டியது நம் முதல் வேலையாக இருக்கிறது.**

**இன்று ஏற்படவிருக்கும் ஆட்சி மாறுதலைப் பயன்படுத்திக்கொண்டு, சமுதாய அமைப்பில் ஒரு தலைகீழான புரட்சியை ஏற்படுத்தியாக வேண்டும். இந்தக் காரியத்திற்கு வேண்டிய சூழ்நிலையை உண்டாக்குவதுதான் நம் கழகத்தின் வேலை. இந்தப் புரட்சி முயற்சியில் வெள்ளை ஏகாதிபத்தியமும், ஹிந்து ஆதிக்கமும் மட்டுமே ஒழிந்தால் போகாது. உள்நாட்டு முதலாளித்துவ ஆதிக்கமும் மண்மூடிப் போகுமாறு செய்ய வேண்டும். இம்மூன்று பணிகளையும் ஏற்றுக்கொண்டிருப்பதால்தான், இதர கட்சிகளைக் காட்டிலும் நம் கட்சிக்கு அதிகமான பொறுப்பும், தியாக உணர்ச்சியும், உழைப்பும், ஐக்கியமும் தேவையாயிருக்கிறது.**

("விடுதலை" 18-12-1946, தலையங்கம்)

# ம.ரா.குமாரசாமி படத்திறப்பு மற்றும் சமூகநீதி விளக்கப் பொதுக்கூட்டம்



திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகளின் தொண்டரும், தந்தை பெரியாரின் பாசத்திற்கும் பாராட்டுக்கும் உரியவராக விளங்கியவரும், சமூகநீதிப் போராட்ட வீரர்களில் ஒருவருமான மணம்பூண்டி புலவர் மனிதநேயச் சிந்தனையாளர் மறைந்த பெருநாவலர் கோடையிடி ம.ரா.குமாரசாமி அவர்களின் படத்திறப்பு விழாவும் சமூகநீதி விளக்கப் பொதுக்கூட்டமும், மணம்பூண்டி தந்தை, பெரியார் திடலில் 5-3-16 பிற்பகல் 3 மணிக்கு பா.கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது. பெயரன் தணிகை.கலைமணி வரவேற்புரையாற்றினார். விழாவில் த.கோவிந்தராஜ், ஆர்.சுப்பிரமணியன், ச.முருகேசன், க.பாண்டுரங்கன், எஸ்.சதானந்தம், வி.கோவிந்தசாமி, இர.சுந்தரமூர்த்தி, முன்னாள் பேரூராட்சி தலைவர், ஆர்.பத்மநாபன், க.பத்மநிபன், அ.பாலசுப்பிரமணியன், மரு.பேராசிரியர் க.இராஜசிகாமணி, வழக்குரைஞர் ஏர்.ஆ.வி. காசிநாதன், மரு.சா.மா. அன்புமணி, ஆ.கு.ஆறுமுகம், அரிமா.அரங்க செல்லமுத்து, ஆ.குணசேகரன், பா.கருணா, ச.சரவணகாசன், எழில்நிலவன், பி.ரகுபதி, எம்.தியாகராஜன், மரு.ஆர்.அன்புநாதன், ஜி.தணிகாசலம், க.அய்யப்பன் ஆகியோர் உரையாற்றினர். வே.ஆனைமுத்து சிறப்புரை ஆற்றினார். த.தெய்வீகன் நன்றியுரையாற்றினார்.





புலே  பெரியார்  அம்பேத்கர்  லோகியா

**100 விழுக்காடு இடங்களையும் பங்கீடு செய்!**
**எல்லா வகுப்புகளுக்கும் விகிதாசார வகுப்புவாரிப் பங்கு கொடு!**
**பிரதிநிதித்துவம் பெறாமல் உள்ள வகுப்புகளுக்கு உள்ஒதுக்கீடு கொடு!**
**பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கும் பதவி உயர்வில் இடஒதுக்கீடு கொடு!**
**பிற்படுத்தப்பட்டோரில் வளர்ந்த பிரிவினருக்கு இடஒதுக்கீடு கூடாது எனும் தடையை நீக்கு!**
**பட்டியல் வகுப்புகளுக்கும் பழங்குடிகளுக்கும் இடஒதுக்கீட்டை மக்கள் தொகை விகிதாச்சாரப்படி உயர்த்து!**

# பண்ருட்டியில் அனைத்திந்திய மாநாடு
# கியானி ஜெயில் சிங் நூற்றாண்டு விழா

## இரு பெரும் நிகழ்ச்சிகள்

**நாள் :** 12-6-2016, ஞாயிறு முற்பகல் 9.30 மணி முதல் இரவு 7.00 மணி வரை
**இடம் :** ரங்கா மகால், சென்னைச் சாலை, பண்ருட்டி, கடலூர் மாவட்டம்

தலைமை : **வே. ஆனைமுத்து**
புரவலர் - தலைவர், அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை

**இம் மாநாட்டில்**

**இராம் அவதேஷ்சிங்**
(பாட்னா - பீகார்)
தலைவர்
அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை

- மய்ய அரசின் பல துறைகளின் பிற்படுத்தப்பட்ட அலுவலர் நலச் சங்கங்களின் பொறுப்பாளர்களும்

டாக்டர் **தாவூஜி குப்தா**
(லக்னோ - உத்தரப்பிரதேசம்)
துணைத் தலைவர்
அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை

- ஒடுக்கப்பட்ட பல சமூகங்களின் மேம்பாட்டுக்காகப் பாடுபடுகின்ற சமூகத் தலைவர்களும் அறிஞர்களும்

*கலந்து கொண்டு உரையாற்றிச் சிறப்பிக்கவுள்ளனர்.*

**பிற்படுத்தப்பட்ட, பட்டியல் வகுப்பு, பழங்குடி, சிறுபான்மை மக்களே!**

*குடும்பம் குடும்பமாக வந்து அறிஞர்களின் உரைகளைக் கேட்டு*
*விகிதாசாரப் பங்கு பெற்றிட எல்லோரும் வாருங்கள்! இப்போதே முன்கூட்டித் திட்டமிடுங்கள்!!*

**மாநாட்டின் செலவுகளுக்கு மனமுவந்து நன்கொடை தாருங்கள்!**

**கலச. இராமலிங்கம்**
பொதுச் செயலாளர், 94446 07804

**வே. ஆனைமுத்து**
புரவலர்–தலைவர், 94448 04980

**அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மதச் சிறுபான்மையினர் பேரவை**

அறை எண். 19, இரண்டாம் மாடி, 7, நீலிவீராசாமி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

# அம்பேத்கர் மடல்



*(பி.ஆர். அம்பேத்கர் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் 1912இல் பி.ஏ. பட்டம் பெற்றார். பரோடா மன்னர் அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் மேற்படிப்புப் படிப்பதற்காக மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை அளிக்கும் திட்டத்தின்கீழ், அம்பேத்கர் 1913 ஏப்பிரல் மாதம் அமெரிக்கா சென்றார். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் எம்.ஏ., பி.எச்.டி. பட்டங்களைப் பெற்றார். அடுத்து இலண்டனில் பொருளாதாரத்தில் எம்.எஸ். ஆய்வுப் பட்டமும், பாரிஸ்டர் பட்டமும் பயில்வதற்காக 1916 மே மாதம் இலண்டன் சென்றார். பரோடா அரசின் கல்வி உதவித் தொகையின் காலம் முடிந்துவிட்டதாலும், அதை நீட்டிப்புச் செய்திட பரோடா அரசின் உயர் அதிகாரிகள் தடையாக இருந்ததாலும் 1917 ஆகத்து மாதம் அம்பேத்கர், இலண்டன் பல்கலைக்கழகத்தில் கால இடைவெளி இசைவு பெற்றுக் கொண்டு இந்தியாவுக்குத் திரும்பினார். அந்நிலையில் தன் வாழ்வாதாரத்திற்காக பம்பாய் சைடன்ஹாம் கல்லூரியில் பொருளாதாரத் துறையில் பேராசிரியர் வேலை காலியாக இருப்பதை அறிந்து, அந்த வேலையில் சேருவதற்காக 1917 திசம்பர் 5 அன்று, பூனாவைத் தலைமையிடமாகக் கொண்டிருந்த பம்பாய் மாகாணத்தின் பொதுக் கல்வித் துறை இயக்குநருக்கு அம்பேத்கர் எழுதிய மடலின் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது. இதுவரையில் தமிழில் வெளிவராத மேதை அம்பேத்கரின் மடல் இது).*

அய்யா,

பம்பாய், சைடன்ஹாம் வணிகவியல் கல்லூரியில் பொருளியல் துறையில் வேலை காலியாக இருப்பதை அறிந்தேன். அப்பணியில் சேர என் விருப்பத்தைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமெரிக்காவில் நியூயார்க்கில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் நான் எம்.ஏ. பட்டம் பெற்றிருக் கிறேன். அதே பல்கலைக்கழகத்தில் முனைவர் ஆய்வுப் பட்டத் (Ph.D.) தேர்விலும் தேர்ச்சி பெற்றிருக்கிறேன். பொதுநிதி இயலில் (Public Finance) சீரிய நுண் அறிவுத்திறம் பெற்றுள்ளேன். என்னுடைய முனைவர் பட்ட ஆய்வின் தலைப்பு - “இந்திய தேசத்தின் உபரிப் பங்களிப்பு - அதன் வரலாற்று வளர்ச்சி குறித்த ஓர் ஆய்வறிக்கை” (The National Dividend of India - a Historical and Analytical Study) என்பதாகும். 1765 முதல் 1914 வரையிலான காலத்தில் இந்தியாவின் பொருளியல் வரலாற்றை முழுவதும் தழுவியதாக இந்த முனைவர் பட்ட ஆய்வு அமைந்துள்ளது. இந்த ஆய்வில் ஈடுபட்டதன் காரணமாக இந்தியாவின் பொருளியல் நிலைமைகள் குறித்து நாடாளுமன்றம் வெளியிட்ட ஆவணங்களைக் கொண்ட நூல்கள் மற்றும் அரசு அமைத்த குழுக்களின் ஆய்வறிக்கைகள் ஆகிய அனைத்தையும் அவற்றின் மூல வடிவத்தில் நான் படித்திருக்கிறேன். மேலும் அரசு சாரா நிலையில் மற்றவர்களால் இதுகுறித்து வெளியிடப்பட்டவற்றை யும் படித்திருக்கிறேன். இதற்காக மூன்று ஆண்டுகள் கொலம்பியா பல்கலைக்கழக நூலகத்தில் படித்ததுடன், இலண்டனில் உள்ள இந்தியாவுக்கான அலுவலக நூல கத்தில், இது குறித்துக் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியி லும், பிரிட்டிஷ் மன்னரின் நேரடி ஆட்சியின்கீழ் இந்தியா வந்தது முதல் நடந்த ஆட்சியிலும் வெளி யிடப்பட்ட மூல ஆவண அறிக்கைகளைப் படிப்பதற் காக 14 மாதங்கள் செலவிட்டேன். (முதல்) உலகப் போரினால் ஏற்பட்ட இயல்பற்ற சூழலாலும் நிதிபற்றாக் குறையாலும் என்னுடைய முனைவர் பட்ட ஆய்வேட்டை வெளியிட முடியாதவனாக இருக்கிறேன்.

மேலும் இலண்டன் பொருளியல் பல்கலைக் கழகத்தில் எம்.எஸ்ஸி. (M.Sc.) பட்டப் படிப்பில் மாண வனாகச் சேர்ந்துள்ளேன். நான் முன்பே பெற்றுள்ள உயர்கல்வித் தகுதியின் காரணத்தால், பி.எஸ்ஸி. (B.Sc.) தேர்வு எழுத வேண்டுமென்பதிலிருந்து எனக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. என்னுடைய எம்.எஸ்ஸி. (M.Sc.) படிப்பை முடிப்பதற்காக ஓராண்டு (1916-17) இலண்டன் பொருளியல் பல்கலைக்கழகத்தில் படித் திருக்கிறேன். கல்வி உதவித் தொகை வழங்கப் பட்டதால்தான் நான் அயல்நாட்டுக்கு மேற்படிப்புக்காகச் செல்ல முடிந்தது. ஆனால் கல்வி உதவித் தொகை யைப் பெறுவதற்கான கால வரம்பு கடந்த ஆண்டு (1916) சூலை மாதமே முடிந்துவிட்டது. அதனால் என்னுடைய M.Sc. படிப்பை முடிக்காமலேயே இலண்ட னிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிட வேண்டியதாயிற்று. இலண்டனுக்கு விரைவில் திரும்பி என்னுடைய M.Sc. படிப்பை முடித்திட வேண்டும் என்ற நம்பிக்கை யுடன் இந்தியாவுக்குத் திரும்பினேன். என்னுடைய

M.Sc. பட்டத்திற்கான ஆய்வு, ‘‘இந்திய அரசின் நிதியை மாகாணங்களுக்கும் பிரித்தளித்தல்’’ என்பதாகும். இந்த ஆய்வை நான் மேற்கொண்டபோது, இந்தியா வின் நிதிஇயல் குறித்து அரசு மற்றும் அரசு சாராத வெளியீடுகளை ஊன்றிப் படிக்கும் வாய்ப்பு கிட்டியது.

எனவே, பொருளாதார அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் நிதிஇயல் குறித்து நான் கல்லூரியில் பாடம் கற்பிக்கத் தகுதி வாய்ந்தவனாக இருப்பதைப் போலவே, இந்தியாவின் பொருளியல் வரலாறு மற்றும் இந்திய அரசின் நிதிக்கொள்கை குறித்தும் கற்பிக்கும் தகுதி எனக்கு இருப்பதையும் நான் பெற்றுள்ள கல்வித் தகுதியைக் கொண்டு அறியமுடியும். மேலும் சமூக வியல் குறித்தும் மற்றும் சமூக-அரசியல் நெறிமுறை கள் குறித்தும் மற்றவர்கள் கல்வி கற்பிப்பதற்கும் என்னால் உதவ முடியும். இவ்விரு துறைகள் பற்றியும் நான் குறிப்பிடத்தக்க அளவில் புலமை பெற்றுள் ளேன். எவ்வாறெனில், என்னுடைய முனைவர் பட்ட ஆய்வுக்கு முதன்மையான பாடமாகப் பொருளியல் இருந்தது. துணைப்பாடங்களாக மேலே குறிப்பிட் டுள்ள சமூக அறிவியல் சார்ந்த பாடங்கள் இருந்தன.

கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறைத் தலைவரான பேராசிரியர் இ.ஆர்.ஏ செலிக் மென் அளித்த தகுதி நிலைச் சான்றிதழும், அதே பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையின் பேரா சிரியர் எஃப்.எச். கிட்டிங்கிஸ் வழங்கிய தகுதிச் சான்றும் நான் பெற்றுள்ளேன். என்னுடைய பொருள் களை ஏற்றிவந்த எஸ்.எஸ். சல்டுட்டே கப்பல் நீர்மூழ் கிக் கப்பல் ஒன்றின் குண்டுவீச்சால் தாக்கப்பட்டு அழிந்ததால், என் பொருள்களுடன் இருந்த அந்த இரண்டு சான்றிதழ்களும் மூழ்கிவிட்டன. தகுதிச் சான்றுகளை மீண்டும் தருமாறு அவர்களிடம் கேட்டுள் ளேன். அவற்றைப் பெற்றதும் உங்களுக்கு அனுப்பி வைப்பேன்.

தற்போது, தனிப்பட்ட முறையிலான இரண்டு மடல் களை உங்கள் முன் வைத்திட விரும்புகின்றேன். ஒன்று, பேராசிரியர் செலிக்மென் இலண்டன் பொருளியல் கல்லூரியின் பேராசிரியர் சிட்னிவெப் அவர்களுக்கு என்னைப் பற்றிய எழுதிய அறிமுக மடல். இம் மடலுக்கு ஏற்பிசைவு வழங்கி, வெப் அவர்கள் இந்தியா வுக்கான நிரந்தர துணைச் செயலாளர் சர். லியேனல் ஆபிரகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளது (இணைப்பில் காண்க). சைடன்ஹாம் வணிகவியல் கல்லூரியின் முதல்வருக்கு நான் அனுப்பிய விண்ணப்பத்தில் இதை இணைத்துள்ளேன். என்னுடைய இந்த விண் ணப்ப மடல் உரிய காலத்தில் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று எண்ணுகிறேன். மற்றொன்று, இலண்டன் பல்கலைக்கழகம் என்னுடைய M.Sc. பட்டப் படிப்பை மீண்டும் தொடர்வதற்கு நான்கு ஆண்டுகள் இடைவெளி அனுமதி அளித்துள்ள மடலாகும். இதன் படியை இத்துடன் இணைத்துள்ளேன்.

என் அகவை கிட்டத்தட்ட 26.

நல்ல முடிவைத் தரும்படியான மடல் விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்,

உங்கள் உண்மையுள்ள,
பி.ஆர். அம்பேத்கர்

என் அஞ்சல் முகவரி :
மே/பா. தாமஸ் குக் அண்ட் சன்ஸ்
ஹார்ன்பை சாலை, பம்பாய்.

(அம்பேத்கர் பம்பாய் சைடன்ஹாம் கல்லூரியில் அரசியல் பொருளாதாரத் துறையில் போசிரியராக 11-11-1918 அன்று நியமிக்கப்பட்டார். கோல்ஹாப்பூர் சிற்றரசர் சாகு அவர்களின் நிதி உதவியுடன் இலண்டனில் உயர் கல்வியைத் தொடருவதற்காக சைடன்ஹாம் கல்லூரியின் பேராசிரியர் பதவியிலிருந்து 15-3-1920 அன்று விலகினார். 5-7-1920 உயர் கல்வியைத் தொடருவதற்காக இலண்டன் சென்றார். அடுத்த மூன்று ஆண்டுகள் இலண்டன் பல்கலைக்கழகத்திலும் செரு மனியின் பான் பல்கலைக்கழகத்திலும் பயின்றார். M.Sc., D.S. (Doctor of Science), பாரிஸ்டர் பட்டங் களைப் பெற்று 3-4-1923 அன்று இந்தியாவுக்குத் திரும்பினார்.

*‘அம்பேத்கர் மடல்கள்’ என்ற ஆங்கில நூலில் இடம்பெற்றுள்ள 4ஆவது மடல் இது. குறிப்புகள் மொழி பெயர்ப்பாளரால் மடலின் முன்னும் பின்னும் சேர்க்கப்பட்டன. தமிழாக்கம் :* ***க. முகிலன்).***

## சூலூர் கி.மா.கனகராசன் மகள் ஓவியா திருமண வரவேற்பு விழா

*சூலூர், கலங்கல் பாதை திருமால்நகர், கி.மா.கனகராசன்-செல்வராணி இணையரின் மகள் ஓவியாவிற்கும் சூலூர், சுப்பையா நகர் நினைவில் வாழும் ஏ.ஆர்.சத்தியமூர்த்தி-இந்திராள் இணையரின் மகன் அருணாச்சலத்திற்கும் திருமண வரவேற்பு விழா சூலூர் எஸ்.எம்.பி.விசேச மகாலில் 12-3-2016 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெற்றது.*

*கி.மா.கனகராசன் வரவேற்புரையாற்றினார். வீ.குமரேசன் செந்தலை ந.கவுதமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சு.க.தமிழினியன் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.*

# மோடியின் இந்துத்துவ ஆட்சியில் கார்ப்பரேட் சாமியார்களின் வணிகப் போட்டி

- க. முகிலன்



29-03-2016 நாளிட்ட தினமணி நாளேட்டின் சென்னைப் பதிப்பில் “ஸ்ரீஸ்ரீ ரவி சங்கருக்குப் பத்ம விபூஷன்: குடியரசுத் தலைவர் வழங்கினார்” என்று கொட்டை எழுத்துக்களில் தலைப்புச் செய்தி வெளி வந்துள்ளது. “மேலும் 55 பேருக்கு பத்மவிருதுகள்” என்பது உள்தலைப் பாக இடம் பெற்றிருந்தது. ஆண்டு தோறும் நடுவண் அரசு பத்ம விருதுகளைப் பல துறைகளைச் சார்ந்தவர்களுக்கு வழங்கி வருகிறது. பொதுவாக ஆளும் வர்க்கத் துக்கு ஆலவட்டம் சுற்றும் “சாதனையாளர் களுக்கு” பத்ம விருதுகள் வழங்கப்படு கின்றன. மிக உயரிய விருதான பாரத் ரத்னாவுக்கு அடுத்த நிலையினதாக பத்மவிபூஷண் விருது கருதப்படுகிறது. தில்லியில் 2016ஆம் ஆண்டிற்கான பத்ம விருதுகளை 28-3-16 அன்று குடியரசுத் தலைவர் வழங்கினார். இந்நிகழ்ச்சி குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்றது.

பத்மவிபூஷண் விருது அய்வருக்கு வழங்கப்பட்டது. மறைந்த மாபெரும் முதலாளி அம்பானிக்குரிய பத்ம பூஷண் விருதை அவருடைய மனைவி கோகிலா பென் பெற்றுக் கொண்டார். அடுத்ததாக வாழும்கலை அமைப்பின் நிறுவனர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் பத்ம விபூஷண் விருதைப் பெற்றார். விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி முடிவுற்றபின், குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜி முதன்மையானவர்களுக்குக் குடியரசுத் தலைவர் மாளிகையில் தேநீர் விருந்தளித்தார். இதில் திருபாய் அம்பானியின் மகன்கள் முகேஷ் அம்பானி யும், அனில் அம்பானியும் கலந்து கொண்டனர். இது குறித்து தினமணி நாளேடு, “ரிலையன்ஸ் குடும்பத் தார்க்குக் குடியரசுத் தலைவர், பிரதமர், மத்திய அமைச்சர் உள்ளிட்டோரிடம் உள்ள நெருக்கத்தையும் செல்வாக்கையும் நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களும், அரசு உயர் அதிகாரிகளும் கண்டு வியப்பில் ஆழ்ந் தனர்” என்று எழுதித் தன் புளகாங்கிதத்தை வெளிப் படுத்தி உள்ளது. மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் அரசுதான் மக்களாட்சி சனநாயகம் என்று கூறப்படுகிறது. ஆனால் இந்தியாவில் சுதந்தரம் பெற்றது முதலே முதலாளிகளின் நலன்களுக்காக முதலாளி களால் நடத்தப்படுவதே சனநாயகமாக இருந்துவரு கிறது.

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் இந்த மார்ச்சு மாதம் சட்டவிதி களை அப்பட்டமாக மீறியதற்காகவும், யமுனை ஆற்றின் வெள்ளப்படுகையில் இயற்கையின் சூழலைச் சீரழித்ததற்காகவும் ரவிசங்கருக்கு பத்மவிபூஷண் விருது வழங்கப்படக்கூடாது என்று தில்லியில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்க வேண்டும். தில்லி மாநில முதலமைச்சர் கெஜ்ரிவாலும், தலைமை அமைச்சர் நரேந்திர மோடியும் ரவிசங்கரின் தொண்டரடிப் பொடி ஆழ்வார்களாக இருக்கும் நிலையில், எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்களை எப்படி நடத்தமுடியும்? மேலும் படித்த நடுத்தர வர்க்கத்தினர் ஆன்மிகம் என்கிற போதை யால் தங்கள் அறிவை இழந்து மயங்கிக் கிடக்கின்ற னரே!.

பெங்களூருவைத் தலைமையிடமாகக் கொண் டுள்ள வாழும் கலை (Arts of Living) அமைப்பின் நிறுவனர் ரவிசங்கர் தமிழ்நாட்டின் கும்பகோணத்துப் பார்ப்பனர், திருவண்ணாமலையை அடுத்துள்ள சிற்றூரில் பிறந்த பார்ப்பனர் அல்லாதவரான நித்தியா னந்தாவுக்குப் பெங்களூருவில் தலைமை ஆசிரமம் இருக்கும்போது, பார்ப்பனரான ரவிசங்கருக்கு பெங்க ளூருவில் தலைமை இடம் இருப்பதில் வியப்பதற்கு ஏதுமில்லை.

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் என்பதில் உள்ள இரண்டு ஸ்ரீஸ்ரீ என்பவை ரவிசங்கர் சாதாரண மானுடப் பிறவியை விடப் பலமடங்கு உயர்ந்தவர் என்பதைப் பறைசாற்று வதாகும். அய்க்கிய நாடுகள் மன்றத்தில் 192 நாடுகள் உள்ளன. இவற்றில் ஒரு கோடிக்கும் குறைவான

மக்கள் தொகை கொண்ட நாடுகளே அதிகம். உலகில் 155 நாடுகளில் ரவிசங் கரின் வாழும்கலை அமைப்பின் கிளைகள் உள்ளன. 33 கோடி பக்தர்கள் இருப்பதாக ரவிசங்கர் கூறுகிறார். எந்தவொரு நாட்டில் ஏற்படும் சிக்கலையும், நாடுகளுக் கிடையே உண்டாகும் சிக்கலையும் தீர்த்து வைப்பதில் வல்லவர் என்கிற ஒளி வட்டம் ஊடகங்கள் மூலம் உண்டாக்கப் பட்டுள்ளது. ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தின் போதும் இலங்கைக்குச் சென்று தன் மூக்குஉடைபட்டுத் திரும்பி னர். காமவெறியனும், கொலைகாரனு மான காஞ்சி ஜெயேந்திர சரசுவதி சங்கராச்சாரி பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு இந்துத்துவத் தலைவர்களுக்கும் முசுலீம் தலைவர்களுக்கும் இடையில் அமைதி உடன்பாட்டை உருவாக்கப் போவதாகப் பிதற்றிக் கொண்டு திரிந்தார். சங்கரராமன் கொலை வழக்குக்குப் பின் காஞ்சி சங்கரமடத்துக் குள்ளேயே பதுங்கிக் கொண்டிருக்கிறார்.



*உலக கலாச்சார விழா மேடையில் மோடியை வரவேற்கும் ரவிசங்கர்*

வாழும் கலை அமைப்பின் 35 ஆவது ஆண்டு விழாவைத் தில்லியையொட்டியுள்ள யமுனை ஆற்றின் வெள்ளப்படுகைப் பகுதியில் 1000 ஏக்கர் பரப்பில் 155 நாடுகளிலிருந்து 35 இலட்சம் பக்தர்கள் பங்கேற்கும் மாபெரும் விழாவை-கின்னஸ் சாதனைப் பட்டியலில் இடம் பெறத்தக்க வகையில் நடத்தப் போவதாக ரவிசங்கர் அறிவித்தார். 2016 மார்ச்சு 11, 12, 13 ஆகிய நாள்களில் வாழும் கலை அமைப்பு நடத்தும் உலக கலாச்சாரத் திருவிழாவில் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, பிரதமர் நநேரந்திரமோடி மற்றும் நடுவண் அரசின் அமைச்சர்கள், மாநிலங்களின் அமைச்சர்கள் பங்கேற்பார்கள் என்று தில்லியின் பல பகுதிகளில் பெரிய பிளக்ஸ் பேனர்கள் வைக்கப்பட்டன. எந்த வொரு அரசியல் கட்சியின் மாநாட்டிற்கும் இந்த அளவுக்கு விளம்பரம் செய்யப்பட்டதில்லை என்று மக்கள் பேசிக் கொள்ளும் அளவுக்கு ரவிசங்கரின் ஆன்மீக விளம்பர ஆடம்பரம் இருந்தது.

2016 சனவரியில் ஒரு வழக்கில் பசுமைத் தீர்ப்பாயம் யமுனை வெள்ளப்படுகையில் நிலையான கட்டடங்களை உருவாக்குதல் கூடாது; கட்டடக் கழிவு கள், குப்பைகளைக் கொட்டக்கூடாது என்று தீர்ப்பு வழங்கியிருந்தது. ஆனால் வாழும் கலை அமைப்பு அதன் கலாச்சாரத் திருவிழா நிகழ்ச்சிக்காக 40 அடி உயரம், 1000 அடி நீளம், 200 அடி அகலம் கொண்ட (ஏழு ஏக்கர் பரப்பளவுக்கு மேல்) மேடையை அமைத் தது. இதற்காகக் கான்கிரீட் தூண்கள் எழுப்பப்பட்டன. 1000 ஏக்கர் பரப்பளவில் நடைபெற்ற மாநாட்டுக்காக, பக்தர்களும் ஊர்திகளும் வருவதற்காகவும், பல பாதைகளை அமைத்தனர். மாநாட்டுக்காக ஆயிரம் ஏக்கரில் யமுனை வெள்ளப்படுகையில் இருந்த பல நீர்நிலைகளைத் தூர்த்தனர். பல உயிரினங்களுக்கு நிலையான வாழ்வாதாரமாக விளங்கிய சதுப்பு நிலப் பகுதிகளை அழித்தனர். இயற்கையான புல்வெளி களையும், செடி கொடிகளையும் புல்டோசர்களைக் கொண்டு அகற்றிச் சமப்படுத்தினர். இதனால் இப்பகுதி யில் உயிர்ப்பன்மை முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டது. யமுனை ஆற்றில் மழைக்காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்துப் பாயும் இப்பரப்பு, கான்ரீட் போல் கெட்டிப்படுத்தப்பட்டதால் நீர்சுவறி நிலத்தடிக்குச் சென்று நிலத்தடி நீர்மட்டத்தை உயரச் செய்யாது.

வாழும் கலை அமைப்பு உலக கலாச்சாரத் திரு விழாவை நடத்துவதற்காக யமுனை ஆற்றின் வெள்ளப்படுகை நிலப்பரப்பில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளால் சுற்றுச்சூழலும் உயிர்ப்பன்மையும் எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டுள்ளன என்று பட்டிய லிட்டு, 'சூழலியல் ஆர்வலர்கள்' 'பசுமைத் தீர்ப்பாயத் தில் முறையீடு செய்தனர். இதுகுறித்து ஆராய்ந்த பசுமைத் தீர்ப்பாயம் 9-3-11 அன்று அளித்த தீர்ப்பில், வாழும்கலை அமைப்பினர் நடத்தும் நிகழ்ச்சியை யொட்டி சூழலியலுக்கு ஏற்பட்டுள்ள கேடுகளைச் சீர்செய்வதற்காக உருவா 5 கோடி பணத்தை மாநாட்டைத் தொடங்குவதற்குள் செலுத்த வேண்டும் என்று கூறியது. அதே சமயம் யமுனைப் பாதுகாப்பு இயக்கத்தினர் கோரியது போல் மாநாட்டுக்குத் தடை விதிக்க முடியாது என்றும் கூறியது.

நடுவண் அரசே தன் சட்டைப் பைக்குள் இருக்கும் போது, பசுமைத் தீர்ப்பாயம் உருவா 5 கோடி அபராதம் விதித்ததைத் கேட்டுக் கொதித்தெழுந்தார் ரவிசங்கர். “அனைத்து விதிகளும் பின்பற்றப்பட்டும் அபராதம் விதிக்கப்படும் கொடுமை இந்தியாவில் மட்டும்தான் நிகழ்கிறது. ஒரு காசு கூட அபராதம் செலுத்த மாட்டோம்; அதற்காக சிறைக்குச் செல்லவும் தயாராக இருக்கிறோம்” என்று வீரமுழக்கமிட்டார் ரவிசங்கர்.

விதிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன என்று ரவிசங்கர் கூறியிருப்பது அப்பட்டமான பொய். 9-3-16 அன்று பசுமைத் தீர்ப்பாயத்தின் விசாரணையின் போது, நடுவண் அரசின் நீர்வளத்துறை உலக கலாச்சாரத் திருவிழா நடத்த ஒப்புதல் தரவில்லை என்று தெரிவித்தது. ரவிசங்கர் கூறியது உண்மையாயின், பசுமைத் தீர்ப்பாயம், தில்லி வளர்ச்சி ஆணையம் தன் கடமையை முறையாகச் செய்யவில்லை என்பதற்காக உருபா 5 இலட்சம் அபராதமும், அதே காரணத்துக்காகத் தில்லி மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்துக்கு ஒரு இலட்சம் உருவா அபராதமும் விதித்திருக்குமா?

அதுமட்டுமன்று 9-3-16 அன்று வரையில் உலக கலாச்சாரத் திருவிழாவை நடத்த காவல்துறையிடமோ, தீயணைப்புத்துறையிடமோ, நீர்வளத்துறையிடமோ, ஆறுகள் மேம்பாட்டுத் துறையிடமோ வாழும் கலை அமைப்பினர் அனுமதி பெறவில்லை. மேலும் 35 இலட்சம் பேர் இந்நிகழ்ச்சிக்காக வருவார்கள் என்று எந்தவொரு துறைக்கும் தெரிவிக்கவில்லை.

உச்சகட்டக் கொடுமை என்னவெனில் இம்மாநாட்டுக்குக்காக யமுனை ஆற்றின் குறுக்கே இந்தியப் படையினர் தற்காலிக நீண்ட பாலம் ஒன்றைக் கட்டிக் கொடுத்ததுதான்! வாழும் கலை அமைப்பு ஒரு தனியார் நிறுவனம். இராமாயணத்தில் இராமன் இலங்கைக்குச் செல்ல சுக்ரீவனின் குரங்குப் படை பாலம் அமைத்துக் கொடுத்ததுபோல், இந்திய இராணுவத்தைக் குரங்குப் படையாகச் செயல்பட யார் அனுமதி அளித்தது என்ற வினாவுக்குப், பாதுகாப்புத்துறை அமைச்சர் இதுவரை விடை சொல்லவில்லை. நாட்டைக் காக்கும் படைவீரர்களைப் போற்றிப் புகழும் மோடி அரசு, இந்தியப் படையினரைத் தனியாருக்கான கூலியும் பெறதா அடிமை வேலையைச் செய்ய வைத்தது ஏன்? மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் இந்தியப்படை 17 கோடி முசுலீம்களின் கலாச்சார மாநாட்டுக்கு இதுபோன்ற வேலைச் செய்ய மோடி அரசு அனுமதிக்குமா?

இதில் ரவிசங்கருக்கு முன்னோடி அத்வானிதான். “பாபர் மசூதி இருக்கும் இடத்தில்தான் இராமன் பிறந்தான் என்பது இந்துக்களின் நம்பிக்கை; இதற்கு வரலாற்றுச் சான்றைக் காட்ட வேண்டியதில்லை. ஏனெனில் இந்த நம்பிக்கை என்பது இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கு அப்பாற்பட்டது” என்று கூறினார். அந்த அடிப்படையில், பாபர் மசூதியை இடித்தார்கள். அது குறித்த வழக்கில் அலகாபாத் உயர்நீதிமன்றம், “பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் இராமர் பிறந்தார்” என்ற ஒரு புரட்டான தீர்ப்பை அளித்துள்ளது. இப்போது இந்துத்துவ-பார்ப்பனிய திமிர் பிடித்த சுப்பிரமணியன்சாமி, அலகாபாத், உயர்நிதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் இராமர் கோயில் கட்ட அனுமதிக்கவேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறார், எனவே ரவிசங்கர் சட்ட விதிமுறைகளை மதிப்பார் என்று எப்படி எதிர்ப்பாக்க முடியும்?




*யமுனை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணியில் இந்தியப் படையினர்*

ஆனால் இந்துத்துவக் கோட்பாட்டை-மோடி ஆட்சியின் செயல்பாட்டை எதிர்த்து எவரேனும் வினாத் தொடுத்தால் சட்டங்கள் அவர் மீது ஈட்டியாகப் பாயும். நடுவண் அரசின் கீழ் இயங்கும் அய்தராபாத் பல்கலைக் மாணவர் ரோகித் வெமுலா இவ்வாறு கேள்வி கேட்டார் என்பதற்காகத் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார். தில்லி சவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் மாணவர் தலைவர் கன்னையா குமார் மீது தேசவிரோத சட்டம் ஏவப்பட்டுள்ளது. கன்னையாகுமார் ஒரு தேசவிரோதி என்று, பா.ச.க. வின் தலைவர் அமித்ஷா மேடைதோறும் முழங்கி வருகிறார்.

இறுதியாக இந்துத்துவ ஆட்சியாளர்களின் அறிவுரையின் பேரில். ரவிசங்கர் தன் இறுமாப்பிலிருந்து சற்று இறங்கிவந்தார். எனவே 11-3-16 அன்று வாழும் கலை அமைப்பின் சார்பில், உடனடியாக ரூ.25 இலட்சம் தொகையைச் செலுத்துவதாகவும், அடுத்து மூன்று கிழமைகளுக்குள் மீதி 4.75 கோடி பணத்தைச் செலுத்துவதாகவும் உறுதி அளித்தது. இதை ஏற்றுக்கொண்ட பசுமைத் தீர்ப்பாயத்தின் தலைவர் முன்னாள் நீதிபதி சுவந்தர் குமார், “ரூ 5 கோடி அபராதம் செலுத்துவதற்குப் பதிலாக, சிறைக்குச் செல்வோம் என்று நீங்கள் (ரவிசங்கர்) கூறியது சரிதானா? புகழ்பெற்ற ஆன்மீகத் தலைவரான உங்களிடமிருந்து இதுபோன்ற ஒரு கருத்தை நாங்கள் எதிர்பார்க்கவில்லை” என்று தன் கண்டனத்தைத் தெரிவித்தார். ஒரு சாதாரண குடிமகனுக்கு இருக்க வேண்டும் என்று எதிர்ப்பாக்கப்படுகின்ற பொறுப்புணர்ச்சிகூட இல்லாத ரவிசங்கர், ‘ஸ்ரீஸ்ரீ’ பட்டங்களுடன், வாழும் கலை அமைப்பின் தலைவராக இருப்பதற்குக் காரணம் நம்முடைய அடிமை மனப்பான்மையே ஆகும்.

மார்ச்சு 11, 12, 13 ஆகிய நாள்களில் நடைபெற்ற உலக கலாச்சார விழாவில், இதுகுறித்து எழுந்த சிக்கல் காரணமாகக் குடியரசுத் தலைவர் கலந்து கொள்ளவில்லை. பிரதமர் மோடி கலந்து கொண்டு பத்து மணித்துளிகள் உரையாற்றினார். இந்திய (இந்து) கலாச்சாரத்தை உலகம் முழுவதும் பரப்பும் பணியைச் செய்வதற்காக ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரைப் புகழ்ந்தார். தான் மங்கோலியா நாட்டுக்குக்குச் சென்றிருந்தபோது, அங்குள்ள வாழும் கலை அமைப்பினரைச் சந்தித்து மகிழ்ந்தாகத் தெரிவித்தார். எல்லாவற்றையும் கண்ணை மூடிக்கொண்டு விமர்சனம் செய்தால் நம்முடைய கலாச்சாரப் பெருமையை உலகம் எப்படி மதிக்கும் என்று கூறி இம்மாநாட்டுக்கு எதிராகக் குரல் எழுப்பியவர்களை மறைமுகமாகக் கண்டித்தார்.

ரவிசங்கர் தன் அமைப்பின் 35ஆவது ஆண்டினை, ஏழு ஏக்கர் பரப்பளவில் 40 அடி உயரத்தில் மாபெரும் மேடை அமைத்து, 115 நாடுகளிலிருந்து 35 இலட்சம் பேர் வருவார்கள் என்று தமுக்கடித்து, உலக கலாச் சாரத் திருவிழாவாகக் கொண்டாடவேண்டியதன் உள்நோக்கம் என்ன தெரியுமா?

2003 ஆம் ஆண்டே ஸ்ரீஸ்ரீ என்கிற வணிக முத்திரைப் பெயரில் பொருள்களை விற்கத் தொடங்கிய போதிலும், யோகா குரு பாபா ராம்தேவுக்கு அரித்து வாரில் உள்ள பதஞ்சலி தொழிற்சாலையிலிருந்து ஆயுர்வேதாப் பொருள்கள் என்கிற பெயரில் விற்பனை செய்யும் பண்டங்களின் அளவுக்குப் பன்னாட்டு நிறுவனங்களுக்குப் போட்டியாக வளர்ந்திருப்பது ரவிசங்கருக்கு அச்சுறுத்தலாகிவிட்டது.

யோகா குரு ராம்தேவ் அன்னா அசாரே தில்லியில் நடத்திய ஊழல் ஒழிப்புப் போராட்டத்தில் பங்கேற்ற போது, காவல்துறையின் கைதுக்கு அஞ்சி, பெண் வேடமணிந்து ஓடிவிட்டபோதுதான், இந்திய அளவில் அறிமுகமானார். அதற்கு முன் வடஇந்தியாவில் இந்தி பேசும் மாநிலங்களில் தொலைக்காட்சியில் யோகாசனம் செய்து காட்டிக் கொண்டிருந்தார். இசையுடன் ராம்தேவ் யோகாசனம் செய்வதைப் பார்த்தால் ‘காப்ரே’ நடனத்தைப் பார்த்தது போல் இருக்கும்.

மோடியின் வேண்டுகோளை ஏற்று அய்க்கிய நாடுகள் மன்றம் சூன் 21 ஆம் நாளை யோகா நாளாக அறிவித்தது. 2015 சூன் 21 அன்று முதலாவது யோகா நாளை நடுவண் அரசு மிகப்பெரும் அரசு விழாவாக நடத்தியது. அன்று தில்லியில் மோடியும், யோகா குரு ராம்தேவும் ஒன்றாக யோகாசனம் செய்தது எல்லா ஊடகங்களிலும் வெளிவந்தது.

ராம்தேவின் பதஞ்சலி நிறுவனம் பிஸ்கெட், பற்பசை, பல்துலக்கும் குச்சி, ஊதுபத்தி, நெய், கூந்தல் தைலம், ஆலோவோரா ஜெல் (சோற்றுக்கற்றாழை), நெல்லிச்சாறு, குளியல் சோப்பு, துணி சோப்பு, பவுடர், பாத்திரம் துலக்கும் சோப்பு, நூடுல்ஸ், கோதுமை, தேன், பாசுமதி அரிசி, பல்வேறு மாவுகள் முதலானவற்றைப் **பதஞ்சலி பிராண்ட் பெயரில்** விற்று வருகிறது. மற்ற நிறுவனங்களின் பொருள்கள் பக்க விளைவை ஏற்படுத்தும் இரசாயனங்கள் கலந்தவை, பதஞ்சலியின் பொருள்கள் இயற்கையாகத் தயாரிக்கப்பட்டவை என்று தன் விளம்பரத்தில் கூறி வருகிறது. தமிழ்நாட்டில் வெளியாகும் தமிழ்-ஆங்கில நாளேடுகள் அனைத்திலும் அன்றாடம் குறைந்தது கால் பக்கம் அளவில் பதஞ்சலி பொருள்களின் விளம்பரம் இடம் பெற்றிருக்கிறது. வடஇந்தியாவில், இந்தி பேசும் மாநிலங்களில் முழுப்பக்க அளவில் பதஞ்சலி விளம்பரம் வெளிவரும் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

**கடந்த நான்கு மாதங்களில் மட்டும் விளம்பரத்துக்காக ரூ.360 கோடியைப் பதஞ்சலி செலவிட்டுள்ளது. 2014-15 ஆம் நிதி ஆண்டில் பதஞ்சலி நிறுவனத்தின் நிகர இலாபம் ரூ.154 கோடி. இது 2015-16 ஆம் ஆண்டில் ரூ.309 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. [பிஸினஸ் லைன் 22-3-16]**

வேகமாக விற்பனையாகும் நுகர்வுப் பொருள்கள் (Fast moving consumer goods - FNCG) விற்பனைத் தொகை விவரம் - 2015-16 நிதி ஆண்டில் 2015 திசம்பர் 31 முடிய

| | | | | |
|---|---|---|---|---|
| கோத்ரெஜ் விற்பனைத் தொகை | - | ரூ. | 6, 691 | கோடி |
| தாபர் (Dabur) | - | ரூ. | 6,270 | கோடி |
| இமாமி (Emami) | - | ரூ. | 1,953 | கோடி |
| மேரிகோ (Marico) | - | ரூ. | 4,820 | கோடி |
| பதஞ்சலி (2016 சனவரி முடிய) | - | ரூ. | 3,267 | கோடி |

2015-16ஆம் நிதி ஆண்டின் முடிவில் பதஞ்சலியின் மொத்த விற்று முதல் ரூ.5000 கோடியை எட்டும் என்று கூறப்படுகிறது.




*31-3-2016 அன்று தமிழ் 'தி இந்து' நாளேட்டில் வெளிவந்த கால்பக்க விளம்பரம்*



*2015 சூன் 21 அன்று உலக யோகா நாள் விழா மேடையில் யோகா குரு ராம்தேவும் பிரதமர் மோடியும்*

பதஞ்சலி நிறுவனம் தனது தயாரிப்புகளை விற்பனை செய்ய முன்னணி சங்கிலித் தொடர் விற்பனை நிறுவனமான 'பியூச்சர்' குழுமத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. இதனால் பதஞ்சலி தயாரிப்புகள் பியூச்சர் குழுமத்தின் விற்பனையகங்களான பிக்பசாரில் (Big Bazaar) இடம் பெற்றுள்ளன.

ரவிசங்கரின் எஸ்.எஸ்.ஏ.டி. நிறுவனம் பெங்களூரில் தயாரிக்கும் பொருள்களை **'ஸ்ரீஸ்ரீ' பிராண்ட்** பெயரில் விற்கிறது. ஷாம்பூ, லோஷன்கள், ஆயுர்வேத மருந்துகள், பழச்சாறுகள், இயற்கையான தேநீர், நீரிழிவு நோய்க்கான மாத்திரைகள் முதலானவற்றை 'புனித விற்பனையகம் (Divine-Shops) மூலம் விற்பனை செய்து வருகிறது. மேலும் புதிய தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ளது. புனித விற்பனையகங்கள் தற்போது 600 என்று இருப்பதை அடுத்த ஆண்டிற்குள் 2500 ஆக உயர்த்திட திட்டமிட்டுள்ளார் ரவிசங்கர். ராம்தேவுக்கு இந்தியா மட்டுமே சந்தைக்களம்; ரவிசங்கருக்கோ 155 நாடுகளில் சந்தைக் களம் இருக்கிறது.

எனவே மார்ச்சு மாதம் மூன்று நாள்கள் தில்லியில் ரவிசங்கர் நடத்திய 'கலச்சாரக் கும்பமேளா' இந்தியக் கலாச்சாரத்தை உலகம் முழுவதும் பரப்புவதற்காக அல்ல, தன் தயாரிப்புகளை உலகம் முழுவதும் விற்பனை செய்யும் ஒரு வணிகப் பன்னாட்டு நிறுவனமாக உயர்ந்தவும் ராம்தேவின் விற்று முதல் மற்றும் இலாப அளவை விஞ்சுவதற்கான விளம்பர உத்தியே உலக கலாச்சாரத் திருவிழா.

இந்த வரிசையில் ஜக்கி வாசுதேவ் ஏற்கெனவே தனது ஈஷா அறக்கட்டளை மூலம் ஆயுர்வேதப் பொருள்களை விற்பனை செய்து வருகிறார். அவரும் இனி தீவிரமாகக் களத்தில் இறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குருராம் ரஹீம், அரவிந்த ஆசிரமம் உள்ளிட்ட பலரும் வணிகத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளனர்.

துறவு மனப்பான்மையுடன் எளிய வாழ்வு வாழ்ந்து மக்களுக்குத் தொண்டு செய்த உண்மையான துறவியர் இந்திய வரலாற்றில் சிலர் இருந்துள்ளனர். ஆயினும் இந்திய வரலாற்றில் மதகுரு-சாமியார் என்பவர்கள் ஆதிக்கவாதிகளாகவும், சுரண்டுவோரா கவும், மற்ற எவரையும்விட இன்பத்தில் மறைவாகத் திளைப்போராகவுமே இருந்திருக்கின்றனர்.

இதற்கு, புட்டபர்த்தி சாயிபாபா அண்மைக்காலச் சான்று. பரமானந்த சாமியார், நித்தியானந்த சாமியார் களின் கொலைகளும், பாலியல் லீலைகளும் அனைவரும் அறிந்தவைகளே ஆகும்.

கல்வி-மருத்துவத் தொண்டு என்ற பெயரில் அமிர் தானந்தமயி, மேல்மருத்தூர் பங்காரு அடிகள் போன்ற பல சாமியார்கள் உருவாகியிருக்கின்றனர். இத்துடன் எண்ணற்ற, வட்டார அளவிலான குட்டி சாமியார்கள் கொட்டமடித்து வருகின்றனர்.

**சாமியார்கள் எல்லோரும் கார்ப்பரேட் முதலாளி களாக மாறிவருவது மோடியின் இந்துத்துவா ஆட்சி யில் வேகமாக நடந்து வருகிறது.**

**இந்துத்துவ ஆதிக்கத்தை வீழ்த்துவதன் மூலமே கார்ப்பரேட் சாமியார்களின் வளர்ச்சியையும், ஆதிக் கத்தையும் வீழ்த்த முடியும்.** ❖

## ஜெ.என்.யு. மாணவர் தலைவர் கன்னையாகுமாருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம்



புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி சார்பில் தில்லிப் பல்கலைக்கழக மாணவர் கன்னையா குமாருக்கு ஆதரவாக “யார் தேசத்துரோகிகள்” என்ற தலைப்பில் கண்டன ஆர்ப்பாட்டம் 3-3-2016 வியாழன் அன்று காலை 10 மணிக்கு வள்ளுவர் கோட்டம் அருகில் நடைபெற்றது. அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் த.கணேசன் தலைமை தாங்கினார். தோழர்கள் இராசு, வாலாசா வல்லவன், பேரா.சிவக்குமார், ஜெ.என்.யு.மாணவர் ஆனந், அய்தராபாத் பல்கலைக்கழக மாணவர் வெங்கட்ராவ் மற்றும் சின்னப்ப ராஜன், பேரா.சாந்தி, மு.கனிமொழி அரவிந், மருதையன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இடையிடையே ம.க.இ.க. மைய இசைக்குழுவினர், கோவன் உள்ளிட்டோர் புரட்சிகரப் பாடல்களைப் பாடினர். ஆர்ப்பாட்டம் பிற்பகல் 2 மணிக்கு முடிவுற்றது.

## கன்ஷிராம் பிறந்த ஊரில் கன்ஷிராம் 82ஆம் பிறந்த நாள் விழா!



1976இல் மத்திய அரசுப் பணியிலிருந்த கன்ஷிராம், டி.கே. காபர்டே, எஃப்.டபள்யூ. மூன் முதலான தோழர்கள் ஒன்றிணைந்து “பிற்படுத்தப்பட்டோர் - சிறுபான்மையினர் அரசுப் பணியாளர் பேரவை” (BAMCEF) என்னும் அலுவலர் அமைப்பை நிறுவினர்.

அவ்வமைப்பின் ஒரே நோக்கம், “இந்தியாவில், 85 விழுக்காடு பேராக உள்ள பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மதச் சிறுபான் மையினர் ஆகியோரிடையே ஒற்றுமையை உருவாக்கி - உண்மையான ஆட்சி அதிகாரம் தேங்கிக் கிடக்கிற இந்திய அரசைக் கைப்பற்றுவது” என்பதே ஆகும்.

கன்ஷிராம் அவர்கள், பஞ்சாபில், பிரிதிப்பூர் பங்கா (Prithipur Bunga) என்னும் சிற்றூரில் பிறந்தவர் ஆவார்.

அவ்வூரில், கன்ஷிராம் அவர்களின் 82ஆம் பிறந்த நாள் விழாவினை, ஆம் ஆத்மி கட்சியினர், கட்சியின் தலைவரும், தில்லி மாநில முதலமைச் சருமான அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையில், 15-3-2016 செவ்வாய் அன்று சிறப்பாகக் கொண்டாடினர்.

கன்ஷிராம் அவர்களின் தங்கை ஸ்வரன் கௌர் (Swaran Kaur) அவர்கள் அனைவரையும் வரவேற் றார்.

(“தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்”, 16-3-2016)

# விஜய் மல்லய்யாவும் சாதாரண மனிதர்களும்

- இராமியா



மும்பை நகரில் பிரேமலதா பன்சாலி (Premalatha Bhansali) என்ற 44 வயதுப் பெண் புறநகரத் தொடர் வண்டியில், பயணச்சீட்டு வாங்காமல் 22.3.2016 அன்று பயணம் செய்தார். பயணச்சீட்டுப் பரிசோத கர்கள் அவரை மகாலட்சுமி தொடர் வண்டி நிலை யத்தில் இறக்கி, ரூ.260 அபராதம் விதித்து உள்ளனர். அவர் உடனே விஜய் மல்லய்யா வங்கிகளுக்குத் திருப்பித் தரவேண்டிய ரூ.9000 கோடியை வசூல் செய்துவிட்டுத், தன்னிடம் வந்து கேட்டால் அபராதத் தொகையைச் செலுத்துவதாகக் கூறியுள்ளார். அது தங்களுடைய வேலை அல்ல என்றும், அதற்கு வேறு துறைகள் உள்ளன என்றும் அவர்கள் விடையளித்து உள்ளனர். வெறும் ரூ.260/-வசூலிக்க, இவ்வளவு நபர்கள் வேலை பார்த்து, அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதைவிட விஜய் மல்லய்யாவிடம் இருந்து ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை வசூலிப்பதற்கு அவர்களைப் பணிமாற்றம் செய்தால், நாட்டின் வரு வாய் மிகப்பெரிய அளவில் கூடுமே என்றும், அப்படிச் செய்யாமல் கேவலம் ரூ.260/-ஐ வசூல் செய்வ தற்காக இவ்வளவு மனித வளத்தை வீணாக்க வேண்டுமா என்றும் வினவி உள்ளார். தொடர் வண்டித் துறை அதிகாரிகள் அது தங்களுக்குத் தெரியாது என்று விடை கூறவும், அவர்களுடைய மேலதிகாரிகளிடம் கூறி அதற்கு ஏற்பாடு செய்யும்படியும், முடிந்தால் அமைச் சர்களிடமும் கூறி அதற்கு ஏற்பாடு செய்யும் படியும், விஜய் மல்லய்யாவிடம் இருந்து, அவர் செலுத்த வேண்டிய பணத்தை வசூலித்த மறுகணமே, தனக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ.260/-ஐச் செலுத்தி விடுவதாகவும் கூறியிருக்கிறார்.

நீண்ட நேரம் முயன்றும், அந்த அதிகாரிகளால் அந்த அம்மையாரிடம் இருந்து அபராதத் தொகையை வசூலிக்க முடியவில்லை. வேறு வழியின்றி அந்த அம்மையாரை நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று உள்ளனர். அங்கும் அவர் அதே வாதத்தை முன் வைத்து இருக்கிறார். அப்பெண்ணின் வாதத்திற்கு விடையளிக்க முடியாத நீதிபதி, அந்த அம்மையாருக்கு 7 நாள்கள் சிறைத் தண்டனையை விதித்தார். அந்த அம்மையாரும் சிறைத் தண்டனையை ஏற்றுக் கொண்டாலும் கொள்வேனே தவிர, விஜய் மல்லய் யாவிடம் இருந்து முழுக் கடன் தொகையையும் வசூல் செய்யாத வரையில், தனக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையைச் செலுத்துவதாக இல்லை என்று கூறி விட்டார். காவலர்கள் அவரைச் சிறைக்கு அழைத்துச் சென்றுவிட்டனர்.

காட்டாற்று வெள்ளம் போல் பொங்கி வந்துள்ள இந்த உணர்வுகள், இந்தப் பெண்ணின் மனதில் மட்டும் இருப்பதாகக் கூறமுடியாது. பெரும்பாலான இந்திய மக்களின் மனதில் குமுறிக் கொண்டு இருக்கும் உணர்வுகளைத்தான் இவர் கொட்டித் தீர்த்து இருக்கிறார்.

இதேபோல் உணர்வுகளைக் கொட்டித் தீர்ப்பது மட்டுமே பிரச்சினைக்குத் தீர்வாகிவிடாது. அதுவும் விஜய் மல்லய்யா மட்டுமே பிரச்சினை என்று நினைப்பதும் பிரச்சினையைப் புரிந்துகொண்டதாக ஆகிவிடாது.

என்னதான் அந்தப் பெண் நியாயமாகப் பேசி இருந்த போதும், சட்டமும் அதை நடைமுறைப்படுத்துபவர்களும் அப்பெண்ணின் நியாயத்தை ஒப்புக் கொள்ளாமல் சிறைக்கு அனுப்பிவிட்டனர். விஜய் மல்லய்யாவைத் தப்பவிட்டது போல், ஏதாவது உத்தி செய்து தப்பவிடவில்லை. இதில் இருந்து சட்டமும் அதை நடைமுறைப்படுத்துபவர்களும் மக்களுக்காக இல்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அதேபோல் இந்த அரசு, விஜய் மல்லய்யாவைத் தான் காப்பாற்றி இருக்கிறது என்று நினைத்தாலும், அது சரியான புரிதலாக இருக்கமுடியாது. உண்மையில் இந்த அரசு மூலதனத்தின் அதிகாரத்தைத்தான் காப் பாற்றிக் கொண்டு இருக்கிறது. மூலதனத்தை இலாப கரமாக ஈடுபடுத்தும் வழியில் சிக்கல் ஏற்பட்டால், அதனால் வரும் சிரமங்களை மக்கள் மீது சுமத்திவிட்டு, மூலதனத்தின் அதிகாரம் கவிழாமல் பார்த்துக் கொள்வதுதானே ஒழிய, அந்த அல்லது இந்த தனிப்பட்ட முதலாளியைக் காப்பது அரசின் வேலை அல்ல.

ஆகவே மூலதனத்தின் அதிகாரத்தை ஒழித்தால் தான், இதுபோன்ற முறையற்ற செயல்கள் நடக்காமல் தடுக்கப்படுமே ஒழிய, தனிப்பட்ட நபர்களை மட்டும் எதிர்த்துப் போராட்டம் நடத்துவது மக்களின் ஆற்றல் விரயம் ஆவதிலேயே முடியும்.

ஆகவே சமூகத்தில் முறையற்ற செயல்கள் நடவாமல் தடுக்க வேண்டும் என்றால் அதற்கு ஒரே வழி, முதலாளித் துவ உற்பத்தி முறையைக் காவு கொடுத்துவிட்டு, சோசலிச உற்பத்தி முறையை அமல்படுத்துவதே வழியாகும். அதற்குத் தனிப்பட்ட மனிதர்கள், தனிப்பட்ட முறையில் பொங்கி எழுவது பயன் தராது. லெனின் அமைத்தது போல், எஃகு போன்ற உறுதியும் கட்டுப்பாடும் கொண்ட கட்சியை அமைத்து, எதற்காகவும் விட்டுக் கொடுக்காத போராட்டத்தை முன்னெடுப்பதே சரியான வழியாகும். ❖

## மா.பெ.பொ.க. பொதுக்குழுக் கூட்டம் அம்பத்தூரில், கட்சி அலுவலகத்தில், 26-3-2016 சனி காலை 10.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெற்றது.

## ம.பெ.பொ.க. பொதுக்குழு தீர்மானங்கள்

# தமிழ்ப்பெருமக்கள் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டுகோள்!

**தீர்மானம் 1 :**

இந்திய அரசமைப்புச் சட்ட முகவுரையில், முதலாவது வரியில், "இந்தியக் குடிமக்களாகிய நாங்கள் சமூகம், அரசியல், பொருளியல் இவற்றில் சமத்துவம் வர எங்களுக்கு நாங்களே உருவாக்கிக் கொண்டது" என்று எழுதப்பட்டிருக்கிறது. அத்துடன் 1976இல், அரசமைப்புச் சட்டம் "மதச் சார்பற்ற சமதர்ம அரசை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டது" என்று ஒரு பிரிவு சேர்க்கப்பட்டது.

முதலில் மேலே சொல்லப்பட்டபடி சமுதாய சமத்துவம் வரவேயில்லை. அதற்கான முயற்சிகளை இதுவரையில், இந்தியாவில் ஆட்சிசெய்த காங்கிரஸ் கட்சியோ, நேற்றும் இன்றும் ஆட்சி புரிந்த-புரிகிற பாரதிய சனதாக் கட்சியோ நிறைவேற்ற எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. இதற்கு மாற்றாக உருவாகி இருக்க வேண்டிய பொதுவுடைமைக் கட்சியும் மற்றும் இந்தியா முழுவதிலும் உள்ள எல்லா மாநிலக் கட்சிகளும் மேலே கண்ட கோட்பாடுகளைப் பற்றி எந்தக் கவலையும் படவில்லை.

திராவிடக் கட்சிகளும், அம்பேத்கரியக் கட்சிகளும், லோகியா வாதக் கட்சிகளும் இந்த ஈன நிலைமையை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவில்லை.

மேலும் இந்தியாவில் நால்வருண சாதிப் பிரிவு மற்றும் உள்சாதிப் பிரிவுகள் பிறவி வேற்றுமை அடிப்படையில் இந்துக் கோயில்களின் கருவறைகளிலும், மடங்களிலும் காப்பாற்றப் படவும்; பழக்கச் சட்டம், வழக்கச் சட்டம் முதலானவை நீடிக்கவும் அரசமைப்பு விதிகள் 13, 25, 26, 372(1), 395 இவற்றில் கெட்டியாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சட்டத்தை வைத்து நடத்தப்படுகின்ற நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் சட்டமன்றத் தேர்தல்களை அடியோடு புறக்கணிப்பது என்று 1977 தேர்தலின் போது மா.பெ.பொ.க. முடிவு செய்தது. இன்றும் அம்முடிவை அப்படியே மா.பொ.பொ.க. மேற்கொள்கிறது.

எனவே வரும் மே 16ஆம் நாள் தமிழ்நாட்டில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் தமிழ்மக்கள் வாக்குப் போடாமல், தேர்தலைப் புறக்கணிக்க வேண்டுமென்று அன்புடன் மா.பெ.பொ.க. பொதுக்குழு (26-3-2016) வேண்டிக் கொள்கிறது.

**தீர்மானம் 2 :**

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 2011 முதல் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையில் படிக்கும் மாணவ, மாணவியர் கட்டாயமாகத் தமிழை ஒரு மொழிப் பாடமாகப் படிக்கவும், ஆண்டுதோறும் நடைபெறும் பொதுத் தேர்வில் தமிழ்ப்பாடத் தேர்வை எழுதவுமான ஆணையை நடைமுறைப்படுத்தியது. அந்த ஆணையை அண்ணா தி.மு.க. அரசினர் பின்பற்றிய போதும், தனியார் பள்ளிகளை நடத்துகிறவர்கள் இந்த அரசு ஆணையைப் புறக்கணித்தும் பிறமொழிக்காரர்கள் அவரவர் மொழியில் பாடம் நடத்தினார்கள். அந்தப் பள்ளிகளின் கோரிக்கையை ஏற்றுப் பிறமொழியினர் அவரவர் தாய்மொழியில் மொழிப்பாடப் பிரிவில் தேர்வு எழுதலாம் என்று சென்னை உயர்நீதிமன்றம் அண்மையில் தீர்ப்புக் கூறியுள்ளது.

இது அரசாணைக்கு எதிரானது என்றும், கடுமையான கண்டனத்துக்குரியது என்றும் மா.பெ.பொ.க. பொதுக்குழு பதிவு செய்கிறது. கல்வியாளர்கள் இத்தீர்ப்பைக் கண்டனம் செய்ய வேண்டும் என வேண்டிக் கொள்கிறது.

**தீர்மானம் 3 :**

ஆதித்திராவிடர் அல்லாத மற்றச் சாதிப் பெண்களை மணந்து கொள்ளும் ஆதித்திராவிட இளைஞர்களையும், அவரவரின் மனைவிகளையும் தனியாகவோ, இணையாகவோ, சாதிவெறி பிடித்த மேல்சாதிக்காரர்கள் கொலை செய்வது என்பது அண்மைக்காலமாகத் தமிழ்நாட்டில் பெருகி வருகின்றது. இப்படிப்பட்ட கொலைகாரர்களுக்கு அதிகார வர்க்கத்தினரும், அந்தந்தச் சாதி அரசியல் கட்சியினரும், காவல்துறையினரும் துணைபோகின்றனர். இதில் சாதி வேறு பாடோ, கட்சி வேறுபாடோ உண்மையில் இல்லை.

வாழ்நாள் முழுவதும் தந்தை பெரியார் பரப்புரைச் செய்த சாதி ஒழிப்புக்கு இது நேர் எதிர்மாறான நிலையாகும். எனவே இப்படிப்பட்ட கொலைகளுக்குக் காரணமான கொலைக் குற்றவாளிகளையும், கொலைக்குத் தூண்டியவர்களையும், இதைத் தடுக்கத் தவறிய சாதி உணர்ச்சி கொண்ட அதிகார வர்க்கத்தினரையும் அடையாளங்கண்டு அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்று இப் பொதுக்குழு தமிழக அரசினரை வேண்டிக் கொள்கிறது.

**தீர்மானம் 4 :**

2016 மே 20இல் தொடங்கி 2 மாத காலத்தில் கட்சிக் கிளை உள்ள ஒவ்வொரு மாவட்டத்தினரும் 200 முதல் 300 ஆண்டுக் கட்டண உறுப்பினர்களையும்; 25 முதல் 50 பத்தாண்டுக் கட்டண உறுப்பினர்களையும் சேர்த்து அந்தந்த மாவட்டத்தில் நடைபெறவுள்ள கட்சிப் பரப்புரைக் கூட்டத்தில் பொது மேடையில் வழங்க வேண்டுமென்று மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர்களையும், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களையும் இப்பொதுக்குழு அன்போடு வேண்டிக் கொள்கிறது.

❖

**கட்டுரைத் தொடர்-38**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

**இன்றைய பிரச்சனை**

"குடிஅரசு" பத்திராதிபரும், பிரசுர கர்த்தாவும் "விடுதலை" பிரசுர கர்த்தாவுமான தோழர் ஈ.வெ. கிருஷ்ணசாமியும் "விடுதலை" ஆசிரியர் பண்டித எஸ். முத்துசாமி பிள்ளையும் 124 எ. ராஜ நிந்தனைச் சட்டப்படியும், 153(எ) வகுப்புத் துவேஷச் சட்டப்படியும் அக்டோபர் 7-ந் தேதி சென்னை சர்க்காரால் கைது செய்யப்பட்டு, ஈரோடு சப்ஜெயிலில் காவலில் வைத்திருக்கின்ற சேதியை தினசரி வாயிலாக அறிவீர்கள். இதிலிருந்து சொந்த மனசாட்சிப்படி எவரும் பொதுநல சேவையில் ஈடுபட முடியாதென்றும், சுயமதிப்போடும், தன் மனசாட்சிப் படியும் ஒருவர் நடக்க வேண்டுமானால் அவர் எத்தகைய கஷ்ட நஷ்டத்திற்கும் அடக்கு முறைக்கும் ஆளாக வேண்டுமென்பது நன்கு புலனாகும். இத்தகைய துன்பங்கள் ஏகாதிபத்தியத்தையே எதிர்க்கிறோம் - உடைக்கிறோம் - தகர்க்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கும் ஆட்சியில் ஒருவர் அனுபவிக்க வேண்டியிருக்கிறதென்பதைக் குறித்துத் தான் நாம் வருந்த வேண்டியிருக்கிறது. இந்தச் சம்பவத்தை நோக்கும்போது கனம் ராஜகோபாலாச்சாரியார் ஹிட்லரைப் போல தனக்கு விரோதமான அபிப்பிராயமுடைய நோக்க முடைய கட்சியோ இயக்கமோ நாட்டிலே இருக்கக்கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்டு அவருக்கு எதிராக இருக்கிற இயக்கத்தை அழிக்கப் புறப்பட்டுவிட்டார் என்தற்குச் சந்தேக மேயில்லை. என்ற போதிலும் உண்மை உழைப்பாளர்கள் என்பவர் எந்தவிதக் கஷ்டத்திற்கும் அஞ்சார். தமது இலட்சியம் உயர்வானதாயிருக்கையில் எதைக்கண்டும் அஞ்ச வேண்டிய தில்லை. தாம் செய்வது பொதுநல விருத்திக்குத் தேவை யானது என்று மனப்பூர்வமாக நம்பியிருக்கும் வரை எத்தகைய இடுக்கண்களுக்கும் அஞ்சாது பாடுபட்டுக் கொண்டே வருவார்கள். தமிழர்கள் என்றென்றும் தலையெடுக்காமல் அடிமை வாழ்விலிருந்து மீளாமலிருக்க என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ அவைகளை ஒன்றன் பின் ஒன்றாக கனம் ஆச்சாரியார் செய்து வருகிறார்.

எனவே இந்த ஆட்சியில் மானமுள்ள-ரோஷமுள்ள தமிழ் மகன் சுயமரியாதையோடு வாழமுடியாது என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும் என்று கேட்கிறோம். பார்ப்பனீயக் கொடுமையைப் பாமர மக்களுக்கு எடுத்துரைப்பது வகுப்புத் துவேஷம் என்று சொல்லப்படுமா னால், பார்ப்பனீய ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெற வழி எடுத்துரைக்க உரிமையில்லையானால் பார்ப்பனீயத்துக்கு அடிமையாயிருந்து உயிர் வாழ்வதைவிட சுத்த வீரனாக - வீரப் புருஷனாக - ஒரு நாளாவது விளங்கிவிட்டு மறைவது தான் மேல் என்று சொல்லுவோம். ஆகவே இன்றைய



அடக்குமுறையிலிருந்து - தமிழர்கள் விடுதலை அடைய வேண்டுமா அல்லது தங்கள் முயற்சியில் இருந்து பின்வாங்கிக் கொள்வதா என்பது தான் நமதியக்கத்தவர்கள், நமதியக் கத்தில் அபிமானமும், அனுதாபமும் கொண்டவர்கள் முன் தற்போது இருக்கிற முக்கியப் பிரச்சினையாகும்.

- குடியரசுத் தலையங்கம், 9-10-1938

**"விடுதலை" ஆபிஸ் சோதனை:**
**பொது ஜனங்கள் பரபரப்பு 3 தினப் பத்திரிகைகள் பறிமுதல்**

ஈரோடு, அக்.6 - நேற்று காலை சென்னையிலிருந்து ஒரு சி.ஐ.டி. இன்ஸ்பெக்டரும், ஒரு சி.ஐ.டி. சப்-இன்ஸ்பெக்டரும், ஒரு ஹெட் கான்ஸ்டேபிலும் ஈரோட்டிற்கு வந்திருந்தார்கள்.

இவர்கள் வந்திருப்பதை எப்படியோ அறிந்த பொது ஜனங்கள், தோழர் ஈ.வெ. இராமசாமி அவர்கள் இன்று கைது செய்யப்படப் போகிறார் என்று பேசிக்கொண்டார்கள். இதனால் ஊரெல்லாம் மிகுந்த பரபரப்படைந்திருந்தது. இதை அறிந்த தோழர் ஈ.வெ. இராமசாமி அவர்கள் தனது நண்பர்களிடமும், உறவினர்களிடமும் விடை பெற்றுக்கொண்டு உடுப்பு படுக்கை யுடன் வந்து "விடுதலை" ஆபிசில் காத்துக் கொண்டிருந்தார்.

சரியாக மாலை 3.30 மணிக்கு ஒரு சி.ஐ.டி. இன்ஸ்பெக்டரும், ஒரு சி.ஐ.டி. சப்-இன்ஸ்பெக்டரும், உள்ளூர் சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், சில கான்ஸ்டேபிள்களும் 'விடுதலை' ஆபீசிற்கு வந்தார்கள். வந்து சில இடங்களில் சோதனை செய்து 19-8-1938, 27-8-1938, 30-8-1938-ந் தேதி, 'விடுதலை'ப் பத்திரிகைகளைப் பறிமுதல் செய்து, அந்தத் தேதி பத்திரிகைகள் எவ்வளவு இருந்ததோ அவ்வளவையும் எடுத்துக்கொண்டார்கள். பின் சில கணக்குப் புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள்.

"விடுதலை" ஆபிசிற்கு போலீஸ் ஆபீசர்கள் போயிருக் கிறார்கள் என்ற செய்தி ஊரெங்கும் பரவிவிட, தோழர் ஈ.வெ. ராமசாமி கைது செய்யப்படப் போகிறார் என்று ஜனங்கள் நினைத்து, சுமார் ஆயிரம் பேர்களுக்குமேல் 'விடுதலை' ஆபீசை முற்றுகை போட்டதுபோல் கூடிவிட்டார்கள். போலீஸ் ஆபிசர்கள் தோழர் ஈ.வெ.ரா.வை நாங்கள் கைது செய்யப் போவதில்லை என்று கூறியும் எவரும் போகாமல் அங்கேயே குழுமியிருந்தார்கள். பின் சுமார் இரவு 8.00 மணிக்கு போலீஸ் ஆபீசர்கள் "விடுதலை" ஆபீசை விட்டுப் போனார்

கள். அப்பொழுதும் ஜனங்கள் அவ்விடத்தை விட்டுப் போகாமலே இருந்தார்கள். பின் தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் வெளியில் வந்து ஜனங்களிடம் தன்னை இதுவரை கைது செய்யவில்லையென்றும், யாவரும் தயவுசெய்து போகும்படியும் கேட்டுக் கொண்டு வீட்டிற்குச் சென்றார். பொது மக்களனைவரும் அவரைத் தொடர்ந்து அவர் வீட்டிற்குச் சென்றார்கள். எவ்வளவோ சொல்லியும் சென்னைக்கு இங்கிருந்து 12.30 மணிக்குச் செல்லும் கொச்சின் எக்ஸ்பிரஸ் (3ஆவது மெயில் வண்டி) போகும் வரை யாரும் போகாமல்காத்திருந்தார்கள். பெரிய அக்ரகாரம், பவானி, முதலிய வெளியூர் வாசிகளும், உள்ளூர் வாசிகளும் சுமார் 250 பேர் வரை ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று இரவு 1 மணிவரை காத்திருந்து திரும்பி வந்தார்கள். சிலர் மாலைகளுடன் ஈ.வெ.ரா.வை வழியனுப்ப வந்திருந்தார்கள்.

ஆகவே நேற்று வந்து போலீசார் சோதனை போட்டு திரும்பிச் சென்றதிலிருந்து சிலரை அரஸ்ட்டு செய்யவும், 'விடுதலை' பத்திரிகையை எப்படியாவது நிறுத்துவதற்கும் காங்கிரஸ் மந்திரிகள் முயற்சி செய்து வருகிறார்கள் போலிருக்கிறதென்று பொது ஜனங்கள் பேசிக் கொண்டு சென்றார்கள். போலீஸ் அதிகாரிகள் பேச்சுகளில் இருந்தும் நடவடிக்கைகளிலிருந்தும் கூடிய சீக்கிரம் "விடுதலை" மீது வழக்கு தொடரப்படலாம் என்று யூகிக்க வேண்டியிருக்கிறது.

## தமிழ்த் தோழர்களுக்கு வேண்டுகோள்

### பணம் படைத்தோர் நிதிதருவீர்.

அன்புள்ள தோழர்களே!

இன்று நமது தமிழ் மொழியையும், தமிழர் நாகரிகத்தையும் கொலை செய்து தமிழர்களை, ஆரியர்களுக்கும் ஆரிய நாகரிகத்திற்கும் அடிமைப்படுத்தி பழைய மனுதர்ம முறைக்குக் கொண்டுவர இந்தி மொழியை கட்டாயமாகப் புகுத்த சென்னை மாகாண முதல் மந்திரி கனம் ஆச்சாரியார் முயற்சித்துவிட்டார்.

இதைக் கண்டித்து சென்னை மாகாண முழுதும் பெருத்த கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. இது சம்மந்தமாக சுமார் 360 பேர்கள் வரை கைது செய்து தண்டிக்கப்பட்டு சிறையில் ராகிக்களி போட்டு செல் குத்துதல், செக்காட்டுதல் போன்ற கடினமான வேலை வாங்கப்பட்டு வருகிறார்கள்.

சிலர் போபால் சரியாய் கவனிப்பாரற்றுஇருக்கிறார்கள். தோழர்கள் ஈ. வெ. ரா, பாண்டியன், விஸ்வநாதம், பாரதியார் முதலிய மற்றும் பல தலைவர்கள் சீக்கிரம் கைது செய்யப்படலாம்.

'குடி அரசு'ப் பத்திராதிபரும் பிரசுர கர்த்தாவும் 'விடுதலை' பிரசுர கர்த்தாவும் ஆன தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமியும் 'விடுதலை' ஆசிரியர் தோழர் பண்டித முத்துசாமி பிள்ளையும் 124 எ செக்ஷன்படியும் 153(எ) செக்ஷன்படியும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப் பட்டிருக்கின்றனர்.

ஆகையால் தமிழ்த் தோழர்களே! இந்தப் போரை வெற்றி பெறும் வரை தொடர்ந்து நடத்தவேண்டும். அப்படி தொடர்ந்து நடத்த வேண்டுமானால் அதிகமான ஆள்பலம், பணபலம் வேண்டும். ஆகையால் உங்களாலான பண உதவி அவசியம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

விலாசம்.

சி. ஆ. பெ. விஸ்வநாதம்,
காரியதரிசி.

இந்தி எதிர்ப்புக்கமிட்டி,
தஞ்சை ரோடு, திருச்சினாப்பள்ளி.

**ஈ.வெ.ரா.**

**ஈ.வெ.கி. பேட்டி**

ஈரோடு, அக்.10 - ஈரோடு சப்ஜெயிலில் தோழர்கள் ஈ.வெ. கிருஷ்ணசாமி அவர்களும், பண்டித எஸ். முத்துசாமி பிள்ளை அவர்களும் மிகுந்த உற்சாகமாக இருக்கிறார்கள். 8-9-1938-ந் தேதி மாலை 4 மணிக்கு தர்மபுரி ஜில்லா போர்டு மெம்பர் தோழர் எம்.என். நஞ்சையா அவர்களும், திருவாரூர் தோழர் டி.என். ராமன் அவர்களும், சப்-மாஜிஸ்திரேட் அவர்களின் அனுமதியின் பேரில் தோழர்கள் ஈ.வெ. கிருஷ்ணசாமி அவர்களையும், பண்டித முத்துசாமி பிள்ளை அவர்களையும் பார்த்தார்கள். இரு தலைவர்களும் தோழர்களை மிகுந்த மலர்ந்த முகத்துடன் வரவேற்று தாங்கள் சுகமாக இருப்பதாகவும், மற்றபடி நடக்க வேண்டிய வேலைகளைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்றும் கூறினார்கள். பின் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு தலைவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றுவிட்டார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருந்த தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்களுக்கு, தோழர்கள் ஈ.வெ. கிருஷ்ணசாமி அவர்களும், பண்டித முத்துசாமி பிள்ளை அவர்களும் கைது ஆன செய்தி தந்தி மூலம் அறிவிக்கப்பட்டது. தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் 9-10-1938ந் தேதி காலை 9.30 மணிக்கு திருநெல்வேலியிலிருந்து இங்கு வந்து சேர்ந்தார்.

சென்னையிலிருந்து பண்டித முத்துசாமி பிள்ளை அவர்களைப் பார்க்க அவரது மருமகன் தோழர் கோலப்ப பிள்ளை அவர்களும் வந்திருந்தார்.

தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்களும், தோழர் முத்துசாமி பிள்ளை அவர்கள் மருமகனும் சப்-மாஜிஸ்திரேட் அனுமதியின் பேரில், 9-10-1938ந் தேதி மாலை 4 மணிக்கு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் போய் அவர்களைப் பார்த்து வந்தார்கள்.

தோழர்கள் ஈ.வெ. கிருஷ்ணசாமியும், பண்டித முத்துசாமி பிள்ளையும் சிரித்த முகத்துடன் "நீங்கள் எங்களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். நாங்கள் சுகமாக இருக்கிறோம். மற்ற வேலைகளை நீங்கள் கவனியுங்கள்" என்று கூறினார்கள். பின் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு தோழர்கள் ஈ.வெ. ராமசாமியும், கோலப்ப பிள்ளையும் விடைபெற்றுக் கொண்டு வந்துவிட்டார்கள்.

(தொடரும்)

# "திராவிட நாடு" இதழ்கள் வேண்டும்! அறிஞர்கள் அறிவித்து உதவுங்கள்!

"திராவிட நாடு" கிழமை இதழின்,

1. 1944ஆம் ஆண்டைய சூலை, ஆகத்து இதழ்களும்;
2. 1947ஆம் ஆண்டைய சூன், சூலை இதழ்களும்;
3. 1949ஆம் ஆண்டைய மே, சூன், சூலை, ஆகத்து, செப்டம்பர், அக்டோபர் இதழ்களும் உடனே வேண்டப்படுகின்றன.

---

இவ்விதழ்களைச் சொந்தமாக வைத்துள்ள அறிஞர்கள்,

**"வே. ஆனைமுத்து - 9444804980"**

என்ற என் எண்ணுக்கு, அன்புகூர்ந்து அறிவிக்க வேண்டுகிறேன்.

நேரில் வந்து ஒளிப்படம் (Xerox) எடுத்துக் கொள்கிறேன். நன்றி.

---

அம்பத்தூர்
1-4-2016

அன்பன்
**வே. ஆனைமுத்து**

## பேராசிரியர் சாமி. அறவணன் அவர்களுக்கு நன்றி!

பேராசிரியர் சாமி. அறவணன் அவர்கள் தம் துணைவியார் திருமதி. பகுத்தறிவு அறவணன் அவர்களின் நினைவாக, அம்பத்தூரில் இயங்கும் பெரியார்-நாகம்மை ஆய்வு நூலகத்திற்கு, ரூபாய் 6,000 மதிப்புள்ள 74 புத்தகங்கள், முனைவர் பட்ட ஆய்வேடுகள், ஆய்வியல்-நிறைஞர் ஆய்வேடுகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், இலக்கிய, இலக்கண நூல்கள், சுயசரிதை, நாட்டுப்புறப் பாடல்கள் பற்றிய ஆய்வு நூல்கள் ஆகியவற்றை நன்கொடையாக வழங்கியுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெரியார் ஈ.வெ. இராமசாமி-நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளையின் சார்பில் அப்பெருமகனார்க்கு நன்றியை உரித்தாக்குகிறோம்.

**வே. ஆனைமுத்து**
தலைவர் மற்றும் மேலாண்மை அறங்காவலர்
& அறங்காவலர்கள்

## நாட்டின் நிலைமை

ஆரிய மாயையால் அழிந்தது நாடு,
அதனால் வந்தது மாபெரும் கேடு!
இதுநாள் வரையில் தொடருது சூது
அதுதான் மனுதர்ம ஆட்சியே பாரு!

மானிட வாழ்வின் மேன்மை தடுத்தான்
மாபெரும் துரோகத்தை மனதாரப் புரிந்தான்
ஆரியப் பார்ப்பான் என்பானும் அவனே
விரியன் பாம்பாய் விளங்கி வந்தானே?

ஆலய மெங்கணும் அர்ச்சக னாக
ஆதித் தமிழனை அழைத்தார் கலைஞர்!
தடுத்தான் பார்ப்பான் சாத்திரத் தாலே!
எடுப்பார் பிள்ளையாய் இருக்கிறோம் நாமே!

செருப்பாய்க் கிடந்தோம் தமிழர்கள் நாமே!
செருக்காய் வாழ்ந்திட உழைத்தார் பெரியார்!
வேகாது இம்மண்ணில் பார்ப்பான் பருப்பு
அதுதான் நம்நாட்டின் இன்றைய இருப்பு!

- **தொ. எழில்நிலவன்,** களமருதூர்

# எத்தனைக் காலம்தான் ஏமாற்றுவார்!

அண்மையில் 24.2.2016 முதல் 28.2.2016 முடிய சென்னை, அம்பத்தூரில் கங்கைநகரில் உள்ள, ஸ்ரீவாரி சேஷ மகாலில் ஆன்மிகப் பணியைச் செய்து வரும் 'அம்பத்தூர் நாமசங்கீர்த்தன சம்ரட்சண டிரஸ்ட்' என்கிற அமைப்பு, தனது 15ஆம் ஆண்டு மகோத் சவத்தை முன்னிட்டு, "ஸ்ரீ அதிருத்ர ஸ்ரீசத சண்டி மகா யாகம் மற்றும் பஞ்ச திருக்கல்யாண மகோத்சவ யாகம்" என்பவற்றை, மூன்று நாள்கள் நடத்தியது.

இந்த யாகத்தின் நோக்கம், சென்னையில் சமீபத் தில் பெய்த மழை மக்களை வெள்ளத்தில் மிதக்க வைத்தது. ஆனால் சில நேரங்களில் தேவையான நேரத்தில் மழை பொய்த்துப் போகும் சம்பவங்களும் நடைபெறுகின்றன. இதுபோன்ற காலம் தவறிய காரியங்களைச் சரியான நேரத்தில், சரியான அளவில் நடைபெற இறைவனை வேண்டும் நோக்கில் நடத்தப்பட்டது.

மழை எப்போது வரும் என்று முன்கூட்டியே வானிலை ஆராய்ச்சி விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்தும், அதைப்பற்றி அக்கறையும் கவலையும் கொள்ளாத அரசும், அதிகாரிகளும் செய்த தவறினால் மக்கள் அவதிப்பட நேர்ந்தது. மக்கள் மழையினால் துன்பங்களை அடைந்த போதிலும் அதன்பிறகு மழை நீரைச் சேமிக்க வேண்டிய கட்டாயத்திற்கு அரசு ஆயத்தம் ஆகவில்லை.

**சரியான நேரத்தில் மழை வேண்டி யாகம் நடத்துபவர்கள், மூன்று நாள்கள் தொடர்ந்து அதிகப் பொருட்செலவு, பணச்செலவு செய்து நடத்தினார்கள்.**

குறைந்தபட்சம் 15 இலட்சம் ரூபா வரை செலவு செய்திருப்பார்கள். இந்தப் பணத்தையும், மனித உழைப்பையும் வைத்துக் கொண்டு, அவர்கள் அந்தப் பகுதியில் உள்ள ஓர் ஏரியைத் தூர்வாரிச் சுத்தம் செய்திருக்கலாம். ஏன் செய்யவில்லை? நல்ல தண்ணீர் கிடைப்பதற்கு அரசின் உதவியோடு அந்தப் பகுதியில் ஏதேனும் ஒரு வகையில் ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கலாமே, ஏன் முடியவில்லை?

காலங்காலமாகப் பார்ப்பனர் என்கிற ஒரு பிரிவினர் தங்கள் வாரிசுகளின் நன்மைக்காக, பரம் பரை பரம்பரையாகச் செய்துகொண்டுவரும் வேலை யே இதுபோன்ற யாகம் செய்வதாகும். இந்த யாகத்தில் பொதுமக்கள் யார் வேண்டுமானாலும் கலந்துகொள்ள லாம் என்று அழைப்பு விடுத்தும், 90 விழுக்காடு பேர் பார்ப்பனர்கள் மட்டுமே கூடியிருந்தனர்.

பார்ப்பனர் தனிப்பட்ட இடத்தில் சாப்பிட்டார்கள். எப்படிப்பட்ட சாப்பாடு - எங்கே சாப்பிட்டார்கள் என்பது அவர்களுக்கு மட்டுமே தெரியும்.

தனியாக உட்கார வைக்கப்பட்ட பக்தர்களுக்குப் போடப்பட்ட சாப்பாடு மிக மோசமானது.

**2016ஆம் ஆண்டிலும் - இப்படிப்பட்ட யாகங் களைப் பார்ப்பனர்கள் நடத்திட ஆயிரக்கணக்கில் நன்கொடை தரும் திராவிட இன மக்கள் இதைப் பார்த்தாகிலும் பார்ப்பனர்களின் ஏமாற்று மோசடி களைப் புரிந்துகொள்ள வேண்டாமா?**

**- பங்கேற்ற பார்வையாளன்**

## மருத்துவர் செம்மலர் பிறந்த நாள்

தோழர் தி.துரை சித்தார்த்தனின் துணைவி யாரும், திருச்சி ஓமியோபதி கல்லூரி மருத்துவப் பேராசிரியருமான செம்மலர் அவர்கள், 26.3.2016 சனி அன்று, அம்பத்தூரில் நடைபெற்ற மா.பெ.பொ.க. பொதுக்குழுக் கூட்டத்தில் பங்கேற்ற அனைவர்க்கும் தம் 36ஆம் பிறந்த நாள் மகிழ்ச்சியாக, தேநீர் (காலை, மாலை), பகல் உணவு இனிப்புடன் விருந்தளித்தார்.

- ஆசிரியர் குழு
**"சிந்தனையாளன்"**

## பார்ப்பனரை ஒடுக்குவோம்!

பார்ப்பனர்க்கு நாடுமொழி எதுவு மில்லை!
பரந்துலக மெங்குமிவர் பரவி யுள்ளார்!
பார்ப்பனரால் தான்தமிழர் தாழ்ந்து போனார்!
படிப்பதற்குத் தமக்கேமுன் னுரிமை யென்பார்!
பார்ப்பனரால் தமிழ்சிதைந்து போயிற் றிங்கு!
பாரிலெங்கு மில்லாத சாதி யத்தைப்
பார்ப்பனர்தாம் தமிழரிடை புகுத்திச் சாதிப்
படிநிலையில் தாழ்நிலைக்குத் தள்ளி விட்டார்!

இன்றைக்கும் இக்கொடுமை தமிழ ருக்கே
இழைத்துக்கொண் டிருக்கின்றார்! ஒழிக்கா துள்ளோம்
என்றைக்கு விடியுமெனக் காத்தி ருந்தால்
எந்நாளும் விடியாது பொழுதென் றோர்வாய்!
ஒன்றைநம் தமிழரெலாம் உணர்தல் வேண்டும்!
உரிமையுள்ள தனிநாட்டைப் படைக்கும் நாளே
நன்றுய்க்கும் நாளென்ற தெளிவு கொண்டு
நமக்கென்றோர் நாட்டையுரு வாக்கிக் கொள்வோம்!

**- மருதநாடன்**

# முன்னாள் மாணவர் ப. வடிவேலு அவர்களுக்கு சிறுநாத்தூர் பள்ளியில் ஆண்டு விழாவில் பாராட்டு

**கீழ்**பென்னாத்தூரையடுத்த சிறுநாத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 10-3-2016 அன்று ஆண்டு விழா நடைபெற்றது. ஊராட்சி மன்றத் தலைவரும், கிராமக் கல்விக் குழுத் தலைவருமான பிரேமா ஜெய்சங்கர் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் மு. சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். தலைமையாசிரியர் பா. வேலு வரவேற்புரையாற்றினார். பட்டதாரி ஆசிரியர் அ. தில்ஷாத் ஆண்டறிக்கை வாசித்தார்.

தலா ரூ.1000 செலுத்தி பள்ளியின் கல்விப் புரவலர் திட்டத்தில் சேர்நதுள்ள 115 நபர்களுக்கு உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பொ. மோகன் பொன்



னாடை அணிவித்து விழாப் பேருரை நிகழ்த்தினார். கலை நிகழ்ச்சிகளில் பங்குபெற்ற மாணவர்களுக்குக் கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் நா. துரைக்கண்ணு பரிசளித்து சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து 25 ஆண்டுகளாக மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஊக்குவிக்க பரிசுப் பொருட்களை வழங்கியதற்கும், அவ்வப்போது பள்ளியின் வளர்ச்சிக்கு உதவியதற்கும் முன்னாள் மாணவர் ப. வடிவேலுவுக்கும் கிராமத்தின் முதல் மருத்துவர் வ. அரிராசு (ப. வடிவேலுவின் மகன்) அவர்களுக்கும் ஆண்டு விழாவில் மாணவர்களுக்கு உணவு வழங்கிய திரு. தமிழரசு (முன்னாள் படைவீரர்) அவர்களுக்கும் நூல்கள், ஆடை அணிவித்துப் பாராட்டப்பட்டனர்.

விளையாட்டுப் போட்டிகளில் வென்ற மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்றுகள் மற்றும் பரிசுகளை வட்டார வள மைய மேற்பார்வையாளர் ஏ. தனசேகரன் அளித்துச் சிறப்புரை ஆற்றினர். ஆசிரியர் பயிற்றுநர்கள் மான்விழி, முத்துச்செல்வி, பொன்னுசாமி, முன்னாள் தலைமை ஆசிரியர்கள் ஜினேந்தரன், இ.ராமச்சந்திரன், கோ.கோதண்டராமன், செஞ்சி உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் சு. அன்பழகன்,



*தோழர் ப.வடிவேலு அவர்களின் மகன் மருத்துவர் அரிராசு பாராட்டப்பெறுகிறார்*

ஓய்வு பெற்ற கருவூலக அலுவலர் குலசேகரன் மற்றும் ஒன்றியத்தின் பல்வேறு பகுதியில் பணியாற்றும் ஆசிரியர்கள், சங்கப் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். ஆசிரியர்கள் இரா.மகேஸ்வரி, அ. வாசுகி, சி. கணநாதன், அ.சிவசங்கரி, க.செல்வி, க.பாலமுரளி, எம்.சக்திவேல், ப. பரிமளா, மணி ஆகியோர் பாராட்டப்பட்டனர். தமிழாசிரியர் சி.அ.முருகன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி, முடிவில் நன்றி கூறினார்.

## தனித்தமிழர் சேனைத் தலைவர் நகைமுகன் மறைந்தார்!



சிவகங்கைச்சீமையில் சுயமரியாதைக் கொள்கையின் காப்பாளராக விளங்கியவர் புகழ்பெற்ற வழக்குரைஞர் இராமச்சந்திரன் சேர்வை.

அன்னாரின் குடும்பத்தினர் அனைவரும் அன்றும் இன்றும் தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளைப் போற்றி வருகிறார்கள்.

அவ்வழியில் வந்தவர் தோழர் நகைமுகன் அவர்கள்.

தமிழ்மொழிக் காப்பு, தனித் தமிழ்நாடு, ஈழவிடுதலைக் கொள்கைகளுக்காக - தமிழகம், தில்லி, பஞ்சாப் முதலான மாநிலங்களின் முற்போக்காளர்களோடு இணைந்து பணியாற்றியவர். அவரே ஓர் இயக்கமாக இயங்கியவர்; “தனித்தமிழர் சேனை” என்னும் அமைப்பின் தலைவர். அத்தகைய மறஞ்செறிந்த நகைமுகன் அவர்கள் தம் 66ஆம் வயதில் 14-3-2016 அன்று மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் குடும்பத்தாருக்கு மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

- ஆசிரியர் குழு
“சிந்தனையாளன்”

# தமிழ் நூல்கள் பரிசுப்போட்டி 2016
## பேராசிரியர் யோகசுந்தரனார் அறக்கட்டளை, வேலூர்

நற்றமிழ் வளர்த்த தனித்தமிழ் ஆர்வலர் பேரா. செ.யோகசுந்தரனார் ஊரிசு கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், தமிழறிஞர் மூ.வ.வின் இணைபிரியா வாழ்நாள் தோழர்

* **நல்ல தமிழில் 2014, 2015, 2016 ஆண்டுகளில் வெளியான கதை, கவிதை, கட்டுரை நூல்கள்.**
* **கேடயத்துடன் முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகள் முறையே ரூ.5000/-, ரூ.3000/-, ரூ.2000/-,**
* **நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது, நூல்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.**
* **மூன்று படிகள், நூலாசிரியரின் முழு விவரத்துடன், 21.05.2016க்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.**
* **அறக்கட்டளையின் ஆண்டு விழாவில் பரிசுகள் அளிக்கப்படும்.**

**நூல்களை அனுப்பவேண்டிய முகவரி :**

**பேரா. செ.யோகசுந்தரனார் அறக்கட்டளை**
மனை எண்.828, மூன்றாம் முதன்மைச்சாலை,
டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், வேலூர் - 632 006
**தொடர்புக்கு : 9444111416, 9486969525, 8144842449**

# புதுவையில் 'சதுரங்கக் காய்கள்' நூல் அறிமுகக் கூட்டம்



பாவலர் வையவனின் 'சதுரங்கக் காய்கள்' கவிதை நூல் அறிமுகக் கூட்டம் 27.3.2016 ஞாயிறன்று மாலை புதுச்சேரி செகா கலையரங்கில் பாவலர் புதுவைத் தமிழ்நெஞ்சன் தலைமையில் நடைபெற்றது. ஓவியர் அன்பழகன் அனைவரையும் வரவேற்றார். 'புதிய தூரிகைகள்' அமைப்பின் தலைவர் ஓவியர் இளமுருகு, 'மாணவர் பொதுநலத் தொண்டியக்கம்' அமைப்பின் கு.அ. தமிழ்மொழி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தனித்தமிழ்க் கழகத்தை சேர்ந்த சீனு. அரிமாப் பாண்டியன், செஞ்சி 'குறிஞ்சி வட்ட' அமைப்பாளர் கவிஞர் செந்தில்பாலா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நூல் அறிமுகமும், மிகச்சிறந்த திறனாய்வுரையும் புதுவை தாகூர் அரசு கலைக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் 'சிந்தனைச் செம்மல்' முனைவர் நா. இளங்கோ அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் அறிமுகம் செய்து வெளியிட்ட நூலை, ஓவியர் அன்பழகனின் மனைவி திருமதி. தமிழ்ச்செல்வி அவர்கள் பெற்றுக்கொண்டார். புதுச்சேரியைச் சேர்ந்த பல்வேறு தமிழறிஞர்கள் திரளாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வு பாவலர் வையவனின் ஏற்புரைக்குப் பின், இனிதே நிறைவுற்றது. இறுதியாக முனைவர் நா. இளங்கோ அவர்களின் 28ஆவது திருமண நாளுக்கும், செகா அரங்கப் பொறுப்பாளர் திரு. வளையாபதி அவர்களுக்கு 25ஆவது திருமண நாளுக்கும் அனைவரும் வாழ்த்துத் தெரிவித்தனர்.

# திராவிடர் கழகத்தின் சார்பில் திருச்சி - சிறுகனூரில் சாதி - தீண்டாமை ஒழிப்பு, சமூகநீதி மாநாடுகள்

திருச்சியிலிருந்து 28 கி.மீ. தொலைவில் உள்ள திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையிலுள்ள சிறுகனூரில் 27 ஏக்கர் பெரியார் உலகம் திடலில், திராவிடர் கழகத்தின் சார்பில், அம்பேத்கர் பந்தலில் - அன்னை நாகம்மையார் - அன்னை மணியம்மையார் அரங்கத்தில் - சாதி - தீண்டாமை ஒழிப்பு - சமூகநீதி மாநாடுகள், மார்ச் 19 மற்றும் 20 (சனி-ஞாயிறு) தேதிகளில் காலை 10 மணிமுதல் இரவு 10 மணிவரை நடைபெற்றன.

மாநாட்டு அரங்கத்தைச் செயலவைத் தலைவர் சு. அறிவுக்கரசு திறந்து வைத்தார். மாநாட்டின் புகைப்படக் கண்காட்சியை, குசராத் மாநில மேனாள் தலைமை நீதிபதி பி.ஆர். கோகிலகிருட்டிணன் திறந்து வைத்தார். இரண்டு நாள்கள் நடைபெற்ற சாதி - தீண்டாமை ஒழிப்பு, சமூகநீதி மாநாட்டில் கலந்து கொண்டு பின்கண்டவர்கள் உரையாற்றினர்.

ஆதித்தமிழர் பேரவைத் தலைவர் இரா. அதியமான் பெரியார் - படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். மற்றும் திருச்சி மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.என். நேரு, செர்மனி கொலோன் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் உல்ரிக் நிக்லஸ், ‘‘சாதி-மதவாதத்தை முறியடிப்போம், சமூகநீதிக் கொடியை தூக்கிப் பிடிப்போம்’’ என்ற தலைப்புகளில் புதுடெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், சென்னை அம்பேத்கர் - பெரியார் டிப்பு வட்டம், அய்.அய்.டி. மாணவர்கள்-இந்தியத் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், புனே, அய்தராபாத் மத்திய பல்கலைக்கழகம், தெலுங்கானா மற்றும் உஸ்மானிய பல்கலைக்கழக ஆய்வு மாணவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர்.

பொறியாளர் மு.பெ. சத்தியவேல் முருகன், மேனாள் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் வி.வி. சாமிநாதன், வழக்குரைஞர் த. வீரசேகரன், எழுத்தாளர் ஓவியா, வழக்குரைஞர் அ. அருள்மொழி, பேராசிரியர் கே.எம். காதர் மொய்தீன், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி து. அரிபரந்தாமன், பேராசிரியர் பா. காளிமுத்து, பேராயர் எஸ்றா. சற்குணம், பூலே குடும்ப வழிப் பேத்தி திருமதி. நீதாதாய் ஹோலோபூலே, பேராசிரியர் சுப. வீரபாண்டியன், எழுத்தாளர் பழ. கருப்பய்யா, ‘தலித் முரசு’ ஆசிரியர் புனித பாண்டியன், எழுத்தாளர் வே. மதிமாறன், சங்கரி, மும்பை ‘‘தமிழ் லெமூரியா’’ இதழ் ஆசிரியர் சு. குமணராசன், நாகை ஜீவா, அகில இந்தியப் பிற்படுத்தப்பட்டோர் நலச் சங்கப் பொதுச் செயலாளர் கோ. கருணாநிதி, மஞ்சை வசந்தன், நாடாளுமன்றப் பிற்பட்டோர் பேரவை அமைப்பாளர் வி. ஹனுமந்தராவ், எம்.பி., காங்கிரஸ் கட்சி ஊடகப் பொறுப்பாளர் கோபண்ணா ஆகியோர் சிறப்புரையாற்றினர். திராவிட முன்னேற்ற கழகத்தின் பொருளாளர் மு.க. ஸ்டாலின் மாநாட்டுப் பேருரையாற்றினார். மாநாட்டுத் தலைவர் கி. வீரமணி நிறைவுரையாற்றினார்.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும், வெளிமாநிலங்களிலிருந்தும் பெரியார் தொண்டர்கள், அம்பேத்கர் கொள்கையாளர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் சமூக உணர்வாளர்கள், எழுத்தாளர்கள், திரளாகக் கலந்துகொண்டனர். மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி திருச்சி மாவட்டச் செயலாளர், இரா. கலியபெருமாள், புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றச் செயலாளர் திருச்சி ந. கருணாகரன், மணிமாறன் ஆகியோர் இரண்டு நாள் மாநாட்டிலும் கலந்துகொண்டனர்.

**போராட்ட அறிவிப்பு :**

தந்தை பெரியார் அவர்களின் இறுதிக் கட்டளையான - அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகும் உரிமையைச் செயல்படுத்தும் வகையில், குலக்கல்வி ஒழிப்பு நாளான ஏப்ரல் 18 அன்று (2016) மாநிலம் தழுவிய போராட்டம் நடைபெறும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. மற்றும் மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்திய சமூக அமைப்பில் சாதி என்பது மக்களிடையே ஆழமாக வேரூன்றியுள்ளது. அதை ஒழிப்பதற்காகத் தந்தை பெரியாரும், மாமேதை அம்பேத்கரும் தம் வாழ்நாள் முழுவதும் உழைத்தார்கள். அதன்விளைவாக - இன்று கலப்பு மணம் செய்து கொண்டவர்களை, கௌரவக் கொலை - ஆணவக் கொலை என்ற பெயரில், சாதி பெயரில் சங்கம் நடத்துபவர்களும், அரசியல் கட்சி நடத்துபவர்களும் ஒன்று சேர்ந்து சாதி, மதம், ஒழியாமல் தொடர்ந்து நிலைத்து நிற்க-கலப்பு மணம் செய்துகொண்டவர்களைப் பிரித்து விடுவதும் - இருவரையும் கொலை செய்வதும் தொடர்ந்து நடைபெறுகின்றன. தர்மபுரி இளவரசன், நாமக்கல் கோகுல்ராஜ், உடுமலை சங்கர், சாதி வெறியர்களால் கொலை செய்யப்பட்டனர். அரசும் ஆட்சியாளர்களும் தொடர்ந்து மவுனம் சாதிக்கின்றனர்.

செய்தி : **மங்கலம் அரசன்**

❖

# பத்துத் தமிழர்களைச் சுட்டுக் கொன்றவர் இராசாசி! அதை ஏன் என்று கேட்காதவர் ம.பொ.சி.!

- வாலாசா வல்லவன்

1949-இல் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டது. அதன் தலைவராகச் சித்தூர் வழக்கறிஞர் திரு. எஸ். ரங்கநாத முதலியாரும் துணைத் தலைவராகத் திரு. வி.கே. சடகோபாலச்சாரியாரும் செயலாளராகத் திரு. பி. கண்ணப்பமுதலியாரும் உறுப்பினர்களாக - மங்கலங்கிழார், கே. விநாயகம், கோல்டன், நா. சுப்பிரமணியம் உட்பட 20 பேரும் இருந்தனர். (தமிழக வடக்கு எல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும் பக். 38 கோல்டன் நா. சுப்பிரமணியம்)

இந்திய அரசு 1946-இல் ஆந்திர மாநிலத்தைப் பிரித்துக் கொடுக்க சென்னை மாகாண சர்க்காருக்கு உத்தரவிட்டது. அன்றைய முதலமைச்சர் பி. குமாரசாமி ராஜா அவர்கள் தலைமையில் பிரிவினைக் கமிட்டி அமைக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் சித்தூர் வழக்கறிஞர் ரங்கநாத முதலியார் தலைமையில் மங்கலங்கிழார், கே. விநாயகம், சடகோபாலாச் சாரியார் மற்றும் வடக்கெல்லை குழுவைச் சார்ந்த நாங்களும் திரு. டி.டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் பி. குமாரசாமி ராஜா அவர்களையும், மாண்பு மிகு பக்தவச்சலம் அவர்களையும் தனித்தனியாகச் சந்தித்து, சித்தூர் மாவட்டத்துத் தமிழ்ப்பகுதிகள் தற்போது அமைக்கப் படவிருக்கும் ஆந்திர மாநிலத்தோடு இணைக்கப்படக்கூடாது என்றும், குறிப்பாகச் சித்தூர், புத்தூர், திருத்தணி தாலுக்காக் களைத் தாய்த் தமிழகத்துடன் இணைக்கவேண்டுமென்றும், மற்றத் தாலுக்காக்களைப் பிரிப்பதற்கு எல்லைக் கமிஷன் ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் இக்குழுவின் சார்பில் கேட்டுக் கொண்டோம்.

(மேற்படி நூல் பக்.39) ஆனால் அப்போது ஆந்திர மாநிலப் பிரிவினையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1952 பொதுத் தேர்தலில் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவின் சார்பில் திரு. இ.எஸ். சுப்பிரமணிய முதலியார் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். இத்தேர்தலில் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவில் இருந்த ஆசிரியர் மங்கலங்கிழார், எஸ். ரங்கநாத முதலியார், டி.எம். திருமலைப்பிள்ளை, இ.எஸ். தியாகராஜன் ஆகியோருடன் இந்நூலாசிரியர் திருத்தணி கோல்டன் நா. சுப்பிரமணியமும் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவின் வேட்பாளரை ஆதரித்துத் தீவிரப் பிரச்சாரம் செய்தனர். திருத்தணி கே. விநாயகம் இத்தேர்தலில் செங்கல்பட்டு தொகுதி பிராஜா வேட்பாளராகப் போட்டியிட்டபோதிலும், திருத்தணிக்கு வந்து வடக்கெல்லை வேட்பாளருக்கு ஆதரவாகத் தேர்தல் பிரச்சாரம் செய்தார். (மேற்கண்ட நூல் பக். 41) ஆனால் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் வி.கே. வரதாச்சாரியார் வெற்றி பெற்றார். இத்தேர்தலில் ம.பொ.சி. காங்கிரசை ஆதரித்துத் தீவிரப் பிரச்சாரம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



1952 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் தேதி வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டிக்கூட்டம் எஸ். ரங்கநாத முதலியார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிரதமர் நேரு டிசம்பர் 19 ஆம் தேதி பாராளுமன்றத்தில் தகராறுக்கு இடமில்லாத 12 மாவட்டங்களைக் கொண்டு ஆந்திரா அமையும் என்று அறிவித்ததைப் பரிசீலனை செய்தனர். சித்தூர் மாவட்டம் தகராறுக்கு இடமில்லாத தெலுங்குப் பகுதியென நேரு அறிவித்த கருத்தைக் குறித்து இக்கூட்டம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

தமிழ்நாடு வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவினர் 17.01.1953-இல் கே. விநாயகம் தலைமையில் நீதிபதி வாஞ்சுவைச் சந்தித்து மனு ஒன்றை அளித்தனர். மங்கலங் கிழாரும், திரு. ரங்கநாத முதலியாரும், திரு. சபாபதி தேசிகரும் மனுவைத் தயாரித்தனர். திருப்பதி வரை தமிழகப் பகுதிகள் என்பதை இலக்கியச் சான்றுகளுடன் விளக்கினர். சித்தூர் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண எல்லைக் கமிஷன் அமைக்க மத்தியஅரசுக்குப் பரிந்துரைக்கப் போவதாக இக்குழுவினரிடம் நீதிபதி வாஞ்சு தெரிவித்துள்ளார். (மேற்கண்ட நூல் பக். 49)

சித்தூர் மாவட்டத் தமிழர் மாநாடு 09.02.1953-இல் நகரியில் நடைபெற்றது. மங்கலங்கிழார் வரவேற்புரையாற்றினார். பன்மொழிப் புலவர் தெ.பொ.மீ. சிறப்புரையாற்றினார். ம.பொ.சி. தலைமையுரையாற்றினார். திருத்தணி கே. விநாயகம் M.L.A. தமிழக நிலப்படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். இம்மாநாட்டுக்கு ஈ.வெ.ரா. வாழ்த்துச் செய்தி அனுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது. (மேற்கண்ட நூல் பக். 55)

தமிழ்நாடு வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி செயற்குழுக் கூட்டம், 1953 மார்ச்சு 25 மாலை திருத்தணியில் கே. விநாயகம் தலைமையில் நடைபெற்றது. சித்தூர் மாவட்டம் "தகராறில்லாத தெலுங்குப் பிரதேசம்" என்று ஒரு தலைப்

பட்சமாக அபிப்பிராயங்கள் கூறி அதை ஆந்திர மாநிலத்தோடு சேர்ப்பது என்று மத்திய சர்க்கார் அறிக்கை விட்டிருப்பதைத் தமிழக வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி பலமாக ஆட்சேபிக்கிறது.

மேலும் போராட்டத்தைத் தீவிரப்படுத்த, சாத்வீக முறையில் நேரடி நடவடிக்கையில் ஈடுபட, திருவாளர்கள் கே. விநாயகம், ஆசிரியர் மங்கலங்கிழார், திரு. என். சுப்பிரமணியம், திரு. என்.ஏ. ரஷீது, திரு. ரங்கநாத முதலியார், திரு. டி.எம். திருமலைப் பிள்ளை, திரு. இ.எஸ். தியாகராஜன் ஆகியோரைக் கொண்ட தனிக்குழு அமைக்கப்பட்டது.

இறுதி வெற்றி காணும் வரை வடக்கெல்லைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த கே.விநாயகம் ஆ.டு.ஹ அவர்களிடம் முழுப் பொறுப்பும் அளிக்கப்பட்டது. (மேற்கண்ட நூல் பக். 59)

03.04.1953 அன்று திருத்தணி வன்னியகுல சத்திரத்தில் கூடிய கூட்டத்தில்தான் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவினர் ம.பொ.சியை அதன் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். (மேற்கண்ட நூல் பக். 61)

திருத்தணியில் கண்டன ஆர்பாட்டங்கள் பலமாக இருந்தன. தெலுங்கர் கடைகள் தவிர மற்ற கடைகள் மூடப்பட்டன. சுமார் 2000-த்திற்கு மேற்பட்ட மக்கள் நான்கு நான்கு பேராக அணிவகுத்துக் கருப்புக் கொடிகளைக் கையிலேந்தி ஊர்வல மாகச் சென்றனர். கடையடைப்பு ஆர்ப்பாட்டங்களை யும், மறுநாள் தாசில்தார் அலுவலகத்தின் முன்பு நடைபெற்ற மறியலையும் மேற்பார்வையிடத் தலைவர் ம.பொ.சி. அவர்கள் 9-ஆம் தேதி காலையில் திருத்தணிகை வந்துவிட்டார்.

அன்று மாலை வடக்கெல்லைப் பாதுகாப்புக்குழுச் செயலாளர் என். சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசிய ம.பொ.சி. “சித்தூர் தமிழ் மக்கள் சாத்வீக முறையில் ஆந்திர மக்களை விரோதிக்காத வகையில் தங்கள் போராட்டத்தை நடத்தவேண்டுமென்று” கூறினார். (மேற்கண்ட நூல் பக். 64)

10.04.1953 அன்று திரு. கே. விநாயகம் தலைமையில் மறியல் நடைபெற்றது. திரு. ம.பொ.சி. அவர்கள் மறியல் களத்திலிருந்து நடவடிக்கைகளைக் கவனித்து வந்தார். (மேற்கண்ட நூல் பக். 65) ம.பொ.சி. மறியலில் கலந்து கொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இம்மறியல் தொடர்ந்து ஏப்ரல் 25-ஆம் தேதிவரை நடைபெற்றது. கே. விநாயகம் (சட்டமன்ற உறுப்பினர்) திருத்தணிகையிலே தங்கி மறியலைப் பொறுப்பேற்று நடத்தி வந்தார். ம.பொ.சி. அடிக்கடி திருத்தணிக்கு வந்து நிலைமையைக் கவனித்தார். (மேற்கண்ட நூல் பக். 66)

1952-ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலின் போது இருந்த நிலை இப்போது முற்றிலும் மாறிவிட்டது. தமிழர் அனைவரும் இப்போது ஒரே நிலையில் ஒன்றுபட்டனர். இப்பெருமை திரு. கே. விநாயகம் அவர்களையே சாரும். (மேற்கண்ட நூல் பக். 68)

திருத்தணி பஞ்சாயத்துத் தேர்தலை ஒட்டி நிறுத்தப்பட்ட வடக்கெல்லைப்போர் மீண்டும் மே 12 முதல் நடத்த முடிவெடுக்கப்பட்டது. மேற்படி போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும் பொறுப்பு தளபதி கே. விநாயகம் M.L.A அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (மேற்கண்ட நூல் பக். 72)

ம.பொ.சி. போராட்டத்தைப் பார்வையிட காரில் திருத்தணிகை வந்தார். தணிகையில் அரைமணி நேரம் தங்கியிருந்து விட்டு உடனே, புத்தூர் சென்று, அங்கு நடைபெற்ற மறியலைப் பார்வையிட்டார். வெயில் கடுமையாக இருந்ததோடு அனல் காற்றும் வீசியதால் சித்தூர் செல்லும் முயற்சியைக் கைவிட்டுப் பிற்பகல் சென்னைக்குத் திரும்பினார். (பக். 74)

மே 14-ஆம் தேதி கே. விநாயகம் தலைமையில் திருத்தணியில் நீதிமன்ற மறியல் செய்யச் சென்றனர். இரும்புத் தொப்பிக் காவல் துறையினர் ஏராளமானோர் குவிக்கப்பட்டி ருந்தனர். அவர்களைத் தள்ளிவிட்டு கே. விநயாகம் உள்ளே சென்று நீதிபதியின் முன் “சித்தூர், தமிழர் பகுதிகளுக்கு நீதி கிடைக்கும் வரை நீதி மன்றத்தை நடத்தக் கூடாது” என்று தெரிவித்தார். போலீசார் விநாயகத்தை குண்டுக் கட்டாக வெளியே தூக்கி வந்தனர். விநாயகத்திற்குக் காலில் அடிப்பட்டது. அன்று நடைபெற்ற லத்தி சார்ஜில் சம்பந்தம் என்ற தொண்டருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. (இவர் அப்பகுதி தி.மு.க. செயலாளராவார்)

மே 18-ஆம் தேதி புத்தூரில் கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. ஆந்திரர்கள் கூட்டம் நடத்தவிடாமல் தகராறு செய்தனர். புத்தூர் மாவட்டக் காவல்துறை சூப்பிரண்டென்ட் ஒரு கன்னடர். அவர்தான் தமிழர்களைப் பத்திரமாகக் காவல் துறை வண்டியில் கூட்டம் நடத்தச் சென்றவர்களைக் காப்பாற்றி ஏற்றி அனுப்பினார். (மேற்கண்ட நூல் பக். 82)

அன்றைய முதல்வர் இராசாசி இக்கிளர்ச்சியை நிறுத்த விரும்பி வேண்டுகோள் விடுத்தார். ம.பொ.சி.யையும் நேரில் அழைத்து வடக்கெல்லைக் கிளர்ச்சி நீடிக்குமானால் அது இனச்சண்டையில் முடிந்துவிடும் என்று கூறினார்.

22.05.1953 அன்று வடக்கெல்லைப் பாதுகாப்புக்குழுக் கூடிப் போராட்டத்தைச் சென்னையில் நடத்த முடிவு செய்தது. (மேற்கண்ட நூல். பக். 83)

1953 சூன் 20-ஆம் தேதி 1000 தொண்டர்கள் திருத்தணியில் பம்பாய் (மும்பை) எக்ஸ்பிரஸ் இரயிலைச் செல்ல விடாமல் தடுத்துத் தண்டவாளத்தில் அமர்ந்து விட்டனர். அவர்கள் முன்னெச்சரிக்கையாகத் தந்திக் கம்பிகளையும் அறுத்து விட்டிருந்தனர். இந்தச்செய்தி இந்து நிருபர் தொலைப்பேசியில் கூறியபொழுதுதான் ம.பொ.சிக்கே தெரியும். (ம.பொ.சி. எனது போராட்டம் பக்.654). ஆக ம.பொ.சி. இராசாசிக்குக் கட்டுப்பட்டுப் போராட்டத்தைத் தொடராமல் இருக்கிறார். இவரை நம்பக்கூடாது என்பதாலேயே வடக்கெல்லைப் போராட்டக் குழுவினர் ம.பொ.சிக்குத் தெரிவிக்காமலேயே இரயில் நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருத்தணி சென்ற ம.பொ.சி., இரயில் மறியல் செய்த தொண்டர்களைப் பார்த்துக் கடுமையான குரலில் “இன்னும் வேறென்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்?” என்று கேட்டார். (மேற்கண்ட நூல் பக். 90)

ம.பொ.சி.க்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு பக்கம் தன் குருநாதர் இராசாசி போராட்டம் நடத்தக் கூடாது என்கிறார்; மறுபக்கம் தொண்டர்கள் போராட்டம் நடத்தியே தீரவேண்டும் என்று துடிப்போடு இருந்தனர். வடக்கெல்லைப் போராட்டக்குழு எங்கே தம் கையை விட்டு நழுவிப் போய்விடுமோ என்ற அச்சத்தில், மீண்டும் அடுத்தநாள் இரயில் நிறுத்தப் போராட் டத்தை அவரே நடத்தச் செய்தார். என்.ஏ. ரஷீத் (இவர் தி.மு.க.வைச் சேர்ந்தவர்) உட்பட ஒன்பது பேர் அரக்கோணம் சென்று ஒருவர் மாற்றி ஒருவராகப் புத்தூர் செல்வதற்குள் 9 முறை சங்கிலியைப் பிடித்து இழுத்து, இரயில் வண்டியை ஆங்காங்கே நின்று செல்லுமாறு செய்தனர். மறுநாள் நீதிமன்றத்தில் இவர்களுக்கு 15 நாள் சிறைத் தண்டனை கொடுக்கப்பட்டது.

**அப்போது பிரதமராயிருந்த நேரு இரயிலை நிறுத்திப் போராட்டம் செய்பவர்கள் காட்டுமிராண்டிகள். இரயில் நிறுத்தம் சிறுபிள்ளைத்தனமானது. குழந்தைத்தனமானது. பைத்தியக் காரத்தனமானது என்று கண்டித்தார். [இச்செய்தி ம.பொ.சி. நூலிலோ, நா. சுப்பிரமணியம் நூலிலோ இடம்பெறவில்லை].**

21.07.1953 அன்று துப்பாக்கிச்சூடு பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது சட்டமன்றத்தில் பலர் கண்டனம் தெரிவித் துள்ளனர். இருவர் கண்டனம் மட்டும் இங்கு பதிவு செய்துள் ளேன்.

தமிழர்களைக் காட்டுமிராண்டிகள், பைத்தியக்காரர்கள் என்று கூறிய நேருவுக்குப் பாடம் புகட்ட வேண்டுமென்று முடிவெடுத்த தி.மு.க.வினர், பத்து நாள்களுக்கு முன்பே அறிவிப்புக் கொடுத்துவிட்டு 15.07.1953 தமிழகம் முழுவதும் அனைத்து இரயிலையும் சங்கிலியைப் பிடித்து இழுத்துப் போராட்டங்கள் நடத்தினர். இச்செய்தியைத் தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர் ஆ. கோவிந்தசாமி சட்டமன்றத்திலேயே பதிவு செய்துள்ளார்.

வடக்கெல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டு இரயில் நிறுத்தம் செய்தவர்களை நேரு கண்டித்ததால் நேருவுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் 15.07.1953 இரயில் நிறுத்தப் போராட்டம் நடைபெறும் என்று அறிவித்தது. அன்று தமிழகத்தில் 600 இடங்களில் இரயில் மறியல் நடைபெற்றது. தூத்துக்குடியிலும் கல்லக்குடி யிலும் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. அன்றே 6 பேர் காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். பலர் கை, கால்கள் இழந்தனர். பலருக்குத் தலையில் பலத்தக் காயம் ஏற்பட்டது. இராசாசி அரசின் இந்த வன்செயலைச் சட்டமன்றத்தில் ஒத்தி வைப்புத் தீர்மானம் மூலம் பலரும் கண்டித்தனர். 21.07.1953 அன்று தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் ஆ. கோவிந்தசாமி தம்முடைய கண்டனத்தைப் பதிவு செய்தார்.

"கனம் சபாநாயகர் அவர்களே, டால்மியாபுரத்திலும், தூத்துக்குடியிலும் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சி சம்பந்தமாக விவாதத்திற்கு வந்திருக்கிற அவசரப் பிரேரே ணையின் மீது பேசுகின்றபோது என் நெஞ்சம் குமுறுகிறது. மக்களின் உயிர்களைத் திரணமாக மதித்து, நாய்களைப் போல மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டுத் தெருவில் இழுத்தெறியப்படும் இந்த ராமராஜ்யத்தில் மனதிற்கு மிகவும் வேதனையைத் தரக்கூடிய இப்படிப்பட்ட செய்கையைத் தவிர வேறு எதையும் நாம் காணமுடியாதுதான். வெள்ளைக்காரர்கள் தான் கொடுமை மிக்கவர்கள் என்று எண்ணினோம். அன்று வெறிப்பிடித்த டயர் தன் துப்பாக்கியில் ரவை இருக்கும் வரையிலும் சுட்டுத் தீர்த்தான் என்ற செய்தியை நாம் கேட்டிருக்கின்றோம். ஆனால் அன்றும் கூட டால்மியாபுரத்தில் சுட்டதைப் போல அறுபத்து நான்கு ரவுண்டுகள் சுட்டான் என்று கிடையாது. இந்தக் காருண்ய, அஹிம்சா மூர்த்திகளோ சாத்வீகத்தில் தமக்கு நம்பிக்கை இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் இந்த ராமராஜ்ய ஆட்சியாளர்களோ நிராயுதபாணியான கூட்டத்தின் மீது 64 ரவுண்டுகள் சுட்டிருக்கிறார்கள். ஈவு இரக்கமுள்ளவர்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்களின் உடல், உள்ளம் எல்லாம் இதைக் கேட்டுச் சிலிர்க்கவில்லையாயென்று நான் கேட்கிறேன்?

"ஜுலை 15-ஆம் தேதி தான் இந்தச் சர்க்காருக்குச் சாவு மணி அடித்த நாள். இந்தச் சர்க்கார் அஸ்தமனம் அடையப் போகிறது என்பதைக் குறிக்கும் வெடிகுண்டு ஒலித்த நாள். இந்த அரசாங்கத்தின் வரலாற்றில் ரத்தக்கறைப் படிந்த நாளாகும். திராவிடரை மிகவும் அவமானப்படுத்தக் கூடிய வகையில் இந்தியப் பிரதம மந்திரி ஸில்லி (Monbemse Chilly) என்றும், நான்சென்ஸ் என்றும் சொல்லி வருவதைக் கண்டிக்கும் முறையில் ரயில் நிறுத்தம் செய்ய தி.மு.க. திட்டமிட்டிருந்தது சர்க்காருக்குத் தெரியும். இரயில் நிறுத்தத் திட்டத்திற்கும், ஆரம்பக் கல்வித் திட்டத்திற்கும் ஏதோ சம்பந்தமிருப்பதாக ஒரு சிலர் குழப்பிக்கொண்டே வருகிறார்கள். அது வேறு, இது வேறு விஷயம் என்பதை நாம் முன்பு சொன்னதைக் கொண்டு மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.

"கடந்த காலமாக தமிழர்கள் பல போராட்டங்களை நடத்திக்கொண்டே வருகிறார்கள். வடநாட்டு மொழி ஆதிக்கம் தென்னாட்டில் இருக்கக்கூடாது என்பதற்காகத் திராவிடர் கழகமும், முன்னேற்றக் கழகமும் ஹிந்தி அழிப்பு இயக்கத்தை நடத்தினார்கள். அது மட்டுமல்ல, ஆந்திர மாகாணம் அமைய வேண்டுமென்பதற்காக சென்னை நகரில் ஸ்ரீ பொட்டி ஸ்ரீராமுலு பட்டினி கிடந்து இறந்தார். அதைத்தொடர்ந்து விஜயவாடாவிலும், மற்ற இடங்களிலும் இரயில் வண்டி நிலையங்களில் சென்று சூறையாடியும், உணவு தானியங்களைச் சேதப்படுத்தியும் ஆந்திரர்கள் கிளர்ச்சி செய்தார்கள். ஆனால் நியாயமான தனது பிரதேசத்தை ஆந்திராவுடன் சேர்க்கக்கூடாது என்பதற்காக, திருத்தணியில் சாத்வீகமான முறையில் தமிழர்கள் போராடிய போதும், இந்தியப் பிரதமர் தமிழர்களின் போராட்டங்களை ஸில்லி என்றும், நான்சென்ஸ் என்றும், சைல்டிஷ் (Childish) என்றும் மட்டமாகப் பேசிக்கொண்டே வருகிறார்கள். மானமுள்ள தமிழர்கள் யாரும் இதைக்கேட்டு ஆத்திரம் அடையாமல் இருக்க மாட்டார்கள். அதன் காரணமாகத்தான் அறிஞர் அண்ணாதுரை அவர்களும் நேருவுக்குப் பாடம் கற்பிக்க நாடெங்கும் ஜுலை 15-ஆம் தேதி இரயில் நிறுத்தம் செய்வோம். அது சாத்வீகமான மறியலாக இருக்குமென்று அறிவித்தார். அவர் வேண்டு

கோளின்படி தமிழ் நாடெங்கும் 600 இடங்களுக்கு மேல் மறியல் நடந்திருக்கிறது. ஆனால் டால்மியாபுரத்திலும், தூத்துக்குடியில் மட்டும் போலீஸார்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

(இந்த நேரத்தில் துணை சபாநாயகர் தன்னுடைய இருக்கையில் வந்து அமர்ந்தார்.)

"வட நாட்டிலிருந்து தென்னாட்டிற்குச் சுரண்டுவதற்காக வந்த ஒரு முதலாளியின் பெயரை டால்மியாபுரம் என்று ஒரு தமிழ்நாட்டிலுள்ள இரயில் நிலையத்திற்குக் கொடுத்திருப்பது தமிழர்களையே அவமானப்படுத்துவதாக இருக்கிறதென்ற காரணத்திற்காக அந்த இரயில் நிலையத்தின் பெயரைக் கல்லக்குடி என்று மாற்றியமைக்க வேண்டுமென்று கலைஞர் கருணாநிதி தலைமையில் தமிழர்கள் போராடினார்கள். இதில் தவறு என்ன? பெயர் மாற்ற இயக்கத்தை இராசாசி சில்லி என்கிறார். காங்கிரசுக்காரர்கள் வெள்ளையர்களின் பெயர் இருக்கக்கூடாதென்று பல இடங்களில் தமிழ்ப் பெயர்களை ஏற்படுத்தவில்லையா? பாங்க்வெட்டிங் ஹாலிற்கு ஏன் ராசாசி ஹால் என்று பெயரிட்டார்கள்? அது அற்பத்தனமல்லவா? சைனா பஜாருக்கு ஏன் சுபாஷ் சந்திர போஸ் ரோடு என்றும், மதுரா என்பதை ஏன் மதுரை என்றும் பெயரை மாற்றி வைத்தார்கள் என்று கேட்கிறேன். இவைகளெல்லாம் சில்லியல்லவா? இதேபோல் டால்மியாபுரம் என்பதைக் கல்லக்குடி என்று மாற்றவேண்டுமென்பது தமிழர்களின் அவமானம் துடைக்கும் உரிமைப் போராட்டம், உரிமைக்கிளர்ச்சி, இந்த உரிமைக் கிளர்ச்சியை நேரு அவர்கள் அவமானப்படுத்திக்கொண்டே வருவதைக் கண்டிக்கும் முறையில் தான் சிதம்பரம் மாநாட்டில் அதாவது ஜுலை நான்கு ஐந்தில் நடந்த கூட்டங்களில் ஒரு தீர்மானம் போட்டு நிறைவேற்றினார்கள். ஜனங்கள் அமைதியாகப் பகலில் இரயில் நிறுத்தம் செய்ய வேண்டுமென அறிவிப்புகள் செய்திருந்தார்கள். அதுவும் 15-ஆம் தேதி ஒரேநாள் தான். கனம் இராசாசி சர்க்கார் என்ன செய்திருக்க வேண்டும்? தன்மானமிக்க தமிழர்கள் ஒன்று சேர்ந்து போராடப்போகிறார்கள் என்றவுடனேயே நேருவுக்குக் கடிதம் எழுதி அவர் சொன்ன வார்த்தைகளை வாபஸ் வாங்கும்படி செய்திருக்கவேண்டும். ஆனால் முதல் மந்திரி அப்படிப்பட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. காமராஜுக்கும், ராஜாஜிக்கும் மனஸ்தாபம் வந்தபோது காந்தி 'கிளிக்', என்ற வார்த்தையை உபயோகித்ததைக் கண்டிக்க எவ்வளவுக் கூட்டங்கள் நடந்தது என்பதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அந்தப் பெருந்தன்மை மிக்க உலகத் தலைவர் அந்த வார்த்தையை உடனே வாபஸ் வாங்கிக்கொண்டார். ஆனால் பெருந்தன்மையில்லாத காரணத்தால் அடிக்கடி தன்னிச்சைப்படி தமிழர்களை இழிவு படுத்தும் வார்த்தைகளை உபயோகிப்பது, தமிழர்கள் வருந்தும் போது அதை வாபஸ் வாங்காது இறுமாப்போடு நேரு இருக்கிறார். அவரது இழிவுபடுத்தும் போக்கை எதிர்க்கவேண்டிய நிலைமையில் தான் நாம் இருக்கிறோம். இந்தக் கிளர்ச்சியில் சாத்வீக முறையில் போராடி நிராயுதபாணியான திராவிட வீரர்களைச் சுட்டிருக்கிறது இந்த வெறிப்பிடித்த சர்க்கார். சுடுவதற்கு முன் கண்ணீர்ப்புகை உபயோகிக்கப்படவில்லை. இரயில் போகாத வாறு குறுக்கே படுத்திருப்போர்களைப் பலவந்தமாக அப்புறம் தள்ள எந்தவிதமான முயற்சியும் எடுத்துக் கொள்ளாது, உடனடியாக 64 ரவுண்டுகள் சுட்டிருக்கிறது. கண்ணதாசன் கையிழந்து தவிக்கிறார். கடந்த ஒரு வாரமாக என்ன நடக்கும் என்பதைப் பத்திரிக்கை வாயிலாகப் படித்தால் எல்லோருக்கும் தெரியும் என்று சொன்ன கனம் ராஜகோபாலாச்சாரியார் கண்ணீர் புகை ஸ்டாக் வைத்துக்கொள்ள உத்தரவிட வில்லையா? உத்தரவு இட்டிருக்க வேண்டாமா? வெறிபிடித்து 64 ரவுண்டுகளா சுடவேண்டும்? சுட்டது தான் சுட்டார்களே? ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தவர்களின் மேலேயா குறிபார்த்துச் சுடவேண்டும்? கதவுகளைச் சாத்திவிட்டு மேல் பர்த்தில் படுத்திக்கொண்டிருந்த ஒரு பிரயாணி சுடப்பட்டிருக்கிறான். ஒரு சிறுவன் சுடப்பட்டிருக்கிறான் என்னும்போது சர்க்காரின் போலீஸ் அதிகாரிகள் எவ்வளவு வெறி பிடித்து நடந்து கொண்டிருக்கிறாகள் என்பதை நாமே தெரிந்து கொள்ளலாம். தாலியை இழந்த தாய்மார்கள் அலறுகிறார்கள். அந்தத் தாலிகள் இந்த சர்க்காரைக் கேட்கும் குழந்தைகள் அலறுகின்றன. இப்படி சாத்வீகமான முறையில் நடத்தப்பட இருந்த ஒரு கிளர்ச்சியின் மீது அசம்பாவிதமான முன் எச்சரிக்கை எதுவுமின்றித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது மன்னிக்க முடியாத குற்றம் என்பதற்காக கனம் முதல் மந்திரி ராஜகோபாலாச்சாரியின் மேல் நான் குற்றம் சாட்டுகிறேன்.

**(தொடரும்)**

❖

## நீதிக்கட்சி நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் சுயமரியாதைச் சுடரொளிகள் நாள் கருத்தரங்கம்

*'குத்தூசி' குருசாமி - குருவிக்கரம்பை - வேலு சுயமரியாதைப் பேரவை சார்பில் 13.3.2016 ஞாயிறு காலை 10 மணிக்கு, சென்னை-41, திருவான்மியூர், 'இராகமங்களா' என்ற இடத்தில் நீதிக்கட்சி நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் சுயமரியாதைச் சுடரொளிகள் நாள் கருத்தரங்கம் தலைவர் மருத்துவர் அ. சவுந்திரபாண்டியன், (மதுரை) தலைமையில் நடைபெற்றது. நீதிக் கட்சியின் தந்தை சர். பிட்டி. தியாகராயர் படத்தைத் திறந்து வைத்து, "மார்த்தாண்டம் மாலை" ஆசிரியர் எம். பேபி ஜெபக்குமார் உரை யாற்றினார்.*

*திராவிடர் இயக்க விடிவெள்ளி டாக்டர் சி. நடேசனார் படத்தைத் திறந்து வைத்து, புதுக்கோட்டை க. இராசேந்திரன் உரையாற்றினார். தளபதி டி.எம். நாயர் படத்தைத் திறந்து வைத்து வாலாசா வல்லவன் உரையாற்றினார்.*

*சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர் படத்தைத் திறந்து வைத்து, இனமானக் கவிஞர் செ.வை.ர. சிகாமணி உரையாற்றினார். திராவிட இயக்க மூத்த ஆய்வாளர் க. திருநாவுக்கரசு சிறப்புரையாற்றினார்.*

# பெரியார் ஈ.வெ.ரா-நாகம்மை
# கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை நடத்தும்
# "சுயமரியாதை வாழ்வியல் சான்றிதழ்ப் பயிற்சி"

* 1929 முதல் 1949 முடிய 3 நாள்கள், 8 நாள்கள் எனப் பயிற்சி வகுப்பை ஆண்டு தோறும் நடத்தினார்.
* 1964 முதல் 1972 வரையில் ஏதேனும் ஓர் ஊரில் 8 நாள்கள் பெரியார் பயிற்சி அளித்தார்; அவருடன் தங்கி வே. ஆனைமுத்துவும் பயிற்சி அளித்தார்; பயிற்சி பெற்றார்.
* பெரியார் இயக்கத் தொண்டர்கள், ஆண்டுதோறும், இப்போது, ஓரிடத்தில் சில நாள்களுக்குப் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறார்கள்.

## இதற்கிடையே, நாம் செய்வது என்ன?

"பெரியார் ஈ.வெ.ரா. இராமசாமி - நாகம்மை
கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை"
என்ன செய்கிறது என்பதை எல்லாத் தமிழரும் அறிந்திடுங்கள்! ஆதரவு தாருங்கள்!
பயிற்சி பெற்றிடுங்கள்! "சுயமரியாதை வாழ்வியல் சான்றிதழ்ப் பயிற்சி" வகுப்பில்,

## 2015 ஆகத்து முதல் பயிற்றுவிக்கப்படும் பாடங்கள்

* வள்ளுவம், பெரியாரியம் : வே. ஆனைமுத்து
* பௌத்தம் : துரை. கலையரசு
* காந்தியம் : முனைவர் சூ. குழந்தைசாமி
* மார்க்சியம், அம்பேத்கரியம் : க. முகிலன்
* இலெனினியம் : இரா. குபேந்திரன்
* தமிழிலக்கியம், இலக்கணம், மொழிபெயர்ப்பு: முனைவர் க. இராமசாமி
  பிழை திருத்தம் புலவர் தமிழேந்தி
* கணினி அறிமுகம் : முனைவர் ஆ. முத்தமிழ்ச்செல்வன்
  சோ. அண்ணாதுரை

வருகை தரு பேராசிரியர்கள் :
பேராசிரியர் பொற்கோ, பொறிஞர் ஆ. கிருஷ்ணசாமி

**2015 ஆகத்து முதல், ஞாயிறு தோறும்
40 ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படுகிறது!**

**இது, உங்களுக்கான பெரியாரியல் கொள்கைப் பயிற்சி நிறுவனம்!**

**எல்லோரும் இதை வளர்த்தெடுக்க முன் வாருங்கள்!**

**நல்ல அளவில் நன்கொடை தாருங்கள்!**

# புகழ் எங்கே?

தமிழ்நாட்டுக் காவல்துறை இந்தியாவிலேயே மிகச் சிறந்த துறையாக விளங்கியது. ஐ.ஜீ. அருள் அவர்களுக்குப்பின் இந்தப் புகழ் புரையோடி மிகவும் சீர்கேடாக அரசியல்வாதிகளின் அடிமைகளாக இப்பொழுது நிலை பெற்றுள்ளது. குறைந்த சம்பளம் வாங்கியபோது காவல் துறையினர் மிகவும் நன்றாக பணிசெய்தனர். இப்பொழுது நிறைவான சம்பளம், வசதியான குடியிருப்புகள், தரமான பங்கீடு பொருட்கள், கல்வியில் பள்ளிகளில் சேர்க்க முன்னுரிமை பெற்றும் காவலர் பணி சிறக்கவில்லை. மீண்டும் இந்தத் துறை நிமிர்ந்து நிற்க எத்தனை காலம் ஆகும்?

நீதித்துறை என்றால் நடுநிலை தவறாமல் இருந்த தமிழ்நாட்டு நீதித்துறை இப்பொழுது கேவலப்பட்டு, மக்கள் இழுக்கிற்கு ஆளாகியுள்ளது. நீதிபதி என்றால் உயர்ந்த மதிப்பு, கண்டவுடன் வணங்குவது, எதற்கும் ஆசைப்படாமல் இருத்தல் போன்ற நன்மதிப்பைப் பெற்றிருந்தனர். இப்பொழுது அரசியல்வாதிகளின் அடிமைகளாகவும், கைகாட்டும் வேலையைச் செய்யும் ஆட்களாகவும், தமக்குரிய துறை மரியாதையை இழந்தவர்களாகவும் உள்ளவர்கள் எப்பொழுது தங்களின் துறை அதிகாரத்தையும் மரியாதையையும் காப்பாற்றுவார்கள்?

தமிழன் அறிவியல் முன்னோடி என்ற பெயர் முன்பு இருந்த தமிழனுக்கு இருந்தது. இப்பொழுது அறிவியல் மூளையை அயல்நாட்டானுக்குப் பணத்திற்கு விற்றுவிட்டு, இந்திய நாட்டுப் பெருமையைச் சீர்குலைத்துவிட்டனர். இந்திய அரசும் இதற்கு உடந்தையாக இப்பொழுது உள்ளது. இந்தியர் வரிப்பணத்தில் இந்திய அரசுக் கல்வி நிறுவனங்களில் படித்துவிட்டு, வெளிநாட்டுக்குச் சென்று தன்னுடைய அறிவை விற்பனை செய்வதை இந்திய அரசு தொடர்ந்து அனுமதித்துக் கொண்டுள்ளது. இதுபோன்ற அறிஞர்களை இந்திய அரசு இங்கேயே அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து அறிவியல் சாதனைகளைப் பெருக்கலாம். அறிவியல் முன்னோடிகளும் தங்களின் கண்டுபிடிப்புகளையும், படைப்புகளையும் தாய்நாட்டிற்கே பெருமை சேர்க்கப், புகழ்படச் செயல்பட வேண்டும்.

இதேபோல் நதிநீர் இணைப்பால், மக்கள் நலம், நாட்டு வளம் பெருகும். ஆனால் அரசியல்வாதி வளம் பெருக (கெயில்) எரிவாயுக் குழாய் புதைக்கும் திட்டம் அவசரமாக நிறைவேற்ற அரசு செயல்படுகின்றது. இந்த திட்டத்தில் திட்டமிட்ட தொகை கொள்ளையடிக்கலாம். அதனால்தான் உடனடியாக நிறைவேற்றவும், விவசாயத்தை ஒழித்துக் கட்டவும் முடிவு செய்துள்ளது. இதுபோன்ற மக்கள் நலம், காப்பாற்றாத அரசியல்வாதிகள் தேவையா? இந்த அரசியல்வாதிகள் புகழ் எந்த நிலையில் உயரப் போகுது? சிந்தியுங்கள்!

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ஏப்ரல்-2016

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | கரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்பென்னத்தூர் | 1000/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 300/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **வீ. இராசாப்பிள்ளை** | சிதம்பரம் | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| சென்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **இளவரசன்** தமிழ்க்களம் | அரியலூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - ஏப்ரல் - 2016

| | | |
|---|---|---|
| முனைவர் **ஆ. முத்தமிழ்ச்செல்வன்** | சென்னக்குணம் | .... 500/- |
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **க. குப்புசாமி** | சோளிங்கபுரம் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **கு.சூரியன்** | பெங்களூர் | .... 100/- |
| **கு.பாரி** | சோளிங்கபுரம் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர்,** சென்னை-53. ☎ : 044-2625 2119